


# கலைஞரும் பாவேந்தரும்



முனைவர் மு.தமிழ்க்குடிமகன்

# கலைஞரும் பாவேந்தரும்

## தலைவர் கலைஞர் 72ஆம் அகவை
## பிறந்த நாள் வெளியீடு


*முனைவர்*

**மு. தமிழ்க்குடிமகன்**, எம்.ஏ., பி.எச்.டி.,

(தமிழக சட்டப்பேரவை முன்னாள் தலைவர்)



*வெளியீடு :*

*அறிவொளி பதிப்பகம்*

142, மண்மலைச்சாமி தெரு,
தல்லாகுளம்,
மதுரை - 625 002,
தொ.பே. 44148

68, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை-600 014.
தொ.பே. 8241009

முதற்பதிப்பு : 3.6.1995

உரிமை : த. வெற்றிச் செல்வி

நூல் உருவாக்கம் : வா.மு.சே. திருவள்ளுவர்

விலை உருபா: 35.00

அச்சும் அமைப்பும்

சேதுமதி அச்சகம்

சென்னை - 600 111.

✆ 4871375

## தி.மு.கழகப் பொதுச் செயலாளர்
## இனமான ஏந்தல்

# பேராசிரியர் அவர்களின்

# அணிந்துரை

முன்னாள் சட்டப் பேரவைத் தலைவரும் எனது கெழுதகை நண்பருமான முனைவர் தமிழ்க் குடிமகன் அவர்கள் பெயருக்கேற்ப நாளும் தமிழ்க் குடிமக்கள் தம்மை உணரும்வண்ணம் நாடெங்கும் சுற்றிவந்து நற்றமிழ் ஆர்வமும் பற்றும் வளர்த்திடும் பணியாற்றி வருபவர். அவரது மாணவப் பருவந் தொட்டுப் பேரறிஞர் அண்ணாவின் பேச்சிலும் எழுத்திலும் ஈடுபாடு கொண்டவராகவும், முத்தமிழ் அறிஞரும் எழுத்துலக வித்தகருமான கலைஞர் மு.க. அவர்களின் எழுத்திலும் வழிகாட்டுதலிலும் ஆர்வங் கொண்டவராகவும் ஆகி, தமிழுக்கும் அதன் உரிமைக்கும் ஊறு விளைவிக்கும் பிற மொழி ஆதிக்கப் போக்கினை எதிர்த்திடும் உணர்வு மேம்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு அதன் கொள்கைகளைப் பரப்புவதில் முனைந்து செயற்பட்டவர்.

படித்துப் பட்டம் பெற்று, முனைவர் தகுதியும் பெற்றவராய், ஒரு கல்லூரி முதல்வராகவும் சிறப்புடன் விளங்கி மாணவர்களிடத்தில் முற்போக்குச் சிந்தனையும் கொள்கைகளும் இடம்பெற வழி செய்தவர். பின்னர் சட்டப் பேரவை உறுப்பினராகிப் பேரவைத் தலைவருமானார். பலரது பாராட்டையும் பெறும் வண்ணம் பேரவையைத் திறம்பட நடத்திய பெருமை அவருக்குண்டு.

மறைமலை அடிகளாரால் உருவாக்கப்பட்டு, மொழி ஞாயிறு பாவாணர் அவர்களால் வளர்க்கப்பட்ட தனித்தமிழ் இயக்கத்திலும் அதன் உயர் நோக்கத்திலும் பற்றுடையவராகி

அதை வளர்த்தெடுப்பதில், தமிழ் ஆர்வலர் பலருடன் இணைந்து நின்று செயற்பட்டவர்.

திராவிட இயக்க உணர்வுகளுடன் வளர்ந்த தமிழ்க் குடிமகனுக்கு, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பாவேந் தரும் திராவிட இயக்கத்தின் தலையான, தலை சிறந்த, தலைதாழாக் கவிஞருமான புரட்சிக் கவிஞரின் தேனடைக் கவிதைகளிலும், பொறிபரக்கும் கொள்கைகளிலும் பேரார் வம் பிறந்தது வியப்பன்று. பாவேந்தரிடம் பிறந்த பற்று நாளும் வளர்ந்து, அவர்தன் கவிதைச் சிறப்பை விளக்குவதி லும், பெரும் புகழை ஏத்துவதிலும் ஈடுபாடு மிக்கவரானார்.

அவரால் பெரிதும் மதிக்கப்படுபவரும் முத்தமிழையும் வடித்தெடுத்து வண்ணஞ் சேர்த்து ஓவியமாக்கி, கற்றோர் களிப் புறவும் மற்றோர் கேட்டு மகிழவும் செய்யவல்லவருமான கலைஞர் அவர்கள் பாவேந்தரிடம் கொண்டிருந்த ஆர்வம், தொடர்பு, உறவு, பற்று ஆகியவற்றை எல்லோரும் அறியுமாறு செய்திடுதற்கு விழைந்துள்ளார். அதன் விளைவே இந்த நூல். காலத்தை வென்ற கவிஞர் பாவேந்தர் எனில், காலத் தின் போக்கைக் காட்டும் கண்ணாடியாக, நிழற்படமாக, கருத்துக்களைத் தெளிவுபடுத்துபவர் கலைஞர்.

கற்பனை உலகில் உண்மையை ஒளிர வைப்பவர் புரட்சிக் கவிஞர் எனில், உண்மை உலகில் கற்பனையை எழில் காட்டச் செய்பவர் முத்தமிழ் வித்தகர் கலைஞர்.

'புதியதோர் உலகம் செய்வோம் அதற்குப் பேசும் சுய மரியாதை உலகெனப் பெயர் வைப்போம்' என்று முழங்கியவர் கவிஞர் எனில், வாழ்கின்ற தமிழ் மக்களின் சுயமரியாதையைக் காக்கும் வழிகாட்டவும், அதனை அரசாட்சியின் மூலம் நடை முறைப் படுத்தவும் முனைந்தவர் கலைஞர்.

புரட்சி எண்ணங்களின் ஊற்று கவிஞர் எனில், புதுமைத் திட்டங்களின் கருவூலம் கலைஞர்.

கவிஞர் படைத்தளித்த பைந்தமிழ் விருந்து குடும்ப விளக்கு.

கலைஞர் படைத்தளித்த செந்தமிழ் விருந்து குறளோவியம்.

கவிஞர் இயற்றித்தந்த இலக்கிய விருந்து அழகின் சிரிப்பு.

கலைஞர் இயற்றித்தந்த இலக்கிய விருந்து 'சங்கத் தமிழ்'

கவிஞர் – பாண்டியன் பரிசு வழங்கினார்.

கலைஞர் – தென்பாண்டிச் சிங்கம் வழங்கினார்.

கவிஞர் 'தமிழியக்கம்' வழங்கினார்.

கலைஞர் தமிழியக்கம் நடத்தினார்.

கவிஞர் – புரட்சிக் கவிதைகளைத் தீட்டினார்.

கலைஞர் உடன் பிறப்புக்கு மடல் தீட்டினார்.

கவிஞர் இசையமுதம் பொழிந்தார்.

கலைஞர் – நெஞ்சுக்கு நீதி வரைந்தார்,

ஒரு வகையில் தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் மனிதனின் சிந்தனையில் மாற்றங் காணவும், வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவும் ஒருவருக்கு ஒருவர் துணையாக, ஆனால் வேறுபட்ட விளக்கங்களைத் தரும் முறையில் நடை போட்டதைப் போன்றே,

கவிதை மரபிலும், கலைத்துறையிலும் ஒரே நோக்குடையவர்களான கவிஞரும் – கலைஞரும் அவரவருக்கே உரிய வகையான மனவளம் காட்டி, எழில் நலம் சேர்த்துத் தமிழ் வளம் பெருக்கும் தொண்டினைச் செய்தவர் ஆவர்.

கவிஞர் மரபில் இன்று பாவேந்தர் பரம்பரையினர் ஒளிர்வதைப் போன்றே, உரை நடையிலும் உரையாடல் தீட்டுவதிலும், திரைப்படக் கலைத்தொண்டிலும் கலைஞர் வழி என்று சொல்லிப் பெருமைப்படுவோர் பலரைக் கண்டு வருகிறோம்.

புகழ்பெற்ற படைப்பிலக்கியக் கலைவித்தகராகவும், விளங்கும் கலைஞர் அவர்கள், அறிஞர் அண்ணா வழியைப் பின்பற்றி, பாவேந்தரைப் பெருமைப்படுத்துவதிலும், அவருக்குப் புகழ் சேர்ப்பதிலும் காட்டி வந்துள்ள ஆர்வமும், நிறைவேற்றியுள்ள கடமைகளும், இன்றுங் கூடத் தமிழ்ப் பற்றுடைய புலவர்களிடமும் கவிஞர்களிடமும் வளர வேண்டி யதொரு 'பண்பாடு' ஆக உள்ளது என்பதும் எம்போல் வாரால் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகவே உள்ளது.

எனவேதான் 'கலைஞரும் பாவேந்தரும்' என்னும் தலைப்பில், கலைஞரின் மாணவர் மன்றத்துக்குப் புரட்சிக் கவிஞர் அனுப்பி வைத்த வாழ்த்து, கவிஞருடன் கலைஞர் கொண்ட தொடர்பு, கலைஞரிடம் கவிஞர் வைத்திருந்த நம்பிக்கை, புதுவையில் கவிஞருடன் இருந்த நிலையில் கலைஞருக்கு இழைக்கப்பட்ட துன்பம், பாவேந்தரின் எழுத்தை எல்லாம் அரசுரிமை ஆக்கிய கலைஞரின் கடமை உணர்வு - முதலான நிகழ்ச்சிகள் பலவும், கலைஞர் அவ் வப்போது நிகழ்த்திய உரைகளைக் கொண்டே விவரிக்கப் படும் முறையில் இந்த ஏடு வடிக்கப்பட்டுள்ளது. கலைஞரின் தொண்டும் குறிக்கோளும், கவிஞரின் பேரும் புகழும் இத னால் விளக்கம் பெறுகின்றன. இந்த முயற்சிக்கு என் பாராட்டு உரியதாகும்.

அன்பன்

**க. அன்பழகன்**

பேராசிரியர், கவிக்கோ

# அப்துல் ரகுமான் அவர்களின் அணிந்துரை

## வியர்வையில் மலர்ந்த மலர்

குமுறி வெடித்துச் சிதறிய
கோபத் தமிழ் எரிமலை பாவேந்தர்.

அதன் நெருப்பு நதியில் குளித்துத்
தம்மைப் புடம் போட்டுக்கொண்டு
பொன்னாக ஒளிர்ந்தவர் கலைஞர்.

கலைஞர்
பாவேந்தருடைய சூறாவளிச் சொற்களின்
கதை வடிவம்.

பாவேந்தருடைய வரலாற்றில்
கலைஞருக்கு ஓர் இடம் உண்டு.

அந்த இடம்
யாராலும் மறைக்க முடியாத இடம்.

ஆனால் நாவலர் 'புரட்சிக் கவிஞர்
பாரதிதாசன்' என்ற தம்முடைய நூலில்
கலைஞரை மறைக்கிற அழுக்கு வேலையில்
ஈடுபட்டிருக்கிறார்.

தம் வீட்டுச் சாளரக் கதவை அடைத்து
விட்டால் சூரியனை மறைத்து விடலாம்
என்று அவர் நினைக்கிறார்.

நாவலரின் இந்த இருட்டடிப்பிலும்
ஒரு நன்மை விளைந்திருக்கிறது.

இருள் படையெடுக்கும் போது
உலகம் விளக்குகளை ஏற்றுகிறது.

நாவலரின் இருட்டடிப்பின் காரணத்தால்
தமிழ்க்குடிமகன் 'கலைஞரும் பாவேந்தரும்'
என்ற விளக்கை ஏற்றி வைத்திருக்கிறார்.

இந்த விளக்கு
இருட்டை விலக்கும் விளக்கு மட்டுமல்ல
கலைஞருக்கும் பாவேந்தருக்கும் இடையில்
இருந்த உணர்ச்சித் தொடர்பை
ஊரறிய விளக்கும் விளக்காகவும்
இருக்கிறது.

பாவேந்தர் பாடல்களால் கலைஞர்
உணர்ச்சி பெற்றது-

தம்முடைய திரைப்படங்களில் பாவேந்தர்
பாடல்களுக்கு அரியாசனம் இட்டு அமர
வைத்தது-

1945இல் புதுவையில் நடந்த திராவிடர்
கழக மாநாட்டின் போது பொதுவுடைமை,
காங்கிரசுக் குண்டர்களால் பாவேந்தரோடு
சேர்ந்து தாக்கப்பட்டது-

நாவினாலும் பேனாவினாலும் நாடெங்கும்
புரட்சிக் கவிஞரின் வெளிச்ச விதைகளைத்
தூவியது-

பாவேந்தர் நூற்றாண்டு விழாவைச்
சிறப்பாகக் கொண்டாடியது-

அதில் பலருக்குப் 'பாவேந்தர் விருது'
வழங்கியது-

திருச்சிப் பாரதிதாசன் பல்கலைக் கழக

வளாகத்தில் பாவேந்தர் சிலை திறந்து
வைத்தது-

அனைத்திந்திய வானொலியில் பாவேந்தர்
பெயர் இருட்டடிப்புச் செய்யப்பட்ட போது
பொங்கி எழுந்தது-

பாவேந்தரின் கனவுகளை நனவாக்கும்
வகையில் ஆணை பிறப்பித்தது-

அனைத்துக்கும் மகுடமாக,
பொதுவுடைமைத் தத்துவத்தைப்
புதுத் தமிழில் பாடிய அந்தப்
புரட்சிக் கவிஞரின் சிந்தனைச் செல்வங்களை
நாட்டு மக்களுக்கு உரிமையாகப்
பொதுவுடைமை ஆக்கியது-
என்று கலைஞர் பாவேந்தர் பால்
கொண்டிருந்த அளவிலா அன்பை,
பாவேந்தர் புகழ் பரப்பக் கலைஞர்
ஆற்றிய பணிகளைப் பட்டியலிட்டு
விளக்கியிருக்கிறார் தமிழ்க்குடிமகன்.

இந்த நூல் தமிழக்குடிமகனின்
வியர்வையில் மலர்ந்திருக்கிறது.

வண்டுகளை வா என்றழைக்கும்
மணமும் தேனும் இந்த மலரில்
நிறைந்திருக்கின்றன.

வரலாற்றை வெளிச்சப்படுத்தியதற்காகத்
தமிழ்க்குடிமகனின் வியர்வைக்குத்
தமிழுலகம் நன்றி சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறது.

சென்னை — அப்துல் ரகுமான்
3.6.95

# நூலாசிரியன் முன்னுரை

ஒரு நூலுக்கு உரை எழுதுகிற ஒருவர் நூலாசிரியருக்கு இணையான சில நேரங்களில் நூலாசிரியருக்கு மேலான பெயரைப் பெற்று விடுவதுண்டு. சேக்சுபியருக்குக் கிடைத்த புகழ் அவரது படைப்புகளைத் திறனாய்வு செய்த ஏ.சி. பிராட்லிக்கும் உண்டு. அடியார்க்கு நல்லார் உரையெழுதி யிராவிட்டால் இளங்கோவின் 'அரங்கேற்று காதை'யில் இவ் வளவு நுட்பம் இருப்பது நமக்கு விளங்கியிருக்காது. குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் சில குற்றங்கட்கு ஆட்பட்டுவிட் டாலும் சிறந்த உரையாசிரியர்தானே! குறளோவியம் தீட்டிய கலைஞர், சங்கத் தமிழ் வரைந்த கலைஞர் குறளையும் சங்க இலக்கியத்தையும் நடையழகில் வாழவைத்து விடவில்லையா! நூலுக்கு உரையெழுதுபவர் எவராயினும் நூலாசிரியர் கருத்தை உணர்ந்துதான் எழுதவேண்டும் என்று வரும்போது, வரலாறு எழுதுகிற ஒருவர் எவ்வளவு பொறுப்போடு எழுத வேண்டும்? வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளபடி சொல்ல வேண்டும். இராசராசசோழன் மீண்டும் கொணர்ந்த வரலாற்றுப் பொற்காலத்தை வாழ்த்தும் நான், வடமொழி ஓதுவார் களை வருவித்துக் கோயிலுக்குள் விட்டுக் கொடுமை செய்த நிகழ்ச்சியை வெறுக்கத்தான் செய்கிறேன். ஆனாலும் இரண்டையும் சொல்ல வேண்டியது தானே வரலாறு எழுதுவோன் கடமை!

'Anna also spoke' என்று செய்தி வெளியிட்டவர்கள் அண்ணாவின் பேச்சை வரிவிடாமல் போடவேண்டிய தேவை யும் வந்ததே! காலமானார் (obituary) எனும் பகுதியில் யாரும் கண்டு கொள்ளாத இடத்தில் பாவேந்தர் மறைவு குறித்து 'இந்து' இதழ் செய்தி வெளியிட்டது. அதே 'இந்து' இதழில் முன்னாள் துணைவேந்தர் ஒருவர் பாவேந்தரைப் பற்றி எழுதிய கட்டுரையையும் இப்போது பார்க்கிறோம். சிலர் உணர்ந்து கொண்டபின் 'ஓகோ!' என்று பாராட்டி, அதனால் அவர்கள் செய்த பழைய குளறுபடியை மாற்றி விடுகிறார்கள். கல்வெட்டுகளோ, முறையான வரலாற்றுக் குறிப்புகளோ, இல்லாத காலத்தில் கைக்குக் கிடைத்த வரலாற்றுச் சான் றுகளை வைத்துக் கொண்டு பலர் பலநாட்டு வரலாறுகளை எழுதியிருக்கிறார்கள். அதில் விடுபட்டவை உண்டு. எனினும்

அவர்களை மன்னித்து விடலாம். ஆயிரமாண்டுகட்கு முற்பிருந்த வரலாற்றை எழுதுவதில் இந்த நூற்றாண்டு மனிதனுக்கு இடர்ப்பாடு இருக்கத்தானே செய்யும்! ஆனால் இருபதாம் நூற்றாண்டில் வரலாறு எழுதும் ஒருவர் தாம் வாழும் காலத்திலேயே வரலாற்றில் இருட்டடிப்புச் செய்தால் மன்னிக்க முடியுமா?

'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' பற்றிய வரலாற்றை எழுதிய நாவலர் இரா. நெடுஞ்செழியன்தான் இத்தகு செயலுக்கு உரியவர்.

தலைவர் கலைஞர் அவர்களை ஒருநாள் மாலையில் சந்தித்தபோது நாவலர் எழுதிய நூலை என்னிடம் நீட்டினார். எப்படியெல்லாம் நாவலர் தம்மை மறைக்க முயன்றிருக்கிறார் என்று சுட்டிக் காட்டினார். அப்போதே 'அவர் எழுதினால் எழுதிவிட்டுப் போகட்டும்; நாம் உண்மையான வரலாற்றை எழுதுவோம்' என்றேன். அதன் விளைவுதான் இந்த நூல். தலைவர் கலைஞருடன் நெருங்கிப் பழகும் என் போன்றோர்க்கே நூலை எழுதத் தொடங்கிய பின்னர்தான் புதுப்புது நிகழ்ச்சிகள் தெரிந்தன. கோவை முத்தமிழ் விழா போன்றவை அனைவர்க்கும் புதியவை.

16.11.1942இல் பாவேந்தர் எழுதிய மடலிலிருந்து தொடங்கி 30.1.1990இல் முதலமைச்சராகிய கலைஞர் பிறப்பித்த அரசாணை வரை இதில் அலசியிருக்கிறோம். நூலை முடித்ததும் நிகழ்ச்சிப் பிழை (Factual Error) எதுவும் நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காகத் தலைவர் கலைஞர் அவர்களே நூலை முழுமையாகப் பார்வையிட்டு, எனக்குச் சில குறிப்புகளைச் சொல்லி அதில் இணைக்கச்செய்து விட்டார். எனவே நூல் யாரைப் பற்றிய வரலாறாக அமைகிறதோ அவரின் ஒப்புதலோடு கூடியதாகிவிட்டது. (Authentic Record)

கலைஞரை நன்குணர்ந்த, கவியரசாகவும் விளங்கும் ஒருவர் இதற்கு அணிந்துரை வழங்க வேண்டுமென்று கருதிக் கவிக்கோ அப்துல்ரகுமான் அவர்களிடம் நூற்படியைக் கொடுத்தேன் நூலின் செப்பத்திற்கும் வழிகாட்டி, தனக்கேயுரிய நடையில் சிறந்த அணிந்துரையை வழங்கி விட்டார். அவர்க்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

என் நூலுக்குத் தலைவர் கலைஞர்தான் அணிந்துரை எழுதவேண்டும். என் அன்புத் தொந்தரவு தாங்கமுடியாமல் என்னை வம்புக்கிழுத்தாவது ஓர் அணிந்துரை வழங்கி விடுவார். ஆனால் இது கலைஞர் பற்றிய நூலாயிற்றே! எனவே

பேராசிரியரிடம் அணிந்துரைக்காகத் தந்தேன். ஐந்து நாள் ஆகும் என்றார். சரியென்றேன். 23.5.95 அன்று அவரிடம் கொடுத்தேன். ஆனால் அடுத்தநாள் தம்பி அழகிரி மகள் திருமணத்துக்குத் தலைமை தாங்க வந்த பேராசிரியர் அணிந்துரையைக் கையில் கொடுத்ததும் நான் அதிர்ந்து போனேன்! 148 பக்கங்களையும் ஒரே நாளில் படித்து விட்டு அணிந்துரையும் வழங்கி அதைக் கையோடு எடுத்துக் கொண்டுவந்த அந்த 75 அகவை இளைஞரின் கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டேன். கலைஞரையும் கவிஞரையும் ஒப்பிட்டு அவர் எழுதிய வரிகள்! அடடா! என்ன அருமை! அது மட்டுமல்ல நூலில் உள்ள பிழைகளையும் ஓர் ஆசிரியராக இருந்து திருத்திக் கொடுத்து விட்டார்! அவர்க்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை!

நூலில் தலைவர் கலைஞர் பல நேர்வுகளில் பாவேந்தர் பற்றி எழுதிய, பேசிய செய்திகளை அப்படியே வெளியிட வேண்டியிருந்ததால், சில பாடல் வரிகள் திரும்பத் திரும்ப இடம் பெற்றிருக்கும். பேச்சினை அப்படியே வெளியிட்டிருப்பதால் கலைஞர் எழுத்தில் உள்ள வாக்கிய ஒழுங்கு பேச்சு நடையாகவே இருக்கும்.

எனக்கிருக்கும் மகிழ்ச்சியெல்லாம் திராவிட இனத்தின் வரலாற்றில் பங்கும், அதன் சாதனைகளில் உரிமையும், அந்த உணர்வில் தோய்வும், தலைமைத் திறனும் படைத்த ஓர் ஒப்பற்ற தலைவரின் ஒரு பகுதி வரலாற்றை முழுமையாக வெளிக் கொணர எனக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்ததே என்பதுதான்.

தலைவர் இடுகின்ற கட்டளையை ஏற்பதுதான் தொண்டனுக்கு அழகு. இதில் தலைவரின் கட்டளையில்லை; தலைவரின் ஆதங்கம்தான் இருந்தது. அந்த ஆதங்கம் போக்கவும் தொண்டர்கள் இருக்கிறார்கள் என்பதை மெய்ப்பிப்பது இந்த நூல். வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை எட்டிப் பார்க்க வைத்தவர்கள், கனல் கக்கும் திரைப்பட உரையாடலைப் பேசிப் பெயர் பெற்றும் அதைச் சொல்ல மறுப்பவர்கள், உடன் வாழ்ந்த ஒருவரது வரலாற்றையே இருட்டடிப்புச் செய்பவர்கள் என்று எத்தனை பேர் கிளம்பினாலும் உண்மைகளை ஊருக்குச் சொல்ல - அதையே உரத்துச் சொல்ல ஆயிரமாயிரம் தம்பியர் கலைஞருக்கு உண்டு. அதிலொரு தம்பியின் அன்புக் காணிக்கை இது. நூலை அரும்பாடுபட்டு வெளிக் கொணரும் தம்பி திருவள்ளுவருக்கும் ஓவியர் சமாலுக்கும் அச்சகத்தார்க்கும் நன்றி!

**- மு. தமிழ்க்குடிமகன்**

# கலைஞரும் பாவேந்தரும்

## தாயின் மேல், தந்தை மேல்,
## தமிழின் மேல் ஆணை

அறிஞர் அண்ணாவின் 'தம்பிக்கு' மடல்களைப் போல், தலைவர் கலைஞர் அவர்களின் 'உடன்பிறப்பு' மடல்கள் புகழ் பெற்றவை என்பதை அவற்றைப் படிக்கும் கட்சித் தோழர்கள் மட்டுமின்றி நடுநிலையாளர்களும் எதிர்க்கட்சிக்கா ரர்களும் கூட ஒப்புக் கொள்வார்கள். அந்த வகையில் 05.02.95 அன்று எழுதப்பட்ட மடலின் தலைப்பைத்தான் மேலே தந்துள்ளேன். 03.02.95 அன்று அறிஞர் அண்ணாவின் நினை விடத்துக்குச் சென்றுவிட்டு மீண்டபின் அந்த உணர்வோடு எழுதப்பட்ட மடல் இது.

"அண்ணா......... – புறப்படுவோம்" என்று எழுதி முடிக்கிறார். சூளுரைத்துப் புறப்படுவோம் என்று சூழ்ந்து நிற்கும் உடன் பிறப்புகளை அழைக்கிறார்.

இந்த மடலின் தலைப்பு புரட்சிக் கவிஞர் பாவேந்தரின் கவிதை வரிகளை நெஞ்சில் நிறுத்தி இடப்பட்டதாகும்.

**தாயின் மேல் ஆணை**
**தந்தை மேல் ஆணை**
**தமிழக மேல் ஆணை!**
**தூய என் தமிழ் மேல்**

ஆணையிட்டே நான்
தோழரே உரைக்கின்றேன்,

என்ற பாவேந்தர் பாட்டு 1947-இல் இசையமுது நூலில் வெளியானதாகும். இசையமுதாகத் தமிழர்களின் செவிகளில் இன்னோசை எழுப்பிக் கொண்டிருப்பதாகும். அந்த வரிகள் கலைஞரின் நெஞ்சில் அழுத்தமாக நின்றிருப்பதன் விளைவு தான் அவருடைய மடலுக்குத் தலைப்பாகி விடுகின்றன.

இவ்வாறு எண்ணற்ற இடங்களில் பாவேந்தரின் பாடல் வரிகள் பேச்சிலும் எழுத்திலும் மேற்கோள் காட்டப்படுவதோடு மட்டுமின்றி கலைஞர் பேச்சினிடையே, எழுத்துக்கிடையே இரண்டறக் கலந்து நிற்கும் அளவுக்கு மிகுந்த தாக்கத்தை (Impact) உருவாக்கிவிட்டன. பாவேந்தரின் பாடல்களை ஊன்றிக் கற்றதன் விளைவு, பகுத்தறிவு, இனமானம் சமூகச் சீர்திருத்தம், தமிழ் உணர்ச்சி என்று பாவேந்தர் எதைப் பாடினாலும் அவை கலைஞரின் கொள்கையின் வெளிப் பாடாக அமைந்து விடுவதால் கலைஞர் பாவேந்தரின் மீது அளவற்ற ஈடுபாடு கொள்வதென்பது இயற்கையானது; இயல் பானது.

நெடுநாளாக ஆட்சியிலிருந்த காங்கிரசை ஒரேயடியாக வீழ்த்திவிட்டு அறிஞர் அண்ணா தலைமையில் 06.03.67 அன்று தி.மு.கழக அரசு அமைந்த காலத்தில் கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். அதைப்பற்றி முரசொலி ஏட்டில் ஒரு பெட்டிச்செய்தி வெளி யிடப்பட்டிருந்தது. அது இதுதான் :

"பொங்கு மணி மார்பும் - பொரு தடக்கை வாளும் ஏந்தி அரசுகளை வீழ்த்தி வெற்றி முரசுகளை முழக்கினான் அன்றையத் தமிழன்;

பொங்கும் விழி நீரும் பொறுக்க முடியா வறுமையும் தந்த அரசை வீழ்த்தி ஜனநாயக வெற்றி முரசை முழக்கினான் இன்றையத் தமிழன்.

அந்த வெற்றி முரசின் நாதமாய் – வீர முழக்கத்தின் கீத மாய் ஒலிப்பது :

**"அண்ணா முதலமைச்சர்! அண்ணா முதலமைச்சர்" என்பதுதான்.**
**"தமிழாய்ந்த தமிழ் மகன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் வருதல் வேண்டும்."**

– என்று ஏங்கியவாறு பாடினார் புரட்சிக் கவி பாரதி தாசன்.

அந்தக் கவியின் கனவு நிறைவேறும் நாள் மார்ச் 6–ஆம் தேதி.

இந்தப் புவி மாந்தர் புளகாங்கிதம் அடையும் நாள் மார்ச் 6–ஆம் தேதி.

தமிழன்னை ஆனந்தக் கண்ணீர் விட்டு அண்ணாவின் உச்சி மோந்து முத்தமிட்டு மணி மகுடத்தைச் சூட்டிய நாள் மார்ச் 6–ஆம் தேதி.

அந்நாள் அல்லவோ நமது திருநாள்! நாட்டின் திருநாள்!

தமிழுக்கு இனிப்பான எதிர்காலம் வந்தது தோழர்களே என்று இனிப்பு வழங்கிடுவீர் நாடெங்கும்!

'ஏழைக் குலத்தில் உதித்த ஒரு தமிழன் ஏறுகிறான் அரசுக் கட்டில்! இனி ஏழைக்கு வாழ்வு வந்தது!' என்று கூறி இனிப்புப் பொங்கல் தருவீர் தோழர்களே!"

தமிழறிந்த தமிழ் மகன், தமிழுக்குத் தொண்டு செய்யும் தமிழ் மகன், தமிழ்ப் பற்றுடைய தமிழ் மகன் கூட இதுவரையில் ஆட்சிக்கு வந்திருக்கலாம். ஆனால் தமிழாய்ந்த தமிழ் மகன் தமிழக ஆட்சியில் முதல்வராகப் பொறுப்பேற்றது 06.03.67–இல் தான். பாவேந்தரின் கனவு நனவாகி விட்டதைக் கலைஞர் எவ்வளவு நினைவோடு சுட்டிக் காட்டுகிறார்!

அதனால்தான் கலைஞர்பால் பாவேந்தர் ஏற்படுத்திய தாக்கத்தை எளிதாக உணர முடிகிறது.

❁ ❁ ❁ ❁ ❁

ஈரோடு நகரில் தந்தை பெரியாரின் குடியரசு ஏட்டில் கலைஞர் பணியாற்றிய காலம். 1945இல் லூர்துசாமி எனும் நண்பருக்குக் கலைஞரின் எழுத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அந்நாளில் பலர் அஞ்சலட்டைகளில், மடற்றாள்களில் தமக்குப் பிடித்த கொள்கை •வரிகளை அச்சிட்டுக் கொள்வதுண்டு. நம் கொள்கை எல்லா இடத்திலும் பரவ வேண்டும் என்று அவ்வளவு வேகம் பலருக்கு. நண்பர் லூர்துசாமிக்கும் அப்படித்தான். தமது அஞ்சலட்டையின் முகப்பில் இயக்கக் கொள்கைகளைப் பரப்பிட வேண்டும் என்று அவர் எண்ணினார். கலைஞரை அணுகி, இரண்டே வரிகளில் நறுக்குத் தெறித்தாற்போல் உணர்ச்சித் துடிப்போடு நயமான கவிதைகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர் விருப்பத்தை நிறைவேற்றிடச் சில வரிகளைக் கலைஞர் எழுதிக் கொடுத்தார்.

பெரியாரைப் பற்றி எழுதியது

**பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம்**
**ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்.**

அண்ணாவைப் பற்றி எழுதியது

**துடுக்குமிகக் கொண்டலையும் துணிவுமிக்க**
**ஆரியந்தான்**
**அடுக்குச் சொல் அண்ணாவால் அலறித்தான்**
**சாகுதடா**

பாவேந்தரைப் பற்றி எழுதியது

***புன்னகையா புதுக்கருத்தா புரட்சிக்கனலா***
***எல்லாம் உண்டு எங்கள் கவிஞன் வாழ்க***

ஆக, எப்படிப் பார்த்தாலும் பெரியாரும், அண்ணாவும், புரட்சிக் கவிஞரும்தான் கலைஞர் உள்ளத்தை முழுமையாக ஆட்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அது மட்டுமன்று

1953இல் கலைஞர் ஒரு கவிதை எழுதியிருக்கிறார் பச்சைக்கிளி எனும் தலைப்பில்,. இக்கால கட்டத்தில் தான் "பராசக்தி" வெளி வந்து கலைஞரைப் புகழின் உச்சிக்கு உயர்த்தி வைத்து அழகு பார்த்தது. "மனோகரா" அடுத்து வந்து உரையாடல் விறுவிறுப்பில் நம் அனைவரையும் சுண்டி இழுத்தது. 1953இல் தான் தி.மு.கழக வரலாற்றில் தலையாய இடம் பெற்ற மும்முனைப் போராட்டம் நடைபெற்றது. அதன் விளைவாகக் கல்லக்குடி பழங்காநத்தம் எனும் பழம் பெயரை மீட்க, டால்மியாபுரம் எனும் அயற்பெயரை ஒழிக்கத் தண்டவாளத்திலே தலைவைத்துப் படுத்து ஆறுமாதம் சிறைத் தண்டனை பெற்று முல்லை சக்தியோடும், கஸ்தூரியோடும், குமாரவேலோடும், குழந்தைவேலோடும் திருச்சிச் சிறையில் கலைஞர் புகுந்தார். அந்தச் சிறை வாழ்வை அனுபவித்த பிறகுதான் கூண்டுக்குள் அடைபட்ட கிளியின் துன்பம் புரிந்தது. அதை 1953இல் கலைஞர் ஒரு கவிதையாகவே வடித்தார்.

## பச்சைக் கிளி

***சுரைக்காய்ப் பிஞ்சின் தலையில் மிளகாய்ப்***
***பழத்தைச் செருகி இடையில் மல்லிகை***
***இலைகள் சிறகாய்ப் பின்புறம் தாழை***
***மடலை வைத்தால் பச்சைக்கிளியே***
***உன்போல் படைப்பு! உன்போல் படைப்பு!***
***வட்டத் தலையே சிவப்பு மூக்கே***

சின்ன இறகே நீண்ட வாலே
கன்னற் கிளியே சொன்னது பிசகா
வர்ணனை கேட்டு வாழ்த்த மறுப்பாய்
புகழ்ச்சொல் கேட்டும் போற்றிட மாட்டாய்.
காரணம் அறிவேன் சின்னக் கிளியே
கூண்டில் உன்னைப் போட்டதனாலே
தூண்டிற் புழுவாய்த் துடிக்கிறாய் நீயும்.
சிறையில் உன்னை அடைத்து மகிழ்ந்தேன்
இன்று தெரிந்தேன்
சிறை, மிகக் கொடியது, சிறைமிகக் கொடியது

மன்னித்திடுவாய் மன்னித்திடுவாய்
பொன்மொழிப் பாவாய் மன்னித் திடுவாய்
என்சிறை முடிந்ததும் உன்சிறை உடைப்பேன்.
சிறையின் கஷ்டம் சிறையால் உணர்ந்தேன்.
அடிமைப் புள்ளே அழகுக் கிள்ளாய்
அனுபவம் பெற்றேன் அனுபவம் பெற்றேன்.
வந்ததும் தருவேன் விடுதலை வாழ்வு.
பறப்பாய், பறப்பாய், உயரப் பறப்பாய்
கட்டிய கால்கள் விடுபடும் உடனே
எட்டிய மட்டும் ஏறிப் பறப்பாய்
எழில்திறப் பெண்ணே எங்கும் பறப்பாய்
கூண்டில் உன்னை அடைத்தேன் கிளியே
மன்னித்து விடுக கூண்டின் கஷ்டம்
புரிந்து கொண்டேன், கூண்டின் கஷ்டம்
புரிந்து கொண்டதால் கூண்டுக் கிளியுனைத்
திறந்து விடுவேன். ஆனால் கிளியே
கூண்டின் கஷ்டம் புரிந்தோர் இங்கு
ஆண்டிட வந்தார்
மாண்டிட எம்மைக் கூண்டினில் போட்டார்
ஏனோ கிளியே ஏனோ கிளியே
பதிலும் சொல்வாய் பச்சைக் கிளியே

***உன்னைநான் அடைத்ததால் என்னை அடைத்தார்***
***என்றே சொல்வாய் நன்று கிளியே***
***நீ யாரை அடைத்ததால் நானுன்னை***
***அடைத்தேனோ***

இந்தக் கவிதை கலைஞருக்கு ஏற்பட்ட சிறை அனுபவத்தால் விளைந்தது என்றாலும் பாவேந்தரின் கவிதையும் கலைஞருக்கு ஒரு தாக்கத்தை உண்டாக்கியிருக்க வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை.

"சுதந்தரம்" எனும் தலைப்பில் பாவேந்தர் எழுதிய கவிதையை ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

## சுதந்தரம்

***தித்திக்கும் பழம் தின்னக் கொடுப்பார்;***
***மதுரப் பருப்பு வழங்குவார் உனக்குப்***
***பொன்னே, மணியே, என்றுனைப் புகழ்வார்;***
***ஆயினும் பச்சைக் கிளியே அதோபார்.***
***உன்னுடன் பிறந்த சின்ன அக்கா,***
***வான வீதியில் வந்து திரிந்து***
***தென்னங்கீற்றுப் பொன்னூசல் ஆடிச்***
***சோலை பயின்று சாலையில் மேய்ந்து***
***வானும் மண்ணுந்தன் வசத்திற் கொண்டாள்!***
***தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?***
***அக்கா அக்கா என்று நீ அழைத்தாய்,***
***அக்கா வந்து கொடுக்கச்***
***சுக்கா மிளகா சுதந்தரம் கிளியே?***

பாவேந்தரின் 'பச்சைக்கிளி' தான் கலைஞரின் 'பச்சைக் கிளிக்கு' அக்காள் என்பதையும், பாவேந்தரின் படைப்புகள் கலைஞரின் எழுத்துகளுக்கு ஒரு வேகத்தையும் விறுவிறுப்பையும் அளித்துள்ளன என்பதையும் ஏற்கத்தான் வேண்டும்.

பொதுவாகவே கலைஞர் தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும், பாவேந்தர் பாரதிதாசனையுமே வழி காட்டிகளாகக் கொண்டுள்ளார் என்பதை 'நெஞ்சுக்கு நீதியில்' அவரே உணர்த்தியுள்ளார். இனமானத்தையும், பகுத்தறிவை யும் அழுத்தமாக ஊன்றிவைத்தவர் பெரியார். அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்ட அறிஞர் அண்ணா இனமானம், பகுத்தறிவோடு தமிழ் வாழ்வையும் இணைத்துக் கலைஞர் நெஞ்சில் ஊன்றி விட்டார். அண்ணாவின் எழுத்தும் பேச்சும் கலைஞரைப் பெரிதும் ஈர்த்து அவருடைய அன்புத் தம்பியாக ஆக்கிவிட்டன. பாவேந்தரின் கவிதைகளோ இனமானம், பகுத்தறிவு, சமூகச் சீர்திருத்தத்தோடு விழுமிய மொழி யுணர்ச்சியையும் கலைஞர் உள்ளத்தில் பதித்துவிட்டன. பாவேந்தரின் கவிதைகள் கலைஞரையே ஒரு கவிஞராக்கி விட்டன என்றும் சொல்லலாம். கலைஞர் தனக்கேயுள்ள தனி யாற்றலால் நிமிர்ந்து நின்றாலும் மேற்கண்ட மூவரையும் இவர்களோடு தளபதி அழகிரியையும் தன் வழிகாட்டிகளாகக் கொண்டவர் என்பதை அனைவரும் அறிவர்.

# மாணவநேசனுக்குப் பாவேந்தர் மதிப்புரை

இரண்டாம் உலகப்போர் 1939-இல் தொடங்கியது. இந்த ஆண்டில் தான் புகழ் பெற்ற எம்.என்.இராய் 'புரட்சி சனநாயகக் கட்சி' எனும் பெயரில் ஒரு கட்சியைத் தொடங்கினார். அந்த நேரத்தில் பொதுவுடைமைக் கட்சி பெரிதாக உருவெடுத்து நாடெங்கிலும் ஊடுருவிக் கொண்டிருந்தது.

அப்போதுதான் கலைஞர் 15 அகவை இளைஞனாக இருந்துகொண்டு 'மாணவநேசன்' எனும் கையெழுத்து இதழை நடத்திக் கொண்டிருந்தார். அந்த 'மாணவநேசன்' அறிமுகம்தான் பொதுவுடைமைக் கட்சி முன்னோடிகளைக் கூடக் கலைஞரைச் சந்தித்துப் பேச வைத்தது.

அந்த அளவுக்குப் பெயர் பெற்ற 'மாணவநேசன்' தான் இன்றைய முரசொலிக்கு அடிப்படை. பொதுவாகவே நாட்டுக்கு ஏதாவது சொல்ல வேண்டும், அதை எழுத்திலும் வழங்க வேண்டும் என்று நினைக்கும் எவரும் தான் எண்ணியதை எழுதி விடமுடியும். ஆனால் அதை வெளியிட வேண்டுமே! பெரிய இதழ்க்காரர்கள் எந்த எழுத்தாளர்களின் தொடக்க காலப் படைப்பையும் ஏறிட்டுப் பார்க்க மாட்டார்கள். அதனால் ஆர்வத்துடிப்புள்ள இளைஞர்கள் தாங்களே ஒரு கையெழுத்து இதழ் நடத்துவது என்பது ஒரு முறையாகவே வந்து விட்டது. என் போன்றவர்களும் திருச்சித் தூய வளவர் கல்லூரி மாணவராகவும், 'தமிழ்ப்பேராயம்' எனும் தனித்தமிழ் அமைப்பின் உழைப்பாளராகவும் இருந்த காலத்தில் 'தமிழ் ஒளி' எனும் கையெழுத்து இதழை நடத்தியிருக்கிறோம். அதன் பிறகுதான் 'அறிவு' 'கைகாட்டி' எனும் அச்சிதழ்கள்.

என்றாலும் 15 அகவையிலேயே கலைஞர் மிகுந்த

பேரார்வம் உடையவராக 'மாணவநேசன்' இதழை நடத்தியது அவரது கட்டுக்கடங்காத பேரார்வத்தையும் துடிப்பையும் தான் நமக்குக் காட்டுகின்றன. கையெழுத்து இதழ் நடத்து வது குறித்து அவரே கூறுகிறார் :

"மாணவர்கள் நடத்தும் கையெழுத்து ஏட்டால் நாடு ஒரே யடியாக முன்னேறி விடும் என்று யாரும் கூறவில்லை. சிறு துளி பெருவெள்ளம். பலர் சேர்ந்ததே நாடு. அந்த நாட்டின் எதிர்காலத்திற்குரியவர்கள் மாணவர்கள். அவர்கள் தங்கள் எண்ணங்களைச் செம்மைப்படுத்திக் கொள்ள மெருகேற்றிக் கொள்ளக் கையெழுத்துப் பிரதிகள் நல்ல வாய்ப்பு அளிக்கின் றன என்பதே என் நம்பிக்கை. இளமைப் பருவத்தில் எழுது கின்றவைகளைப் பெரிய பத்திரிகைகள் எடுத்துக் கொள் வதில்லை. அந்தப் பத்திரிகைக்கு எழுதுவது போன்ற தகுதி யைக் கையெழுத்துப் பிரதியில் ஏற்படும் பயிற்சி தாராளமாகத் தருகிறது என்பேன்.

ஆனால் ஒன்று, எல்லோரும் கையெழுத்துப் பிரதி என்ற பெயரால் பொங்கல் மலர்போல் ஒன்று தயாரித்து விடுகிறார்கள். கையெழுத்து ஏடுகளை ஒரு சமயம் ஒருவர் தான் படிக்க முடியும். நான் நடத்திய ஏடு மாதத்திற்கு இரண்டு வெளியீடு. ஒவ்வொரு வெளியீட்டிலும் எட்டுப் பக்கங்கள். பிரதிகளோ ஐம்பதுக்கும் குறையாது. ஐம்பது பிரதிகளையும் நானும் சில நண்பர்களும் மட்டுமே உட்கார்ந்து காப்பி எடுப்போம். டெம்மி பேப்பர் செலவை மட்டும் வசூல் செய்து கொள்வோம். உழைப்பும் கட்டுரைகளும் இனாம்!"

இப்படி நடத்தப்பட்ட கையெழுத்து இதழ்களைப் பற்றிப் பாவேந்தர் என்ன கருதினார் என்பதைக் கலைஞர் தன் நூலில் குறிப்பிடுகிறார்.

"ஒருமுறை ஒரு மாணவர் தந்த கையெழுத்து ஏட்டைப் படித்து விட்டுப் பாவேந்தர் கீழ்க்கண்டவாறு மதிப்புரை எழுதிக் கொடுத்தார்."

"கைராட்டையால் நாடு முன்னேறும் என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ, அவ்வளவு பைத்தியக்காரத்தனம் கையெழுத்துப் பத்திரிக்கையும்" என்று பாவேந்தர் எழுதினார்.

பாவேந்தரின் இந்தக் கருத்து ஒரு வகையில் சரிதான் என்றாலும், நாடு பெருமளவில் முன்னேறிவிடும் என்று நம்பி யாரும் கையெழுத்து இதழ் நடத்துவதில்லை. ஓர் ஆர்வம், ஒரு துடிப்பு, எழுத்தாற்றலை வெளிப்படுத்தி அதையும் நாலுபேர் பார்க்க வேண்டும் எனும் பேரவா - இதுதான் கையெழுத்து இதழுக்கு அடிப்படை. பெரும் பயன் இல்லாமலிருக்கலாம். ஆனால் இழப்பு எதுவும் இல்லையே!

அன்று 'மாணவநேசனை' உருவாக்கி இன்று 'முரசொலி'யாய் விளங்கிக் கொண்டிருக்கும் கலைஞர் நினைவில் நிற்பது பாவேந்தரின் அந்தநாள் கருத்துரைதான்.

# தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்

1939-ஆம் ஆண்டு காந்தியடிகளுக்கும் சுபாசு சந்திர போசு அவர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்ட காலம். எப்படியும் உறவை ஏற்படுத்தி விடலாம் என்று முயன்ற நேருவுக்கு அது முடியாமற் போகவே மன உளைச்சல் அடைந்தார். இந்த நேரத்தில் சீனாவின் அழைப்பு வரவே காங்கிரசுத் தூதுவராகவே நேரு புறப்பட்டுச் சென்றார். இந்த நேரத்தில் இரண்டாவது உலகப் போர் தொடங்கிவிட்டதால் நேரு பத்து நாட்களில் இந்தியா திரும்பினார். அந்நாளில் பெயர் பெற்றிருந்த எம்.என்.இராய் என்பவர் 1939-இல் புரட்சி சனநாயகக் கட்சியைத் தொடங்கினார். 'பார்வர்டு பிளாக்' ஒருபுறம் காங்கிரசை எதிர்த்து நடைபோட்டு வந்தது. பொதுவுடைமைக் கட்சியும் நாட்டின் பல பகுதிகளில் ஊடுருவி வந்தது. தமிழ் நாட்டிலும் பொதுவுடைமைக் கட்சியை வேரூன்றச் செய்யப் பலர் முயன்றனர். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் பள்ளிச் சிறுவனாக இருந்த கலைஞரைச் சந்தித்தார். அப்போது 'மாணவ நேசன்' எனும் பெயரில் கையெழுத்து ஏடு ஒன்று நடத்தி வந்தார். தொடர்ந்து கையால் எழுதி ஐம்பது படிகள் எடுத்து வெளியிடுவதில் உள்ள இடர்ப்பாட்டைக்களையும் வகையில்தான் அச்சிடப்பட்ட துண்டு வெளியீடாக 'முரசொலி' தோன்றியது. 'முரசொலி' துவங்குவதற்கு முன்பு அந்தக் கதர்ச்சட்டைக் கண்ணாடிக்காரர் கலைஞரைச் சந்தித்தார்.

"மாணவர்களையெல்லாம் ஒன்றுபடுத்திச் சுதந்திரம், சமாதானம், சமத்துவம் ஆகியவற்றுக்காக அணிவகுத்துக் குரல் எழுப்ப வேண்டும். அதற்குப் பாசறையாக மாணவர் சம்மேளனம் என ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதன் அமைப்பாளராக நீங்கள் இருந்து திருவாரூர்ப் பள்ளியில் உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும்" என்று அந்தப் பெரியவர்

கலைஞரைக் கேட்டுக் கொண்டார். சுதந்திரம்- சமாதானம்-சமத்துவம் என்றால் கலைஞருக்குக் கேட்கவா வேண்டும்! ஏற்கனவே மொழி, இன, நாட்டுணர்ச்சியும், பகுத்தறிவுணர்ச்சியும் அரும்பி வளர்ந்த நேரம். தன் கருத்தை வெளிப் படுத்த வேண்டும் என்று வேகமாகச் செயற்பட்ட நிலை. அழைத்தவர் கதர்ச் சட்டை அணிந்திருந்தாலும் பொருட் படுத்தாமல் கலைஞர் மாணவர்கள் சம்மேளனத்தின் அமைப்பாளர் ஆனார். இருநூறு உறுப்பினர்கள் சேர்க் கப்பட்டனர். 1939 வாக்கில் ஒரு பள்ளியில் முற்போக்குச் சிந்தனையுடன் முனைந்து செயற்பட இருநூறு பேர் முன் வந்துள்ளனர் என்றால் அது கலைஞரின் அமைப்பாற்றலுக்கும் முயற்சிக்கும் கிடைத்த வெற்றியல்லவா!

மாணவர்களோ எக்கட்சியும் சாராத பொதுவானவர்கள். போகப் போகச் சம்மேளனத்தின் போக்கு எங்கோ போவது போல் இருந்தது. ஆழந்தெரியாமல் காலை விட்டுவிட்டோமோ என்று கலைஞர் சிந்திக்கத் தொடங்கிவிட்டார். என்றாலும் தொடர்ந்து நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. கலைஞரே அதன் செயலாளர் ஆனார். ஆனால் சம்மேளனத்தில் காங்கிரசு மற்றும் பொதுவுடைமைத் தாக்கங்கள் தலை தூக்கத் தொடங்கின.

'தமிழ் வாழ்க! இந்தி வளர்க!' எனும் முழக்கத்தையே நமது சம்மேளன முழக்கமாக வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு காங்கிரசு நிர்வாக உறுப்பினர் மூக்கை நுழைத்தார். பொதுவுடைமைச் சார்புள்ள மாணவர்களும் தலையசைத்தனர். கலைஞருக்குச் சம்மேளனத்தை நிறுவியவர்களின் உள் நோக்கம் புரிந்துவிட்டது.

உடனே ஒரு முடிவெடுத்தார். சம்மேளனப் பொருளாளர் சிதம்பரம் வீட்டுக்குச் சென்றார் கலைஞர். அதுவரை சேர்ந்த உறுப்பினர் கட்டணம் உருபா நூறையும் கேட்டு வாங்கிக் கொண்டார்.

"நமது சம்மேளனத்தைக் கலைக்கப் போகிறேன். உறுப்பினர்கள் பணத்தைத் திருப்பித் தரப்போகிறேன்" என்று கூறி உறுப்பினர் கட்டணத்தைச் சிலரிடம் திருப்பித் தந்தார். சிலர் பெற்றுக் கொண்டனர். தரப்பட்ட 25 உரூபாய் போக 75 உரூபாய் மிச்சமிருந்தது. பலர் கட்டணம் கலைஞரிடமே இருக்கட்டும், சம்மேளனம் போனால் போகட்டும் என்று கூறிவிட்டனர். 75 உரூபாய் கையில். ஏறத்தாழ 150 பேர் இவருடன் இருக்கவே விரும்பினர். இவர்களை அப்படியே விட்டுவிட 'இயக்க' மனங் கொண்ட கலைஞர் விரும்பவில்லை. 'தமிழ் வாழ்க!, இந்தி ஒழிக!' என்று வீதியிலே வலம் வந்தவர் வாளாவிருப்பாரா?

அன்று மாலையே 'தமிழ் மாணவர் மன்றம்' என்ற ஓர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அதே காலத்தில் சேலத்தில் வேங்கடராமன் என்பவர் 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' எனும் அமைப்பை நடத்தி வந்தார். அவருடைய தொடர்பும் கிடைத்தபிறகு திருவாரூர் மன்றமும்' 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' எனும் பெயரைப் பெற்று நடைபோடத் தொடங்கியது.

1941-ஆம் ஆண்டு 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் ' தொடக்க விழா நடைபெற்றது. தொடர்ந்து இதன் கிளைகள் தஞ்சை மாவட்டத்திலும் பிற இடங்களிலும் நிறுவப்பட முயற்சி எடுத்தார் அன்றைய இளைஞர் கலைஞர்.

1942-இல் மன்றத்தின் ஆண்டு விழா நடைபெற்றது. இந்த ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றியவர்கள்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அன்றைய மாணவர்களாகிய (பேராசிரியர்) அன்பழகன், (நாவலர்) நெடுஞ்செழியன், (மறைந்த) கே.ஏ. மதியழகன் ஆகியோர்.

பாவேந்தர் பாடல்கள் வேகமாகப் பரவிய இந்நாளில் 18 அகவை இளைஞராகிய கலைஞரின் உள்ளத்தை அவை

எந்த அள்வுக்கு ஈர்த்தன என்பதை இந்த ஆண்டு விழா வில் பார்க்க முடிந்தது.

விழா தொடங்குவதற்குச் சில நாட்கள் முன்னதாகவே கலைஞர் பாவேந்தருக்கு ஒரு மடல் எழுதி, தங்களது 'தமிழ் நாடு தமிழ் மாணவர் மன்றம்' பற்றியும் அதன் குறிக்கோள் குறித்தும் விளக்கி, ஆண்டு விழாவிற்கோர் வாழ்த்துக் கவிதை வேண்டுமென்று கேட்டிருந்தார். கலைஞருக்கோ 18 அகவை. பாவேந்தருக்கோ 51 அகவை. தக்க முதிர்ச்சியும் பெயரும் பெற்றிருந்த பாவேந்தர் கலைஞரின் முகம் பார்க்கவில்லை; முகவரியைத்தான் பார்த்தார். அதைவிடக் கலைஞரின் அகம் பார்த்தார். அதில் துள்ளியெழும் தமிழுணர்ச்சியை அடையாளம் கண்டு கொண்டார். அந்த அடிப்படையில் பாவேந்தரின் வாழ்த்துப்பா ஒன்று வந்து சேர்ந்தது. அந்நாளில் ஓர் ஆண்டு விழாவில் துடிப்புமிக்க ஓர் இளைஞனின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாக அந்த வாழ்த்துப்பா அமைந்துவிட்டது. அது இதுதான் :-

*"தண் பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ் நாடுதமிழ் மாணவர் மன்றங்காண்!
வண்மையொடும் உண்மையொடும்
வாழ்ந்திடுங்காண்!
மக்களிடை எழுச்சிக்கு மருந்தா குங்காண்!*

*கண்மூடிக் குறிமறந்து, தமிழர் தங்கள்
கலைமறந்த நெஞ்சத்தில் ஒளியெய்துங்காண்!
புண்வாய்ந்தோர் அல்லர்காண்! திருவாரூரின்
புலி இளைஞர்காண்! தோள்கள் பூரித்தார்காண்!*

*எழில் மன்றச் சட்டத்தை, உயிரைப்போல
எண்ணி, அந்த வண்ணமே நடப்பார் கள்காண்!
ஒழித்தார்காண் அயர்வுதனை! அவர்கள் நாளும்
உயர்கவிதைச் சுவைதன்னில் தோய்ந்திட் டார்காண்!*

**மொழியினிலே தமிழ் மொழியே உயர்ந்த தென்றும்,**
**மூச்செல்லாம் தமிழுக்கே என்றும், நல்ல**
**வழியறிந்து விட்டார்காண்! முத்தமிழ்க்கு**
**மடை கோலி விட்டார்காண் உலகில் பாய்ச்ச!**

**கிளம்பிற்றுக்காண் தமிழச் சிங்கக் கூட்டம்!**
**கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை!**
**வளம் பெரிய தமிழ் நாட்டில், தமிழரல்லார்,**
**வால் நீட்டினால், உதைதான் கிடைத் திடுங்காண்!**

**தளும்புது பார் பக்தியென்றும், யோகமென்றும்,**
**சாமி என்றும், பூதம் என்றும், எழுதிப் பேசிப்**
**புளுகிடுதல், இனிப்பலிக்க வழியில்லை காண்!**
**புதுவாழ்வு மலர்ந்ததுகாண்! தமிழ்**
**நாட்டில்தான்!"**

எழில்மன்றச் சட்டத்தை மதித்து நடப்பார் என்று பாவேந்தர் தந்த வாழ்த்துதான் பின்னாளில் கலைஞர் சட்ட மன்றத்தில் தொடர்ந்து இடம் பெற்றிடவும் மும்முறை தலைமையேற்று நடத்தி வைக்கவும் எடுத்துத் தரப்பட்ட முதல் அடி. கவிஞர் வாக்கல்லவா? பொய்க்கவில்லை. அதிலும் கலைஞரின் உள்ளத்தில் நிலையாக இடம் பெற்ற வாழ்த்துப் பாட்டு இது. குறிப்பிட்ட சில வரிகளைக் கலைஞர் பல இடங்களில் மேற்கோள் காட்டுவதைக் கேட்டிருக்கின்றேன். அந்த அளவுக்கு அந்த இளம் உள்ளத்தில் பாவேந்தரின் வாழ்த்து சுடர்விட்டு மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

11.04.1982-இல் விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் உரையாற்றியபோது கூடக் கலைஞர் மறக்காமல் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"நம்முடைய வீரம் செறிந்த வரலாறுகளை மாணவர்கள் படித்திட வேண்டும். நம்முடைய மாணவர்கள் ஒரு காலத்திலே கவிதை எழுதினார்கள்.

**சேரர்கள் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே?**
**வீரர் பாண்டியர் அரசு ஏன் கவிழ்ந்தது?**
**சோழர் உலவிய சோர்விலா நாட்டில்**
**கோழைக் கொள்கை குவிந்தது எவ்விதம்?**
**வெடித்தன வினாக்கள் வெதும்பிய மனத்தில்"**

என்று கவிதை எழுதப்பட்ட நாடு இந்த நாடு!

மாணவப் பருவத்திலே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பார்த்து எங்களுடைய மாணவர் மன்றத்திற்கு ஒரு வாழ்த்துக் கவிதை எழுதி அனுப்புங்கள் என்று கேட்டபோது,

**"தண்பொழிலில் குயில் பாடும் திருவாரூரில்**
**தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்காண்**
**வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடுங்**
**காண்**
**மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங் காண்**
**கிளம்பிற்று காண் தமிழச்சிங்கக் கூட்டம்**
**கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்**
**கூட்டத்தை"**

– என்று எழுதிய பாரதிதாசனுடைய அந்தப் பாடலை இன்னமும் நான் எண்ணியெண்ணிச் சுவைத்துக் கொண்டிருக்கிறேன். அந்தக் காலம் இனித் திரும்பி வராதா என்கின்ற அப்படிப்பட்ட அந்த உணர்வு மாணவர்களுடைய உள்ளத்திலே இன்றைக்கு வேர்விட்டுக் கிளம்பியிருக்கிறதா? பீறிட்டு எழுகிறதா?

வேதனையோடுதான் நான் கேட்கிறேன்.

எனவேதான் மாணவர்களை நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்ளுவேன் – அப்படிப்பட்ட உணர்வுகளை நீங்கள் பெற்றாக வேண்டும்."

மாணவ நிலையில் கலைஞர் எப்படியிருந்தார் என்பதற்கு வாழ்த்துப்பா வேண்டிக் கலைஞர் பாவேந்தருக்கு எழுதிய

மடலே சான்றாகும். 16.11.42-இல் தமிழன்பன் மு. கருணாநிதி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு அவருக்குப் பற்று இருந்தது.

தமிழின் அப்போதைய தீ நிலையை நீக்கி, ஆக்கந் தேடும் ஆர்வத்தை அழகுற வெளிப்படுத்தியுள்ளார்.

உயர்நிலைப்பள்ளி மாணவனாக இருந்தும் மன்றம் நடத்தும் இயக்க உணர்வு; மொழிக்குத் தொண்டு செய்யும் முனைப்பு.

இன்று தமிழர்களின் தலைமகனாக வீற்றிருக்கும் கலைஞர் கருவிலே திருவமைந்தவராக இருந்தார் என்பது மட்டு மின்றி அடிப்படையில் இத்தனை முனைப்பு இருந்த காரணத்தால் தான் இவ்வளவு வளர்ச்சி பெற முடிந்தது என்பதும் நமக்கெல்லாம் ஒரு பாடம் ஆகும்.

கலைஞர் எழுதிய மடலையும் அந்த மடலுக்கு விடையாக வாழ்த்துப்பா அனுப்பிவிட்டு மடலின் ஓரத்தில் பாவேந்தர் குறிப்பு எழுதியிருப்பதையும் பின்வரும் மடலில் காணலாம்.

18 அகவையில் பாவேந்தரின் வாழ்த்தைப் பெற்ற கலைஞர் ஒரு காலத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராகிப் பாவேந்தர் படைப்புகளையே 'நாட்டுடைமை' ஆக்கினார் என்று சொன்னால் வரலாற்றில் இது எளிதான செயலா? வியப்பாக இல்லையா!

16-11-42

உயர் திரு,

கவிப்பெரியார் அவர்களுக்கு
தமிழன்பன் மு.கருணாநிதி வணக்கம்பல
[illegible]
[illegible] சேரும் பொருட்டு தமிழ்
மாணவர்கள் என்று கூடி "தமிழ்நாடு தமிழ்
மாணவர் மன்றம்" நிறுவியுள்ளோம்.
தலைமன்றம் சேலம். இதன் கிளைக் கழ
கங்கள் பல உள. திருவாரூரிலும் கிளை
ஒன்று நிறுவத் துணிந்துள்ளோம்.
திறப்புவிழாவிற்குத் தாங்கள் வந்து
தக்க தலைமையும் வருகையையும்
எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்

தமிழ் மாணவர் மன்
றத் திறப்பு விழாவை,
[illegible]
[illegible]
[illegible] ள்ளோம்.

தங்கள் அன்புள்ள
மு. கருணாநிதி
வணக்கம்

தயவு செய்து, எங்களை அலட்சியம் செய்யாமல்
என்று அனுப்பவும். மிகமிக வணக்கம்.

20/11/42-ல்
[illegible]
3 [illegible]

முகவரி
மு. கருணாநிதி (ஆறாம் உயர் வகுப்பு)
உயர்நிலைப் பள்ளி.
திருவாரூர்

# திருச்சி தி.க. மாநாடு

1945 ஆம் ஆண்டில் திருச்சியில் திராவிடர் கழகத்தின் மாநில மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பெரியார் தலைமை தாங்கினார். அறிஞர் அண்ணா, கலைஞர், புரட்சிக்கவிஞர், நாவலர் மற்றும் கழக அன்பர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திருச்சியில் தங்கியிருந்த இடத்தில் அண்ணா, கலைஞர் ஆகியோருடன் புரட்சிக்கவிஞர் தனக்கே உரிய முறையில் "பாண்டியன் பரிசு" காவிய நலம் குறித்து எடுத்துச் சொன்னார். அனைவரும் வெகுவாகக் கேட்டு மகிழ்ந்தனர். பாவேந்தரே அவர் வாயிலாக இதுபோன்ற காவியங்களைப் பற்றிச் சொன்னதால்தான் 21 அகவை இளைஞராகிய கலைஞர் போன்றவர்கட்கு அது கல்லில் எழுத்துப் போலப் பதிந்துவிட்டது. அதனுடைய தாக்கம்தான் இன்று கலைஞர் பாவேந்தர் பாடல்களை எல்லா இடத்திலும் எடுத்துச் சொல்வதற்குக் காரணம். அவ்வேளையில் 1945 திருச்சி தி.க. மாநாடு கலைஞருக்கும், பாவேந்தருக்குமிடையில் ஒரு கொள்கை நெருக்கத்தை உண்டாக்கியது எனலாம்.

# புதுவை மாநாட்டில் கலைஞர் பட்ட துன்பம்

1945-ஆம் ஆண்டில் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டு ஓராண்டான நிலையில் புதுவையில் ஒரு மாநாடு நடை பெற்றது. இதில் கலைஞர் பங்கு பெற்றது மட்டுமின்றி அன்றைய பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள், காங்கிரசுக்காரர் களால் ஏவிவிடப்பட்ட கூலிப் பட்டாளத்தால் கலைஞர் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்பதும் திராவிட இயக்கத்தவர் முழுமையாக அறிந்து வைத்துள்ள செய்தியாகும். 'பாரதி தாசன் வரலாறு' என்ற பெயரில் 'பெரிய நூலை' வெளியிட்டுள்ள நாவலர் அந்த மாநாட்டில் கலைஞர் பங்கு என்ன என்பது குறித்தோ, அதில் அவர் தாக்கப்பட்டது குறித்தோ எதுவும் எழுதவில்லை என்பது தான் வியப்பு. அந்த அளவுக்கு வரலாறு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

## இதோ நாவலர் எழுதிய பகுதி –

"1945-ஆம் ஆண்டில், புரட்சிக்கவிஞரும், வழக்கறிஞர் பெருமாள், அ.ச.காங்கேயன், ம. நோயேல், பொன். இராமலிங்கம், வ. பொன்னம்பலம், காஞ்சி கல்யாணசுந்தரம் போன்றோரும் சேர்ந்து புதுவையில், பெரும் எதிர்ப்புக் கிடையே, திராவிடர் கழக மாநாட்டை நடத்தினார்கள். மாநாட்டில் பெரியார், அறிஞர் அண்ணா, பட்டுக்கோட்டை கே.வி. அழகர்சாமி, மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார், திருமதி மஞ்சுளாபாய் சண்முகம், திருமதி சத்தியவாணிமுத்து, நான் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினோம். காலை மாநாடு முடிந்து புரட்சிக்கவிஞர் அவர்கள் வீடு திரும்பும் போது, தேசிய இயக்கத்தின் கலவரக்காரர்களால் தாக்கப் பட்டார். அவரது மூக்குக் கண்ணாடி கழன்று வீழ்ந்தது. செருப்புகள் காலைவிட்டு அகன்றுவிட்டன. பலர் சூழ்ந்து

கொண்டு தாக்கிய நிலையிலும், புரட்சிக்கவிஞர், அவர்களை எதிர்த்துச் சமாளித்தார். சிறிதளவு காயங்களோடு, இரண்டு நண்பர்களின் உதவியால், அவர் அந்த இடத்தைவிட்டு அகன்றார். கழகத் தொண்டர்கள் பல பேர்கள் எதிரிகளின் தாக்குதல்களுக்கு ஆளானார்கள். மாலை மாநாடு 5 மணி வரையிலும் நடைபெற்றது என்றாலும், தேசிய இயக்கக் கலவரக்காரர்கள் மாநாட்டுக் கூட்டத்தைக் கலைத்து விட்டார்கள். காவல்துறையினரும் அவர்களுக்கு உடந்தையாக இருந்து விட்டனர். தொடக்கக் காலத்தில், பெரும் இடையூறுகளுக்கு இடையே எதிர் நீச்சல் போட வேண்டி இருந்தது."

இதில் நாவலர் எழுதுகிறபோது கழகத் தொண்டர்கள் பலபேர்கள் எதிரிகளின் தாக்குதல்களுக்கு ஆளானார்கள் என்றுதான் எழுதுகிறாரே தவிரக் கலைஞர் பற்றி ஒரு குறிப்புக் கூட இல்லை. இந்த வரலாற்றை நாவலர் 1994-இல் தான் எழுதியுள்ளார். விவரம் சரியாகத் தெரியாத காலத்தில் எழுதப்படவில்லை. எனவே திட்டமிட்டு நாவலர் மறைத்துவிட்ட வரலாற்றை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது கடமை.

முன்னுரையில்கூட 'அப்படித் தாக்கப்பட்டவர்களில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் ஒருவர்' என்று பொத்தாம் பொதுவாகத்தான் நாவலர் எழுதியுள்ளார்.

இந்த மாநாடு குறித்தும் அதில் தன் பங்கு என்ன என்பது குறித்தும் கலைஞரே 'நெஞ்சுக்கு நீதி' நூலில் எழுதியுள்ளார்.

"ஈட்டிகள் என் நெஞ்சைக் குறி பார்த்திருக்கின்றன.. கற்கள் என் தலையைப் பதம் பார்த்திருக்கின்றன. கம்புகளும், கழிகளும், குண்டாந்தடிகளும் என் மேனியைச் சுவைத்திருக்கின்றன. சாவு என்னை நெருங்கி நெருங்கி எத்தனையோ முறை விலகியிருக்கிறது! சிலரிடத்திலே நெருங்கியதற்காக அல்ல! விலகியதற்காக!

ஆனால் அந்தக் கொடிய நிகழ்ச்சிகளை நான் சந்தித்த போதெல்லாம் பூரிப்பு அடைந்திருக்கிறேன். மனப் புண் அடைந்தது கிடையாது.

போர்க்களத்தில் பாய்ந்து வரும் வாளுக்குத் தலை கொடுக்கத் தியாராயிருப்பான் வீரன்! ஆனால் அவனையே அவன் தோட்டத்தில் நிறைந்து கிடக்கும் நெருஞ்சி முள் மீது படுத்து உருளச் சொன்னால் தாங்கிக் கொள்வானா?

என் தலைக்கு வந்த ஆபத்துக்களில் மிகப் பெரிய வரிசையில் ஒன்று தான் புதுச்சேரி ஆபத்து!

விழுப்புரத்தில் கழகப் பிரச்சார நாடகங்களை முடித்துக் கொண்ட நாங்கள் அங்கிருந்து புதுச்சேரிக்குப் புறப்பட்டோம்.

அரவிந்தர் வாழ்ந்த மண் - அடிமைத் தளையொடிக்கும் அருமைக் கவிகள் இயற்றிய பாரதியார் உலவிய பூமி-அஞ்சா நெஞ்சும் ஆற்றல் மிகு சொல் வளமும் கொண்ட தன்மானக் கவிஞன் பாரதிதாசன் ஏடெடுத்து எழுதிய மாநிலம்-அங்கே எமது நாடக மன்றத்துப் பணியினைத் தொடங்கினோம்.

இந்தியா, ஆங்கிலேயர் பிடியிலும், புதுவை - காரைப் பகுதிகள் பிரெஞ்சுக்காரர் பிடியிலும் இருந்த காலம் அது.

புதுவையின் எழிலுறு வீதிகளில் பிரெஞ்சு நாட்டு ஆடவரும் பெண்டிரும் வண்ணக் கோலம் காட்டி உலவிடுவர். மாலை வந்து விட்டால், அவர்களில் ஆடவரும் பெண்டிரும் மது வெறியேறி ஒருவரையொருவர் தழுவியவாறும் முத்தமிட்டவாறும் தமிழர்கள் இழுக்கும் ரிக்ஷாக்களில் கடை வீதிகளில் சென்று கொண்டிருப்பர். புதுவைத் தெருக்களில் அழகும் தூய்மையும் நிறைந்திருந்தது. எனினும் அயல்நாட்டு நாகரிகமெனும் சகிக்க முடியாத காட்சிகளும் புதுவைக்குப் பெருங்களங்கமாக இருந்து வந்தன.

ஆறு வயதுச் சிறுவர்கள் கூட வீதிகளில் புகை பிடித்தவாறு

செல்வார்கள். அவர்களிடம் தங்கள் பீடிக்கு நெருப்பு கேட்கும் காவலர்களும் நிறைய இருந்தனர்.

இந்தியாவை வெற்றி கொள்ள முயன்று, 'கிளைவ்' குறுக்கீட்டால் தடைப்பட்டு, புதுவை, காரை, மாகி, ஏனாம் என்று சில சிறு நிலப் பகுதிகளை மட்டும் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் நிலைத்திடச் செய்த டுய்ப்ளே'யின் சிலையொன்று எடுப்பும் சிறப்புமாகப் புதுவைக் கடற்கரையை நோக்கி நின்று கொண்டிருந்தது.

உடல் போன்ற இந்தியா ஆங்கிலேயனிடமும், அதன் கழுத்தில் தொங்கும் பதக்கம் போன்ற புதுவைப் பகுதி பிரெஞ்சுக்காரனிடமும் இருந்த 1945–ஆம் ஆண்டு எங்கள் திராவிட நடிகர் கழகம், தனது நாடகங்களை 'கெப்ளே' என்ற தியேட்டரில் நடத்தத் தொடங்கியது.

விழுப்புரத்தில் ஏற்பட்ட ஏமாற்றமும் இங்கு இல்லை; நாடகம் காணத் திரளான மக்கள் நாள்தோறும் வந்தனர். இடமின்றிப் பலர் திரும்பினர். நான் நடித்த "சாந்தா, அல்லது பழனியப்பன்" நாடகம் மிக வெற்றிகரமான வசூலுடன் இருபத்து ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. அந்த நாடகத்தில் நான் தாங்கிய பாத்திரத்திற்குப் பெயர் சிவகுரு!

என்னைப் புதுவையிலேயுள்ள பொதுமக்கள், 'சிவகுரு', என்றே செல்லமாக அழைக்கத் தொடங்கினர்.

புதுவையில் திராவிடர் கழகத் தொண்டர்கள் – முன்னணியினர் என்னைச் சூழ்ந்து கொண்டு ஊக்கமும் உற்சாகமும் அளித்தார்கள்.

திரு. பெருமாள் அவர்களது ஆதரவோடு "தொழிலாளர் மித்திரன்" என்ற வார இதழை, திரு. காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் நடத்தி வந்தார்கள். அந்தப் பெருமாள் தான் அவுக்காப் பெருமாள் என்று அழைக்கப்படுகின்றவர்; புதுவைச் சபாநாயகராக இருந்தவர்!

அவுக்கா என்றால் அங்கே வழக்கறிஞர் என்று பொருள்படும்.

'தொழிலாளர் மித்திரன்' இதழில் என்னைக் கட்டுரைகள் எழுதுமாறு அதன் ஆசிரியர் தூண்டினார். அதை நிறைவேற்றினால் ஒரு வாரத்திற்கு அவரது அலுவலகத்திலே தொடர்ந்து தேநீர் கிடைக்கும். அந்த அலுவலகம், கார்கள் நிறுத்தும் ஓர் இடம். காருக்குப் பதிலாக அச்சுக் கோக்கும் இடமும் ஆசிரியர் இருக்கையும் இருந்தது.

"அந்தப் பேனா!" என்று ஒரு கட்டுரை எழுதினேன். காந்தி அடிகளின் ஆசிரமத்தில் காணாமற் போய்விட்ட ஒரு பேனாவைப் பற்றிய கட்டுரை அது!

அந்த இதழ் வெளி வந்த மறுநாளே, அந்த ஊர்க் காங்கிரசார் என்னை அடையாளம் பார்த்து வைத்துக் கொண்டார்கள்.

அடுத்த இதழில், 'காந்தி வைசிராய் ஆனால்?" என்ற ஒரு கட்டுரை எழுதினேன்.

மூன்றாவது கட்டுரை எழுதுகிற வரையில் காங்கிரஸ் நண்பர்கள் பொறுத்துக் கொண்டிருக்கவில்லை.

அவர்களுக்குரிய பயங்கர வீடொன்றில் ஒரு நாள் இரவு கூடி, சதித் திட்டத்தைத் தீட்டி விட்டார்கள்.

அவர்கள் திட்டத்திற்கு வெற்றி கிடைக்கும் நிலையில் எதிர்பாராத விதமாக, புதுவையில் கழக மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளில் அனைவரும் முழு மூச்சாக ஈடுபட்டோம். இரவெல்லாம் நாடக வேலை-பகலில் மாநாட்டு வேலை!

மாநாடு, சீரும் சிறப்புமாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் எங்கள் எண்ணம் போல் முடிந்துவிட்டன.

பெரியார், அறிஞர் அண்ணா, அழகிரிசாமி—மற்றும் கழகத் தலைவர்கள் மாநாட்டில் பங்கு கொண்டனர்.

மாநாடு காலை பத்து மணிக்குத் தொடங்கிற்று. மாநாட்டில் கலகம் விளைவிக்கத் திட்டமிட்டவர்களும் ஒன்று, இரண்டு, பத்து, நூறாக, மாநாட்டு முகப்புக்கெதிரே கூடி எதிர்ப்பு முழக்கங்கள் செய்திடத் தொடங்கினர்.

"திராவிடத் தலைவர்களே! திரும்பிப் போங்கள்!' என்பதே அவர்களது கூச்சலாக இருந்தது.

"வா!" என்றழைப்பதுதான் தமிழர் பண்பு! 'போ!' என்று கூறக் காரணம் யாதோ?" என்று தொடங்கி, அறிஞர் அண்ணா அவர்கள் அரியதோர் உரையாற்றினார்கள். அந்த உரையினைத் தொடர்ந்து கழகக் கொடியை ஏற்றி வைத்தார்கள். கொடி ஏற்றப்பட்ட அடுத்த வினாடியே கொடி மரத்தை வீழ்த்தி விட்டார்கள் எதிரிகள்.

அவ்வளவுதான், அமளி தொடங்கி விட்டது. பெரியாரையும் அண்ணாவையும் ஏனைய தலைவர்களையும் வண்டிகளிலும் ரிக்ஷாக்களிலும் ஏற்றிப் பாதுகாப்பாக அனுப்பி விட்டுப் பாரதிதாசனும் நானும், காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோரும் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தோம்.

திடீரென ஒரு பெருங்கூட்டம் எங்கள் மூவரையும் சூழ்ந்து கொண்டது. நாங்கள் மூவரும் திசைக்கொருவராக ஆகி விட்டோம். பாரதிதாசனை யாரோ அழைத்துக் கொண்டு ஓடி ஒரு வீட்டில் ஒளித்துவிட்டார்கள். அவரது காலணி யொன்று தெருவிலே கிடந்தது. அதனைக் கருவியாகக் கொண்டு என்னைத் தாக்கினார்கள். பெரிய லாடம் அடிக்கப்பட்ட பூட்ஸ் இது.

அடி எப்படியிருக்கும் என்று கூற வேண்டியதில்லை. அப்பொழுது வலித்தது. ஆனால் இப்பொழுது நினைத்தாலும் அந்தச் சம்பவம் இனிக்கிறது.

கலகக் கூட்டத்தினரிடம் சிக்கிக் கொண்ட நானும் அண்ணன் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்களும் திசைக் கொருவராகப் பிரிக்கப்பட்டோம். அவர் எங்கு போனார் என்று எனக்குத் தெரியாது. என்னைக் கூட்டத்தினர் அடித்துத் துரத்திக் கொண்டே வந்தார்கள். நான் அடி வாங்கவும் முடியாமல் ஓடவும் முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன். மாநாட்டிற்கு வந்திருந்த திருவாரூர் இராசகோபால் என்மீது விழுந்த அடிகள் பலவற்றைத் தாங்கிக் கொண்டார். நல்ல வலிவான உடல் அவருக்கு. அதற்குப் பிறகு அவரையும் விட்டு நான் பிரிக்கப்பட்டேன்.

புதுச்சேரியில் அப்போது அடிக்கடி கலவரங்கள் நடை பெறுவது உண்டு. அங்கு நடைபெறும் ஒவ்வொரு தேர்த லிலும் – அது சாதாரண நகராட்சித் தேர்தலாக இருந்தாலும் கூட ஐந்தாறு கொலைகள் விழுவது வழக்கம். ரிவால்வர் சண்டைகள் நடைபெறுவதும் உண்டு. இப்படிக் கலவரங் களைக் கண்டு கண்டு பழக்கப்பட்டவர்கள் புதுச்சேரிப் பொது மக்கள். தெருவில் கூச்சலென்றால் கதவுகளைத் தாழிட்டுக் கொண்டு, தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள். நான் அடித்துத் துரத்தப்பட்டு என் பின்னால், எதிரிகள் கூட்டமாக ஓடிவரும்போது அப்படித் தான் ஒவ்வொரு வீட்டாரும் தங்கள் வீட்டுக் கதவுகளைப் பத்திரப்படுத்திக் கொண்டார்கள்.

இடையே சந்து பொந்து இல்லாத நீண்ட பெருஞ்சாலை யொன்றில் நான் ஓடிக் கொண்டேயிருக்கிறேன். எதிரிகள் துரத்திக் கொண்டிருக்கிறார்கள். என் சட்டையில் மாட்டப் பட்டுள்ள 'பெரியார் பேட்ஜைப் பறிப்பதற்காக ஒருவன் சட்டையைக் கிழித்தான். நான் அந்தப் பேட்ஜை இறுகக் கையால் பற்றியவாறு ஓடிக் கொண்டேயிருந்தேன்.

அந்த நீண்ட தெருவில் ஒரேயொரு வீட்டில் மாத்திரம் கதவு திறந்திருந்தது. வாயிற்புறத்தில் இரண்டொரு பெண்கள் நின்று கொண்டு இருந்தார்கள். நான் வீட்டிற்குள்ளே

நுழைந்தேன். வீட்டிற்குள்ளே நுழைந்த என்னை அந்தப் பெண்கள் தடுக்கவில்லை. திண்ணையில் இருந்தவாறு எந்த விதச் சலனமும் இன்றி இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டிற்குள் சென்ற நான் தொடர்ந்து வந்த கூட்டத்தினர் என்னைப் பிடித்துவிடாமலிருக்கக் கதவைச் சாத்தினேன். அதற்குள் கூட்டத்தினர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தனர். நான் கதவிடுக்கின் மறைவில் நின்று கொண்டு அந்த வீட்டை ஒரு முறை பார்த்தேன். தாழ்வாரத்திலும் கூடத்திலும் மதுப் புட்டிகள் இறைந்து கிடந்தன. காலி செய் யப்பட்ட புட்டிகளும், காலி செய்யப்படாத புட்டிகளும் ஏரா ளமாக இருந்தன. அந்த வீடுதான் கலகக்காரர்கள் சதித் திட்டம் தீட்டிய இடம் என்பதைப் பிறகு புரிந்து கொண் டேன். உள்ளே நுழைந்தவர்கள் கதவின் மறைவில் இருந்த என் தலைமயிரைப் பிடித்திழுத்துத் தெருப்புறத்தில் தள்ளி னார்கள். 'க்யூ' வரிசையில் நிற்பது போல் நின்று கொண்டிருந்த கலகக்காரர்கள் ஆளுக்கொரு அடி என்னை அடித்தார்கள். நான் மயக்கமுற்றேன். சுருண்டு விழுந் தேன். நான் இறந்து விட்டதாகக் கருதி, சாக்கடை ஓரத்தில் தூக்கியெறிந்துவிட்டுப் போய் விட்டார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இரண்டு மணி நேரம் கழித்துத்தான் நான் கண் விழித்துப் பார்த்தேன். எங்கேயோ ஒரு வீட்டுத் தாழ்வாரத்தில் நான் படுக்க வைக்கப்பட்டிருந் தேன். முதிர்ந்த ஒரு தாயும் ஒரு சிறுமியும் ஓர் இளைஞனும் என் அருகே இருந்தார்கள். நான் கண் விழித்துப் பார்த்த போது அந்தத் தாய் சொன்ன வார்த்தை என் நெஞ்சில் அப்படியே பதிந்து விட்டது.

"ஐயோ, யார் பெற்ற பிள்ளையோ! இப்படிச் சாகக் கிடக்கிறதே?" என்பதுதான் அந்தத் தாயின் வாயிலிருந்து வந்த கனிவு மிக்க வாசகம்.

நீண்ட நாள் வரை தேடிக் கொண்டிருந்தேன்; புதுவையில் எனக்கு உயிரளித்த அந்த நல்லவர்கள் யாரென்று. அதற்குப் பிறகு நான் அவர்களை இரண்டொரு முறை சந்தித்தேன். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

இதற்கிடையில் காலையில் கலைக்கப்பட்ட கழக மாநாடு மீண்டும் மாலையில் கூட்டப்பட்டு அழகிரிசாமி அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் சொன்ன வாசகம்தான், "காலையில் சில கவலை தரத்தக்க நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன் - நடந்த வைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்" என்பதாகும்.

என்னுடைய நிலைமை என்னவாயிற்று என்று தெரியாமல் தலைவர்கள் ஊரெல்லாம் ஆள் அனுப்பித் தேடியிருக் கிறார்கள். பெரியாரும், அண்ணாவும் என்னைக் காணாமல் துடித்துப் போயினர். விடியற்காலை நாலு மணிக்குத் தலைவர்கள் தங்கியிருக்கும் இடம் தெரிந்து அவர்களிடம் போய்ச் சேரப் புறப்பட்டேன். மீண்டும் என்னைத் தெருவில் கண்டால் கலகக்காரர்கள் உயிரைப் பறித்துவிடக் கூடு மென்று அஞ்சிய எனக்கு உதவி செய்த வீட்டார் என்னை மாறுவேடத்தில் போகுமாறு வலியுறுத்தினர். அவர்களே அதற்கான ஏற்பாடுகளையும் செய்து, முஸ்லீம் வேடத்தில் என்னை அனுப்பி வைக்கத் திட்டமிட்டனர். கைலி, நீண்ட ஜிப்பா, தலையில் குல்லாய் இவைகளுடன் ரிக்ஷா ஏறி, தலை வர்கள் இருக்குமிடம் சென்றேன். பெரியார் கண்ணுறங்காமல் என்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந் திருந்தார். என்னைக் கண்டதும் ஆரத் தழுவிக் கொண்டு, "சுகமாக இருக்கிறாயா?" எனத் தழுதழுத்த குரலில் கேட்டார்.

அதற்குப் பிறகு அவரே என் காயங்களுக்கெல்லாம் மருந்திட்டார். "என்னுடன் வா, போகலாம்" என்று ஆணை யிட்டார். நானும் அவருடன் புறப்படத் தயாரானேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் பெரியாரின் ஈரோட்டுக் 'குடியரசு' அலுவலகத்தில் துணையாசிரியனாகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது."

❁ ❁ ❁ ❁ ❁

கலைஞர் புதுவையில் பட்ட துன்பம் பற்றியும் அங்கு நடைபெற்ற கலவரங்கள் குறித்தும் அறிஞர் அண்ணாவே தன் கடிதங்களுள் ஒன்றில் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். கலைஞருக்கு ஏற்பட்ட அந்த நாள் துன்பம் அண்ணாவின் மனத்திலேயே நின்றது. அதனால்தான் அண்ணா உருக்கமாக எழுதித் தன் பாசத்தைப் புலப்படுத்தினார். ஆனால் உடன் பழகிய நாவலரோ மொட்டையடியாக அந்தப் பகுதியை மூடி மறைத்து விட்டார். வரலாறு எழுதுகிறவர்களும் திறனாய் வாளர்களும் விருப்பு வெறுப்பற்றவர்களாக இருக்க வேண்டு மென்பது உலகப் பொது விதி. விதிகளெல்லாம் காற்றில் பறக்கும் இந்தக் காலத்தில் நாவலர் எழுத்தில் போய் இதையெல்லாம் தேடிக் கொண்டிருக்க முடியுமா என்ன?

புதுவையில் முதிர்ந்த ஒரு தாயும் சிறுமியும் ஓர் இளை ஞனும் தன் அருகில் இருந்தார்கள் என்று கலைஞர் குறிப் பிட்டுள்ளார். அந்த அம்மையாரைப் பின்னாளில் தேடிக் கண்டு பிடித்து விட்டார் கலைஞர். அவர்தான் பானுமதி அம்மையார். தலைவர் கலைஞர் பின்னாளில் புதுச்சேரி நிகழ்ச்சிக்குப் போகும் போதெல்லாம் அந்தப் பானுமதி அம்மையார் எப்படியாவது வந்து தலைவர் கலைஞர் அவர் கட்கு மாலை அணிவித்து வாழ்த்திவிட்டுத்தான் செல்வார். அந்த நேரத்தில் தலைவர் கலைஞரின் உள்ளமெல்லாம் துடிக்கும். கண்களில் ஈரம் மெல்ல எட்டிப் பார்க்கும். மறக்க முடியாத பசுமையான நினைவல்லவா? சாவிலிருந்து மீண்ட காட்சியல்லவா? வாழ்வளித்துக் காத்த அம்மையார் அல்லவா அவர்?

இன்று இந்த நிகழ்ச்சி பற்றி உரையாடினாலும் கலைஞர் நெகிழ்ந்து விடுவார். நாவலருக்கு இது செல்லரிக்கப்பட்ட ஏட்டின் சிதைந்து போன வரி. ஆனால் கலைஞருக்கோ நெஞ்சக் கல்லில் செதுக்கப்பட்ட வைர வரிகள்.

நாடகம் நடத்துவதில் ஆர்வம் காட்டி அனைவருக்கும் அறிமுகமாகியிருந்த கலைஞர்-மாநாட்டில் தாக்கப்பட்ட தற்குப்பின் பெரியாராலும் அண்ணாவாலும் அன்போடு அரவணைக்கப்பட்ட கலைஞர்-நாவலர் எழுதிய வரலாற்றில் காணப்படவில்லை. அன்றும் நாடகம் நடத்தியும், கட்டுரை எழுதியும் காங்கிரசாரின் கடுஞ்சினத்துக்கு ஆளானவர் தான் கலைஞர். இந்த வரலாற்றில் பளிச்சிடும் உண்மை கலைஞரின் கங்கு கரையற்ற இயக்க ஆர்வம்தான். அது இந்த 72-ஆம் அகவையிலும் மேலும் கூடியிருக்கிறது - கூர்மை பெற்றி ருக்கிறதே தவிரக் குறைந்து போய்விடவில்லை.

# கோவை, முத்தமிழ் விழா

தமிழ் வளர்க்கும் இயக்கமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்ந்த காரணத்தால் 1950-இல் அறிஞர் அண்ணாவின் விருப்பப்படி கோவையில் முத்தமிழ் விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. கழகத் தோழர்களின் வேகமான ஒத்துழைப்புடன் அந்த மாநாடு இரண்டு நாட்கள் விறுவிறுப்பாக நடைபெற்றது. அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து வீறு கொண்ட உரையாற்றியவர் நாவலர் ச. சோம சுந்தர பாரதியார் ஆவார். வேகமாகக் கிளர்ந்தெழுந்த தி.மு.க.வின் முத்தமிழ் விழா ஒரு வேகமான தொடக்கம். அதிலும் புலமைச் செருக்குடைய ஒருவரின் முழக்கம். மாநாட் டுக்குத் தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பினைப் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் ஏற்றார். 1949-இல் தி.க.-தி.மு.க. பிரிவு ஏற்பட்ட காரணத்தால் திராவிட இயக்க அரசியலிலிருந்து சிறிது ஒதுங்கியிருந்த புரட்சிக் கவிஞர் முதலில் மாநாட்டுக்கு வரத் தயங்கினாலும், பின்னர் ஏற்றார். ஏற்றுக் கொண்டு தலைமை தாங்கிச் சிறப்பித்தார். காங்கிரசுப் பேரியக்கத்தில் தமிழ்ப் பற்றுக்கு இடமில்லை என்பதை உணர்ந்தும் மொழியை முன்னெடுத்துச் செல்லும் அறிஞர் அண்ணா, கலைஞர், பேராசிரியர், நாவலர் போன்றவர்களின் பேச்சு, எழுத்துவன் மையால் ஈர்க்கப்பட்டும் பல தமிழன்பர்கள் இந்த மாநாட்டில் குழுமினர்.

தமிழ்ப் பேராசிரியர்கள், புலமை சான்றோர்கள், துடிப் புள்ள கவிஞர்கள் என்று பலரும் பங்குபெற்ற மாநாடாக நடைபெற்றது அது. அறிஞர் அண்ணா அவர்கள் தனக்கே யுரிய நுண்மாண் நுழைபுலத்துடன் கூடிய ஆராய்ச்சிமிக்க அருவிப் பேச்சை நிகழ்த்தினார்.

புரட்சிக் கவிஞர் தம் தலைமையுரையில் 'முத்தமிழ்' என் பதன் விளக்கம்; முத்தமிழையும் வளர்ப்பதற்கான வழிமுறைகள் ஆகியவை குறித்து விரிவாகப் பேசினார்.

அப்போது அவர் கூறிய கருத்து, தமிழ்நாடு தழுவிய அளவில் அரசியலுக்கும் அப்பாற்பட்டு 'தமிழ் இலக்கியப் பெருமன்றம்' என்ற ஒன்றை நிறுவ வேண்டும் என்பதுதான்.

இந்த மன்றம் குறித்து, அது வேண்டுமா வேண்டாமா எனும் சிக்கல் ஏதும் எழவில்லை. அனைவரும் பாவேந்தர் கூறிய 'தமிழ் இலக்கிய மன்ற' அமைப்பை ஏற்றுக் கொண்டனர். அவையில் எழுந்த சிக்கலே பெயரை அப்படியே வைத்துக் கொள்வதா என்பதுதான். காரணம் 'இலக்கியம்' தமிழ்ச்சொல்லா, வடசொல்லா என்ற ஐயம் பிறந்தது தான். நம் புலவர்களுக்குக் கேட்க வேண்டுமா? வாய்ப்புக் கிடைத்தால் தங்கள் சொல்லாராய்ச்சி வளங்களை எல்லாம் வாரிக் கொட்டிவிட மாட்டார்களா! அங்கே மாநாட்டு மேடையில் அதுதான் நடந்து கொண்டிருந்தது. கலைஞர் இந்த நேரத்தில் வெளியூர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டுப் பகல் 12 மணிக்கு அப்போது தான் உள்ளே நுழைந்தார். அந்த நேரத்தில் மாநாட்டுத் தலைவர் அறிவிப்பு காதில் விழுந்தது. "இப்போது இலக்கணப் புலவர் கா. வெள்ளை வாரணனார் இலக்கியம் தமிழ்ச் சொல்லா என்பது குறித்துத் தன் ஆராய்ச்சி உரையை வழங்குவார்" என்ற முன்னுரையுடன் வெள்ளைவாரணனார் உரையாற்ற எழுந்தார். இலட்சியம் எனும் வடமொழியிலிருந்து பிறந்ததுதான் இலக்கியம் எனும் சொல். அதே போல் இலட்சணம் எனும் வடசொல்லிலிருந்து பிறந்ததுதான் 'இலக்கணம்' எனும் சொல். இது ஒரு சாரார் கருத்து. இலக்கு என்பது குறிக்கோளை உணர்த்தும் தமிழ்ச் சொல். இலக்கு + அணம் இலக்கணமானது. இலக்கு + இயம் - இலக்கியமாகிறது. இலக்கு உடையது - குறிக்கோள் உடையது இலக்கியம். எனவே இலக்கியம் தமிழ்ச்சொல். இது மற்றொரு சாரார் கருத்து.

இப்படியாக விவாதம் நீண்டது. வெள்ளைவாரணனார் பேசி முடித்ததும் கலைஞர் பேசுவதற்கு அழைக்கப்பட்டார். தி.மு.கழகம் தொடங்கி ஓராண்டே ஆகியிருந்த காலம்.

தி.மு.க.வின் பேச்சாளர்கள் எல்லாம் நாடெங்கும் கூட்டங்களைப் போட்டு வேகமாகப் பணியாற்றிய காலம். அன்று நிலைபெற்றிருந்த காங்கிரசாரின் எதிர்ப்பு ஒரு பக்கம். பிரிந்து வந்ததால் தந்தை பெரியாரின் தொண்டர்கள் தந்த எதிர்ப்பு மறுபுறம். இந்த இரண்டையும் எதிர்த்து மக்கள் நடுவில் நிற்க வேண்டுமானால் வேகமான பேச்சு தேவைப்பட்டது. அன்று கலைஞருக்கு 26 அகவை. இளமை வேகத்துக்கு என்ன குறைச்சல்? அன்று கலைஞரின் பேச்சைப் பற்றி மக்கள் நடுவில் இருந்த புகழ்மொழி ஒன்று; அது 'கலைஞரின் பேச்சு; கைவாள் வீச்சு' என்பதுதான். இந்த நிலையில் அதுவும் 'இலக்கியம்' பற்றிய சர்ச்சையுடன், பகல் 12 மணிக்கு மேல் மேடையேறிய கலைஞர் பேச்சில் எவ்வளவு வேகமும் சூடும் சுவையும் இருந்திருக்கும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

கலைஞரைப் பேச அழைக்கும் போதே 'நாடகப் புலவர் கருணாநிதி இப்போது பேசுவார்' என்றுதான் மாநாட்டுத் தலைவர் பாவேந்தர் அழைத்தார். அதுவே தோழர்களிடையே ஒரு பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் உண்டாக்கி விட்டது. இந்த நிலையில் இலக்கியச் சர்ச்சையும் சேர்ந்து கொண்டது. கலைஞர் எழுச்சிமிகு உரையாற்றினார். அப்போது கலைஞர் அவர்கள் இலக்கியம் தமிழ்ச் சொல்லா என்ற ஆராய்ச்சி குறித்தும் தன் கருத்தைத் தெரிவித்தார். அவரது பேச்சின் சாரம் இது தான்.

"இலக்கியம்" தமிழா அல்லவா என்பதை ஆராய்ந்திட இத்தனை ஆயிரம் மக்களைக் கூட்டி வைத்துக் காலத்தை வீணாக்கத் தேவையில்லை. இங்குள்ள புலவர்கள் ஒரு திண்ணையிலோ அல்லது கூடத்திலோ அமர்ந்து விவாதித்து முடிவெடுத்துக் கொண்டு அந்த முடிவை மட்டும் எங்களுக்குச் சொன்னால் காலம் எவ்வளவோ மிச்சப்பட்டிருக்கும்"

இவ்வாறு பேசிய கலைஞர் பிறகு வேறு செய்திகட்கு வந்து தனக்கேயுரிய வேகத்துடன் அவையின் உணர்ச்சிகளைச்

சுண்டி இழுத்துக் கொண்டிருந்தார். அவர் பேசிய வேகத்தைப் பார்த்துவிட்டு அன்று அறிஞர் அண்ணாவின் அருகில் அமர்ந்திருந்த உரைவேந்தர் ஔவை துரைசாமி பிள்ளை அவர்கள் அண்ணாவிடம் சொன்னாராம்.

"உங்கள் கட்சியில் ஹைட்ரஜன் குண்டுகளை எல்லாம் வைத்து வளர்க்கிறீர்கள் போலிருக்கிறதே!" என்று.

அந்த ஹைட்ரஜன் குண்டுதான் பாவேந்தர் தலைமையில் அன்று வெடித்துத் தள்ளியது.

இந்த நிகழ்ச்சி குறித்து நான் தலைவர் கலைஞரிடம் கேட்டபோது அதனை நினைவு கூர்ந்து நெகிழ்ச்சியுடன் அதனை எடுத்துச் சொன்னார். பழைய நினைவுகளை அசை போடுவதில் மனிதருக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி! இன்பம்!

அதுவும் பாவேந்தர், அறிஞர் அண்ணா, தமிழறிஞர்கள் தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியில் தன் பங்கு என்ன என்பதை எடுத்துச் சொல்லும்போது கலைஞர் நெகிழாமல் இருப்பாரா என்ன?

# திரைப்படத்தில் பாவேந்தர் பாடல்

1952-இல் தலைவர் கலைஞர் அவர்களின் விறுவிறுப்பான உரையாடலுடன் 'பராசக்தி' திரைப்படம் உருவாகிக் கொண்டிருந்தது. அந்தப் படத்தில் தான் சிவாஜி கணேசன் முதன் முதலில் நடித்துப் புகழ் ஈட்டத் தொடங்கினார் என்பது வரலாறு.

'பராசக்தி' பல புதுமைகளைக் கொண்டது. அதில்தான் பாரதியாரின் 'நெஞ்சு பொறுக்குதில்லையே!' எனும் பாட்டு இடம் பெறுகிறது. தக்க இடத்தில் பொருத்தப்பட்ட அந்தப் பாட்டை இசைச்சித்தர் சிதம்பரம் செயராமன் அவர்கள் தன் இனிய குரலில் உருக்கமாகப் பாடி நம் நெஞ்சில் பதித்து விட்டார். இந்த நிலையில்தான் பாவேந்தரின் பாடலும் அதில் இடம் பெற வேண்டும் என்று கலைஞர் கருதினார்.

பராசக்தி படத்துக்குள்ளேயே ஓர் இடத்தில் திரு.வி.கே. இராமசாமி பேசும் உரையாடலிலேயே 'எதிர்பாராத முத்தம்' போன்ற பல நூல்களின் பெயர்கள் அறிமுகப்படுத்தப்படும். அந்த அளவுக்குப் பாவேந்தரின் படைப்புகளில் கலைஞர் ஈடுபாடு கொண்டிருந்தார்.

இந்த நிலையில் ஒரு நல்ல பாடலைத் தேர்ந்தெடுத்து இணைத்து அதையே நடனமாடும்போது பாடுவதாக அமைத்துவிடுவது என்று கலைஞரும் பட உரிமையாளர் பெருமாள் அவர்களும் முடிவு செய்தனர். இதற்காகக் கலைஞர் பாவேந்தரை நேரில் சந்தித்தார். 60 அகவை படைத்த பாவேந்தரை 27 அகவை இளைஞரான கலைஞர் சந்திக்கிறார் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

பாவேந்தரைச் சந்தித்துத் தன் கருத்தைச் சொன்னதும் பாவேந்தர் பெரிதும் மகிழ்ந்தார். தாராளமாகத் தன் பாட்டைத்

திரைப்படத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்று ஒப்புதல் தந்து விட்டார். இசைவு கிடைத்து விட்ட எல்லையற்ற மகிழ்ச்சி கலைஞருக்கு! என்றாலும் திரையுலகத்துக்கேயுரிய ஒப்பந்தம் முடிந்தாக வேண்டுமே! அதில் ஏதாவது முன்பின் ஏற்பட்டுப் பாவேந்தர் தனக்கேயுரிய விடாப்பிடியுடன் மறுத்துவிட்டால்...! இந்தச் சிந்தனையுடன் தயங்கித் தயங்கிக் கலைஞர் பேசினார். "ஐயா! தங்கள் பாடலை இணைத்துக் கொள்ள அனுமதி தந்ததற்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை! என்றாலும் தயாரிப்பாளர் தங்களுக்குரிய சன்மானத்தை வழங்க விரும்புகிறார். இந்தப் பாடலுக்காக நாங்கள் எவ்வளவு தர வேண்டும் என்று...." தலைவர் கலைஞர் வாக்கியத்தை முடிக்கவில்லை. தயங்கித் தயங்கி இழுத்தார், அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த பாவேந்தர் நிமிர்ந்தார். பார்வையாலேயே கலைஞரை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். கலைஞருக்கு உதறல் எடுத்துவிட்டது. என்ன சொல்லப் போகிறாரோ என்ற கவலைதான் அவருக்கு! பாவேந்தர் அமைதியாகவே கூறினார்.

"என் பாட்டுக்குப் பணமா! நன்றாக இருக்கிறது! அதெல்லாம் வேண்டாம் எனக்கு! "திராவிட நாடு"" பாட்டு படத்தில் இடம் பெற்று நாட்டு மக்களிடத்தில் பரவிடப் போகிறதே அது போதாதா! ஒரு கொள்கைப் பாட்டுக்கு இது போதாதா! தனியாகப் பணம் வேறு கொடுக்க வேண்டுமா!? இதற்கு நான் என்ன தொகை தர வேண்டும் சொல்!" என்றார்.

கலைஞர் இன்ப அதிர்ச்சியிலிருந்து மீள வெகு நேரமாயிற்று. பாவேந்தரின் கைளைப் பற்றிக் கொண்டு நன்றி தெரிவித்தார்.

அந்தக் கொள்கைப் பாட்டு - 'பராசக்தி'யில் இடம் பெற்ற முதல் பாட்டு இது தான்.

வாழ்க வாழ்கவே
வளமார் எமதுதி ராவிட நாடு
வாழ்க வாழ்கவே!

சூழும் தென்கடல் ஆடும் குமரி
தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்
ஆழும் கடல்கள் கிழக்கு மேற்காம்
அறிவும் திறலும் செறிந்த நாடு (வா)

பண்டைத் தமிழும் தமிழில் மலர்ந்த
பண்ணிகர் தெலுங்கு துளுமலை யாளம்
கண்டை நிகர்கன் னடமெனும் மொழிகள்
கமழக் கலைகள் சிறந்த நாடு (வா)

அள்ளும் சுவைசேர் பாட்டும் கூத்தும்
அறிவின் விளைவும் ஆர்ந்திடு நாடு
வெள்ளப் புனலும் ஊழித் தீயும்
வேகச் சீறும் மறவர்கள் நாடு (வா)

அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு (வா)

அமைவாம் உலகின் மக்களை யெல்லாம்
அடிநாள் ஈன்ற அன்னை தந்தை
தமிழர்கள் கண்டாய் அறிவையும் ஊட்டிச்
சாகாத் தலைமுறை ஆக்கிய நாடு (வா)

ஆற்றில் புனலின் ஊற்றில் கனியின்
சாற்றில் தென்றல் காற்றில் நல்ல
ஆற்றல் மறவர் செயலில் பெண்கள்
அழகில் கற்பில் உயர்ந்த நாடு (வா)

புனலிடை மூழ்கிப் பொழிலிடை யுலவிப்
பொன்னார் இழையும் துகிலும் பூண்டு

**கனிமொழி பேசி இல்லறம் நாடும்**
**காதல் மாதர் மகிழுறும் நாடு (வா)**

**திங்கள் வாழ்க செங்கதிர் வாழ்க**
**தென்றல் வாழ்க செந்தமிழ் வாழ்க**
**இங்குத் திராவிடர் வாழ்க மிகவே**
**இன்பம் சூழ்ந்ததே எங்கள் நாடு! (வா)**

இன்றைக்குத் (1995-இல்) தமிழ்ப்படத்தில் ஒரு பாட்டு!

**"பாலு.... பாலு.... கோபாலு!**
**நான் போகப் போறேன் நேபாளு!"**

இந்தப் பாட்டுக்கு விலை என்ன தெரியுமா? 15000 உருபாய். பாவேந்தரின் பெருமை இப்போது தெரிகிறதல்லவா?

பாவேந்தரின் பாடலை அழகாக இணைத்துக் கொண்ட கலைஞரையும், இயக்குநர்கள் கிருட்டிணன் பஞ்சுவையும் தயாரிப்பாளர்கள் பெருமாள் அவர்களையும், ஏ.வி. மெய்யப்பன் அவர்களையும் நாடு மறக்குமா?

# பாவேந்தர் மறைவு

'பாண்டியன் பரிசு' காப்பியத்தைப் படமாக எடுத்துவிட வேண்டும் எனும் முனைப்புடன் சென்னை வந்து தங்கினார் பாவேந்தர். பல்வேறு காரணங்களால் அவரால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. நம் தலைப்புக்குத் தேவையில்லாதது என்பதால் அந்தப் பகுதிக்குள் நான் நுழையவில்லை. இந்த நிலையில் 1964-இல் பாவேந்தர் நோய் வாய்ப்பட்டார். சென்னைப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பாவேந்தர் குணமாகாமலேயே 1964 ஏப்ரல் 21-ஆம் நாள் இயற்கை எய்தினார். அதன் பின் அவரது உடல் சென்னை தியாகராய நகரில் இராமன் தெருவில் உள்ள 10-ஆம் எண் வீட்டில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. தலைவர் கலைஞர் அவர்களும் நாவலர் போன்ற வேறு பலரும் சென்று உடலுக்கு மலர் வளையம் வைத்து வணங்கினர்.

தமிழின எழுச்சிக்காகப் பாடிய பாவேந்தரின் வாய் அடங்கியது. 'இராவண காவியம்' நூலுக்கு அணிந்துரை எழுதிய கலைஞர் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தவரை, இருபதாம் நூற்றாண்டு ஒரு மறுமலர்ச்சி இயக்கம் தோன்றிய நூற்றாண்டு எனலாம். இந்நூற்றாண்டின் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு - மறுமலர்ச்சி இலக்கியத்திற்கு - வித்தூன்றியவர் 'செந்தமிழ்த் தேர்ப்பாகன்' பாரதி. பாரதிக்குப்பின், செந்தமிழ் இலக்கிய உலகில், தன்மான இயக்கத்திற்கும், பகுத்தறிவுக் கொள்கைக்கும், இவற்றிற்கெல்லாம் மேலாகத் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்க் கவிதையுலகத்திற்கும் செயற்கரிய பெருந் தொண்டு செய்தவராகப் புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களைக் குறிப்பிடலாம்."

அந்தப் புரட்சிப் பாவேந்தர்தான் தன் வாழ்வை முடித்துக் கொண்டு நிறைவடைந்துவிட்டார். இதையெல்லாம் நினைத்து அன்று கலைஞர் பெரிதும் நெகிழ்ந்து போனார்.

# பாவேந்தரின் உடல் நல்லடக்கம்

மறைந்த புரட்சிக்கவிஞரின் உடல் புதுவைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பொது மக்கள் அஞ்சலிக்குப்பின் 1964 ஏப்ரல் 22-ஆம் நாளன்று பாவேந்தரின் உடல் நல்லடக்கம் செய் யப்பட்டது- தலைவர் கலைஞர் அவர்கள் புதுவை சென்று பாவேந்தரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு இடுகாடு வரை சென்றார். அவருடன் நாவலர் என்.வி.நட ராசன், சத்தியவாணிமுத்து போன்றவர்களும் சென்றனர்.

அங்கே நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் கலந்து கொண்டு தலைவர் கலைஞர் அவர்களும் பாவேந்தரின் பல்வேறு சிறப்பு களையும் நினைவுகூர்ந்து உருக்கமாக உரையாற்றினார்.

பாவேந்தரின் கனல் கக்கும் கவிதை வரிகள்! மூட நம்பிக்கையின் முதுகெலும்பை முறிக்கும் முற்போக்குக் கருத்துகள்! நெஞ்சைச் சுண்டியிழுக்கும் சந்தங்கள். எளிய நடையில் ஆற்றொழுக்காக நடைபோடும் அழகிய வருணனைகள்! கருதக்கருதக் களிப்பை ஊட்டும் கற்பனை வளம்! இவற்றையெல்லாம் வாரி வாரி வழங்கித் திராவிட இயக்க வரலாற் றுக்குச் சிறப்புச் சேர்த்த பாவேந்தர் இப்படி அடங்கிப் போய் விட்டாரே என்று கலைஞர் உருகிப் போய் விட்டார்.

# புரட்சித் தீபம் அணைந்தது

பாவேந்தர் மறைந்த காலத்தில் கலைஞர் அவர்கள் பாவேந்தரைப் பற்றி எழுதியவற்றையும் பின்னர் அவருக்காகச் செய்த சிறப்புகளையும் இங்கே அவரே தொகுத்தளித்திருக்கிறார்.

"இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞராக மலர்ந்து புரட்சிப் பொறிகளைப்-புதுமைச் சிந்தனைகளைத்-திரட்டுப்பாலொத்த தேன் தமிழ்ச் சொற்களிலே வாரி வீசியவண்ணம் இருந்த அணையாத கவிதைக் கனலாம் பாவேந்தர் பாரதிதாசன் 21-4-1964-இல் சென்னையிலே இயற்கை எய்தினார்.

ஈன்ற தமிழன்னையே இதயங்குமுறிக் கதறிப் புலம்பிட-இலக்கிய உலகமே இடிந்து துவண்டு ஏங்கிப் பதறிட-உலகிலே எந்த மூலையில் தமிழ் பேசிடுவோர் இரைந்து கிடந்தாலும் அங்கெல்லாம் இருளின் நிழல் வேகமாய்க் கவிந்திட - தம்முடைய உடல் வாழ்வை விட்டுப் பிரிந்தார் அந்த ஒப்பற்ற மாக்கவிஞன்.

**பாளைச் சிரிப்பு -**
**பசு நெய்யின் நறுமணம்**
**வாளைமீன் துள்ளல் -**
**வரிப்புலியின் கனல் பார்வை -**

-எல்லாமே இணைந்திட்ட கவிதைச் சுரங்கமே பாரதிதாசன்.

பாற்கடலைப் பற்றிப் புராணங்கள் பகர்ந்திடக் கேட்டிருக்கிறோம்.. பாரதிதாசனோ 'பாக்கடலாகவே' பரந்து விரிந்து தமிழ் மண்ணின் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்றார்.

**அந்தக் கடலிலே -**
**உவமையழகு-**
**உணர்ச்சித் துடிப்பு-**
**புதுமை நோக்கு-**
**புரட்சி வெடிப்பு-**

-அனைத்துமே அலைகளாகப் பொங்கியெழுந்து சீறிப் பாய்ந்தன - சிலம்பமும் ஆடின.

அவருடைய உருவமே மிடுக்கானது; அவர் தம் உள்ளமோ அதை விட மிடுக்கானது; அந்த உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய சொல்லாட்சியோ எல்லாவற்றையும் விட மிடுக்கானது; இழிதகைமையை -ஈனச் செயல்களை- மிதித்துத் துவட்டக் கூடியது.

**"கொலை வாளினை எடடா-மிகு**
**கொடியோர் செயல் அறவே!"**

-என்பன போன்ற புரட்சி தெறித்திடும் வரிகளை இன்னொருவரால் புனைந்திடத்தான் முடியுமா?

**"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு.**
**தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி**
**நெற்சேர உழுதுழுது பயன் விளைத்த**
**நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின்**
**தோள்கள்?"**

- எனக் கேட்டு

**"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் - அவன்**
**காணத் தகுந்தது வறுமையாம் -**
**பூணத் தகுந்தது பொறுமையாம்"**

- என்றெல்லாம் தொழிலாளர் தோழராய் உரத்த குரல் எழுப்பிச் சமதர்மப் பூங்காவைச் சமைத்திட அவர் துடித்த துடிப்பினை யாரே மறுத்திட முடியும்?

**"தட்டுப்படாதபெரும்-பொருட்கொரு**
**சாதியும் உண்டோடா! படுவாய்**
**சாதியும் உண்டோடா!**
**மட்டற்ற செம்பொருட்கே-முரண்படும்**
**மதங்கள் உண்டோடா!"**

-என்று சாதிச்சழக்குகளைச்-சரித்திரச் சடங்குகளை ஆத்திரத்துடன் சாடிய ஆண்மையாளர்-அரிமாவும்-அவரே!

**"கோரிக்கை யற்றுக் கிடக்குதண்ணே இங்கு**
**வேரில் பழுத்த பலா! - மிகக்**
**கொடியதென் றெண்ணிடப்பட்டதண்ணே குளிர்**
**வடிகின்ற வட்ட நிலா!"**

-என்று பெண்டிர்க்காகக் கண்ணீர் வடித்திட்ட பேரன்புத் தாயுமாவார் அவர்!

**"தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லுந்**
**தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!"**

-என்று போர்ப்பரணி பாடிய வீர மறவரும் அவரே ஆவார்!

திருவாரூரில் தமிழ் மாணவர் மன்றம் என்னும் ஓர் அமைப்பினை உருவாக்கி என்னாலியன்ற தொண்டினை இயற்றி அதன் ஓராண்டு நிறைவு விழாவினை நான் நடத்திய காலை, அதனை வாழ்த்திடும் முகத்தான், அவர் வரைந் தனுப்பிய வீரங்கொப்பளித்திடும் வரிகள் இன்றைக்கும் என் இதயத்திலே ஈரங் காய்ந்திடாமல்தான் எழுச்சி யினை-இனமொழி, நாட்டுப் பற்றினைச்-சூடேற்றிய வண்ணமே உள்ளன.

இவ்வாறு செந்தமிழ் வளர்ச்சிக்கும்-இந்தி எதிர்ப்பி னுக்கும்-தொழிலாளர் நலனுக்கும் தோகையர் வாழ்வுக் கும்-மொத்தத்தில் திராவிட இன நலனுக்கென்றே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அந்தப் பாட்டுலகப் பகலவன்

மறைந்தது, தமிழ் மண்ணிற்குப் பேரிழப்பாகவே முடிந்தது-காரிருளையே தந்தது.

**'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா!**
**காடு கமழும் கற்பூரச் சொற்கோ!**
**கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்!**
**திறம்பாடவந்த மறவன் புதிய**

**அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்**
**படரும் சாதிப் 'படைக்கு மருந்து'!**
**மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!**
**அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்!'**

- என்றெல்லாம் பாரதியாரைப் பற்றிப் பாடினாலும் அந்த வைர வரிகள் தமக்கே பொருந்திடுமாறு வாழ்ந்திட்ட புரட்சிப் பாவலனே அவர்!

**"ஆசைக் குழந்தைகளே!**
**அன்பு மனையாளே!**
**ஓசைப்படாமல் இருப்பீர் ;**
**ஒதுங்கி நிற்பீர்!**

**துன்பத்தைக் கொஞ்சம் சுவை**
**பார்க்கப் போகிறேன்**
**இன்பத்தை நீட்டாதீர்**
**என்னிடத்தில்-"**

-என்று சொல்லாமல் சொல்லித் துயில் கொண்டு விட்டார் பாமாலை பல தந்திட்ட அந்தப் பாமலை!

சென்னை அரசினர் மருத்துவமனையில் இறந்திட்டார் என்கிற செய்தி எட்டியதுமே நானும் நண்பர்களும் விரைந்திட்டோம் அவர் இல்லத்திற்கு; அவருடைய கால்களிலே பூமாலைகளோடு-கண்ணீர் மாலைகளையும் காணிக்கையாக்கினோம் இறுதி அஞ்சலியாக.

கழகத்தின் கொடிகள் எல்லாம் மூன்று நாட்கள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன துக்கத்தின் அறிகுறியாக.

ஆனால் அவர் தோன்றி வாழ்ந்த புதுவையிலே அன்றிருந்த காங்கிரஸ் அரசோ எந்த மரியாதையும் செலுத்தவில்லை. கட்சிக் கொடிகளை இறக்குகின்ற மரியாதையைக் கூடக் காங்கிரஸ் கட்சி காட்டிடவில்லை.

1969-இல் உதயமாகிய தி.மு.கழக அரசுதான் புதுவை மாநிலத்தில் புரட்சிக் கவிஞருக்குச் சகலவிதமான அரசு மரியாதைகளையும் தெரிவித்தது.

அவர் பிறந்த வீட்டை அரசே விலைக்கு வாங்கி நினைவுச் சின்னமாக்கி அங்கே நூல் நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறது.

ஆண்டுதோறும் அவர் பிறந்த நாளுக்கு அரசாங்க விடுமுறை தந்து விழா எடுத்து வருகிறது.

அவர் பாடியுள்ள 'வாழ்வினிற் செம்மையைச் செய்பவள் நீயே!' என்ற பாடலை அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்த் தாய் வாழ்த்து என ஆக்கியது நமது கழகப் புதுவை அரசு.

சென்னையில் இயற்கை எய்திய புரட்சிக் கவிஞரின் சடலம் மறுநாள் 22.4.64 அன்று புதுவைக்குக் கொண்டு செல்லப் பட்டு அங்கே பெருமாள் கோவில் தெருவிலுள்ள அவரது இல்லத்திலே பார்வைக்கு வைக்கப்பட்டது.

1946-ஆம் ஆண்டில், அண்ணா அவர்களின் பெரு முயற்சியால் ரூ. 25,000/- கொண்ட பொற்கிழியும், பொன்னாடையும் பாவேந்தருக்கு வழங்கப்பட்டன அல்லவா? அதே பொன்னாடை அவருடைய சடலத்தின் மீது, இறுதி நாளிலும் போர்த்தப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

சவ ஊர்வலத்தில் கலந்து கொள்ள நானும் சென்னையிலிருந்து புதுவை சென்றேன். நாவலர், சிலம்புச் செல்வர்

ம.பொ.சி., என்.வி.என்., சத்யவாணிமுத்து, டி.கே. சண் முகம் முதலான தலைவர்களும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களும் ஊர்வலத்திலே கலந்து கொண்டனர்.

பாவேந்தரின் மறைவினை ஒட்டி அடியிற்கண்டவாறு ஓர் இரங்கல் செய்தியினையும் அப்போது நான் விடுத் திருந்தேன்:

**"புரட்சிக் கவிஞர் மறைந்து விட்டார் -**
**புதுவைக் குயில் பறந்து விட்டது!"**

"தமிழகத்தில் 'குடும்ப விளக்கை' ஏற்றி வைத்தார் - 'பாண்டியன் பரிசை' வழங்கினார். 'அழகின் சிரிப்பை' அள்ளிக் கொட்டினார். அவரது 'எதிர்பாராத முத்தம்' பெற்ற கலை அழகி அன்றலர்ந்த செந்தாமரையானாள்."

"கடவுள் பெயரால்-மதத்தின் பெயரால்-இழைக்கப் படும் கொடுமைகளைச் சாடினார்."

"பகுத்தறிவு புரியின் காவலர்களாக அவரது பழைய கவிதை வரிகளை நிறுத்தி வைத்துவிட்டு, அவர் போய் விட்டார்."

"பாரதிதாசன்-என்பது இனி ஒரு தனி மனிதரின் பெய ரல்ல-தமிழ் இன்பம் பொழிகின்ற கவிதைத் தொகுப்பின் பெயர்."

"அந்தப் பாரதிதாசனை என்றென்றும் நம்மிடையே வைத்துப் போற்றுவோம்."

# பாரதிதாசன் விழா

தி.மு.கழகம் வேகமாக வளர்ந்த காலத்தில் அண்ணா, கலைஞர் பேராசிரியர் முதலான பலரும் பல இதழ்களை நடத்தி வந்தனர். கட்சித் தோழர்களும் ஆட்சிக்கு அப்பாற்பட்டவர்களும் இந்த இதழ்களை அவற்றின் இலக்கிய நயத்துக்காகவும் அரசியல் திறனாய்வுக்காகவும் வாங்கிப் படித்தனர்.

அதே நேரத்தில் அண்ணா, கலைஞர், கண்ணதாசன், ஏ. கே. வேலன், அரங்கண்ணல், எம்.ஜி.இராமச்சந்திரன், கே. ஆர். இராமசாமி, எஸ்.எஸ். இராசேந்திரன் போன்றோர் திரைத்துறையில் சிறந்து விளங்கினர். திராவிட இயக்க முன்னோடிகளான இவர்களை அழைத்துப் பேசச் செய்ய வேண்டுமென்று பல இலக்கிய மன்றங்கள், கல்லூரிகள், பள்ளிகள் விரும்பின. இதுபற்றிக் கலைஞரே எழுதுகிறார் பாருங்கள் :

"தமிழகத்தில் எத்தனையோ இயக்கங்கள்-கட்சிகள்-தோன்றிய போதிலும் பேச்சுக் கலைக்குப் பேரெழிலைப்-பெரும் வரவேற்பினைப் பெற்றுத் தந்திட்ட பெருமை தி.மு.கழகத்திற்கே உண்டு. கழகத்தைச் சார்ந்தவர் பேச வருகிறார் என்றால் கடலெனத் திரண்டு விடுவர் மக்கள். கல்லூரிகளில், பள்ளிகளில் கல்வி கற்கின்ற மாணவ மணிகளுக்கும் சுவையான சொற்பொழிவினைக் கேட்கும் ஆர்வம் ததும்பி வழியும். தங்கள் இலக்கிய மன்றங்களுக்கு எங்களை அழைத்திட வேண்டும் என வற்புறுத்துவர்.

ஆனால், அந்த நாட்களில் கல்லூரி முதல்வர்களுக்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் எங்களை அழைப்பதென்றாலே எங்கே 'கட்சி அரசியல்' பேசிவிடுவோமோ என்கிற கலக்கம்.

'கட்சி அரசியலுக்கு' அப்பாற்பட்டும் கொடுக்கப்பட்ட

தலைப்பினை ஒட்டியே இலக்கியச் சொற்பொழிவினை நிகழ்த்திடவும் கழகத்தவரால் இயலும் என்பதனையும் எத்தனையோ தடவைகள் மெய்ப்பித்திருக்கிறோம்.

அவ்வாறு இலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றிடும் வாய்ப்புகள் 1965–நவம்பர்த் திங்களில் எனக்கு அடுத்தடுத்துக் கிட்டின.

சென்னை-கெல்லட் உயர்நிலைப் பள்ளியில் பாரதியார் விழாவில் கலந்து கொண்டு அவர்தம் சிறப்பியல்புகளை சீர்திருத்த எண்ணங்களை-இந்தியையும்-சமஸ்கிருதத்தையும் வடநாடுவரை சென்று அவர் பயின்றிருந்த போதிலும் செந்தமிழே பிறமொழிகளை விடத் தேனென இனிப்பது எனக் கூறிய அவருடைய தெளிவினைப்-பல்வேறு சான்றுகளுடன் பாராட்டிப் பேசினேன்.

சென்னை விக்டோரியா மாணவர் விடுதித் தமிழ் மன்றத்தினர் நடத்திய பாரதிதாசன் விழாவில் பங்கு கொண்டு உரையாற்றினேன். அப்போது –

"பாரதிதாசன் தாழம்பூவைப் போன்றவர். தூரத்திலிருந்து மணத்தை அனுபவிக்கலாம்; பக்கத்தில் சென்று தடவிப் பார்த்தால் முள்தான் கையில் ஏறும். மணம் என்று சொன்னது அவரது கவிதைகளை; முள் என்று சொன்னது தனிப்பட்ட பாரதிதாசனின் குணங்களை. (எனினும்) அவர் கவிதைகளில் உவமை உண்டு; உண்மை உண்டு; அத்தனையும் 'உண்டு' (அருந்தி) ஊமை பேசுவான்; கூனன் நிமிர்வான்; குருடன் விழி பெறுவான்!" – என்று குறிப்பிட்டேன்.

அடுத்து, சட்டக் கல்லூரித் தமிழ் இலக்கியப் பேரவையில், 'குறளோவியம்' என்னும் தலைப்பில் உரையாற்றினேன். அப்போது –

**"சொல் வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க**
**வில் வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான்"**

– என்னும் குறட்பாவை விளக்கி, வில்லின் வணக்கமும் விரோதியின் வணக்கமும் ஒன்றே என்பதை எடுத்துக் காட்டினேன்.

அவ்வாறு தொடர்ந்தாற் போல் ஒரே திங்களில் நான் நிகழ்த்திய இலக்கியச் சொற்பொழிவுகளில், திருமதி முத்து லெட்சுமி ரெட்டியார் அவர்கள் சென்னையில் தோற்றுவித்து நடத்திய 'அவ்வையகம்' விழா ஒன்றில் கலந்து கொண்டு ஆற்றிய சொற் பொழிவு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்."

மேற்கண்டவாறு கலைஞர் எழுதுகிறபோது அவரது இலக்கியச் சொற்பொழிவுகளில் பாரதிதாசன் எப்படி இடம் பிடித்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ள முடியும், எந்த நிலைமையிலும் பாவேந்தர் கலைஞர் உள்ளத்தை விட்டு இம்மியும் அகலவில்லை; நீக்கமற நிறைந்துள்ளார் என்றே கூறலாம்.

# கடற்கரையில் பாவேந்தர் சிலை

1968-இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு தமிழக அரசால் நடத்தப்பட்டது. அறிஞர் அண்ணாவின் தலைமையில் அமைந்த அரசு குடியரசுத் தலைவரையும் மற்றும் உள்ள பெருந்தலைவர்களையும் அழைத்தது மட்டுமன்றி, தமிழ கத்தில் இருந்த அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து இணைத்துச் சிறப்பித்தது. இன்று 'தமிழ் மாநாடு' எனும் பெயரில் கட்சி விளம்பர மாநாட்டை - உலகமகா ஊழல் மாநாட்டை நடத்துபவர்கள், தமிழறிஞர்களை அவமானப்படுத்தி அனுப்பி வைப்பவர்கள், நூற்றுக்கு மேற்பட்ட தமிழறிஞர்களைச் சிறையில் தள்ளி மகிழ்ச்சி யடைபவர்கள் 1968-இல் நடைபெற்ற மாநாட்டின் மாண்பை உணர முடியுமா?

மாநாட்டின் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஒன்றாக முதலில் அண்ணா சாலையில் அறிஞர் அண்ணா சிலையும், கடற்கரை யில் திருவள்ளுவர், அவ்வையார், இளங்கோவடிகள் கண்ணகி, கம்பர், வீரமா முனிவர், ஜி.யு.போப், கால்டுவெல், வ.உ. சிதம்பரனார், பாரதியார் ஆகியோர்தம் சிலைகளும் திறந்து வைக்கப்பட்டன. இவர்களுடன் முறுக்கு மீசைப் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் சிலையும் திறந்து வைக்கப்பட்டு இன்றும் மிடுக்குடன் நிற்பதைக் காணலாம்.

உலகத் தமிழ் மாநாட்டையொட்டி ஊர்வலம் ஒன்று சிறப்பாக நடைபெற்றது. தமிழ்ப் பண்பாட்டின் விளக்கமாகப் பல அழகோவியங்களுடனும் அழகிய சிலைகளுடனும் கூடிய அலங்கார வண்டிகள், அந்த ஊர்வலத்தில் இடம் பெற்றன.

ஊர்வலம் வண்ணப்படமாக எடுக்கப்பட்டபோது அதனை விளக்கியுரைக்கும் வகையில் கலைஞர் அவர்களே கவிதை

நடையில் பேசி ஒரு மிடுக்கையும் விறுவிறுப்பையும் உண்டாக்கியிருந்தார். அந்தக் கவிதை நடையைக் கேட்டுவிட்டு ஜெமினி எஸ்.எஸ்.வாசன் தலைவர் கலைஞர் அவர்களைக் கட்டித் தழுவி வாழ்த்தினார்.

அந்த நடையில்தான் கடற்கரையில் நிறுவப்பட்ட சிலைகளைப் பற்றிய வருணனையும் வருகிறது. பாரதிதாசன் பற்றிய வருணனையும் சிறப்பாக இடம் பெற்றிருந்தது.

# பாரதிதாசன்

## (கலைஞர் கவிதை)

08.12.1968-ஆம் நாளன்று பம்பாய் பாரதி கலைமன்றத்தில் 'பாரதிதாசன்' எனும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. அந்தக் கவியரங்கத்தின் தலைமைப் பொறுப்பேற்று அப்போது அண்ணா அமைச்சரவையில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் படைத்த தலைமைக் கவிதை இது.

கண்ணை இமை காப்பது போல்
என்னை என்றும் காப்பதற்குப் பம்பாயில்
இருக்கின்ற தோழர்களே
எண்ணெயென இரத்தத்தைப் பெய்து தந்து
தண்ணிலவாம் தமிழ்தன்னைக் காக்கின்ற தீரர்களே
வெட்டிவா என்றுரைத்தால்
கட்டிவரும் வீரர்களே
பெட்டிக்குள் இருக்கின்ற பணத்தை
ஏழை எடுத்தெடுத்துப் பார்த்து மகிழ்வதுபோல
எனை அழைத்தழைத்து மகிழ்கின்ற நண்பர்களே
மலைஎலியாம் மாவீரன் சிவாஜி கண்ட
மராட்டியத்து மண் மீது
நிலைகுலையா நேர்மையுடன் நேசமதை வைத்தவரே!
அலைபாடுங் கடல் மல்லை அங்குண்டு
தமிழ்நாட்டில்
கலைபாடுங் காவியங்கள் கவின்பாடும் சிற்பங்கள்
நஞ்சையுண்டு தஞ்சையிலே, அங்கு
நஞ்சையுண்ட சிவனார்க்குக் கோயில் உண்டு
மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்
என்று
யானை கட்டிப் போரடித்த மதுரையுண்டு

அங்கு
மீன் ஆட்சி நடத்தியதால் மீன்பொறித்த கொடியுண்டு
மீனாட்சி அம்மைக்கும் வான்முட்டும் கோயிலுண்டு
நெல்லையுண்டு சேலம் உண்டு
குற்றாலம் கோவையுண்டு வாழ்வில்

தொல்லை கண்ட காரணத்தால்
தாராவிதனில் வந்து
பேராவி போக்குகின்றீர் நீர்
மாதுங்கா வாழ்ந்தாலும் மனமெல்லாம் அங்கே
தான்; இதைக்
காதுங்காதும் வைத்தாற்போல் சொல்லுகிறேன்
ஒருமைப்பாடு காண இந்தியாவும் நம்
உரிமைப்பாடு காணத் தமிழகமும்
உயர்தனிக் கொள்கையெனக் கொண்டுவிட்டோம்
பயன்பல பெருக்குதற்குத் தொண்டு செய்வோம்
இந்த முன்னுரையுடனே
என்னுரை தொடங்குவேன்
வந்திடுக பம்பாய்க்கென்று
வருந்திமிக அழைத்ததாக
நேற்று ரங்கா சொன்னார்
வருந்தியபின் அழைத்தாரோ?
அழைத்த பின்னர் வருந்தினாரோ? அறியோம்
யாம்!
ஆனாலும் எடுத்தபணி முடிப்பதற்கு
ஏறிவிட்டோம் கவியரங்கு

பைந்தமிழால் சுவை கூட்டும்
பம்பாய் வாழ் பெரியோரே!
சிங்கக் கவிஞன் பாரதி போல்
தங்கத் தமிழ் மன்றம் கண்டவரே
மன்றேறி மணிக்கவிதை முழக்கவந்த கவிஞர்களே
குன்றேறி நீர் நிற்க முடியாது!

முடியுமா?
குன்று ஏறி நீர்நிற்க முடியுமா? புகழ்க்
குன்றேறி நீர் நிற்க முடியாதென்று
என்றேனும் சொன்னேனா? இல்லை
இன்றேனும் சொன்னேனா?
மாக்கவியென்று பாரதியைப் போற்றுகின்றார்
நான் ஒப்பவில்லை. அறைத்த
மாக்கவியா பாரதியார்? இல்லை; இல்லையா (ப்)
பணியாரக் கவியா?
யாப்பு அணி ஆரக் கவியா?
மாக்கவிதான்... அரி
மாக்கவி
தலைக்கவியவர்-புதுமைக்குத்
தலைக்கவியவர்-நாட்டு விடு
தலைக்கவியவர்
தலைப்பாகை
முறுக்கிவிட்ட குத்து மீசை
நடுநடுங்கி எதிரிகளை
ஓடவைக்கும் பார்வைப் பகலவனாம் பாரதியார்!
தலை
பா
கை
முறுக்கிவிட்ட குத்து மீசை!
கைமுறுக்கி; விட்ட குத்து -
மீசை நடுநடுங்க எதிரிகளை ஓடவைக்கும்
பார்வைப் பகலவனாம் பாரதியார்!

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்" எனப்பாடும்
அவன் சீற்றம் கண்டீரோ!
"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே!"

அடைவதற்குள் அறுதியிட்டுச் சொன்னவனாம்
அடலேறு மொழி பகரும் மன்னவனாம்
அவனுக்குச் சின்னவனாம்
இளம்மருது போன்றவனாம்
எடுத்தவுடன்
"எங்கெங்குக் காணினும் சக்தியடா தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா" என்று
பாரதி பாடென்று சொன்னவுடன் பாடிய மறவன்
பார் அதி தீரனென்று பாரதி புகழ்ந்த புலவன்
கனக சுப்பு ரத்தினம் என்று காததூரம் இருந்த
பெயரைக்
கவி பாரதிக்குத்தாசனென்று கச்சிதமாய்ச் சூட்டிக்
கொண்டான்
களம்சென்று தமிழ்காக்கக் கச்சு இதமாய்க் கட்டிக்
கொண்டான்

நிமிர்ந்த நோக்கு
நெரித்த புருவம்
நீர்வீழ்ச்சி ஓசை-நெற்
கதிர்க்கட்டு மீசை
பாட்டெழுதும் வித்தையிலே
பாரதி ரசவாதம் கற்றவனாம்-இவனைப் பார்
அதிரசவாதம் கற்றவனாம்
அதிரச வாதம் கற்றவனாம்
அத்துணை இனிப்பு இவன்பாட்டில்!
சஞ்சீவிபர்வதத்தின் சாரலுக்கு நமை இட்டுச்
சென்று
சங்கீதப் பேச்சொன்றைக் கேட்கச் சொல்வான்.
காதலி "நோகாமல் முத்தங்கள் நூறு
கொடுப்பேன்" என்றாள்
காதலன் "ஆகையால் ஓர் முத்தம் அச்சாரம்
போடென்றான்!"

அதிரச வாதமன்றோ... அஃது அவனுக்கே
பழக்கமன்றோ!
"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின்
தோள்கள்?"
வினாக்குறியா? வெடிக்கும் எரிமலையா?
புரட்சிக்கவிஞனெனப் புவியொப்பி மாலைபோடப்
போதாதோ இவ்வரிகள்?
"ஒரு மனிதன் தேவைக்கே இந்தத்தேசம்
உண்டென்றால்
அத்தேசம் ஒழிதல் நன்றாம்"
முழுமனிதன் பாட்டன்றோ இப்பாட்டு; இதுகேட்டு
அழும் மனிதன் அரை மனிதன் குறை மனிதன்
அரைகுறை மனிதன்
"இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!"
எனத் தொடங்கி;
"சுருட்டுகின்றார் (சில பேர்கள்) தம் கையில்
கிடைத்தவற்றை என முடிக்கும்
இவனோர்
சுருட்டுக்கவிஞன் - புகைச்
சுருட்டுக்கவிஞன் - இவன்
புரட்டுக்கவிஞனாவான்;
மூடப்பழக்கமெலாம் தலை கீழ்ப்
புரட்டும் கவிஞனாவான்
அமளி துமளி ஆர்ப்பாட்டம் அணிவகுப்பு!
அமைதியிலே உலகுவாழப் புதுவைக்குயில்
கூவாதோ?

"புதியதோர் உலகம் செய்வோம்-கெட்ட

போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"
அமைதிக் கவிஞனாக அழைக்கின்றான் உலகத்தை.
"சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமய பேதம் வளர்த்தே தளர்வது நன்றா?"
காந்தியார் கழறிய கருத்தினைக் கவிஞன்
கனலிடை மெழுகென உருகியே கேட்பான்.
"பொய்யுரைப்போன் பயங்காளி-பிறர்
பூமி சுரண்டிடுவோன் பெருச்சாளி
வையக மக்கள் எல்லோரும்-நலம்
வாய்ந்திட எண்ணிடுவோன் அறிவாளி"
கருத்துக்கவிஞன் ; சற்றுக் கருத்த கவிஞன்
காலக்கவிஞன்; முக்காலக் கவிஞன்
அவன்
சுவையாய்த் தமிழுக்கு அருவியின் பாடல்
அமைவாய்க் கண்ட அற்புதம் என்னே!
"விருந்து வரக்கண்ட மெல்லி முகம்போல், முல்லை
அரும்பு மலர்ந்ததென்ன வேடிக்கை
தெரிந்தவரைக் கண்டாலும் தெரியாதாரைக்
கண்டாலும்
சிரிப்பதுதான் இதன் வாடிக்கை"
இன்னொன்று கேளீர்;
விழிக்கு இனியவள் ஒருத்தி ஆடுகின்றாள்
மொழிக்குச் சுவையேற்றித் தாசன் பாடுகின்றார் :
"சதங்கை கொஞ்சும் பாதம் சதிமிதிக்கும் வானில்
மிதக்கும் அவள் தாமரைக்கை! மேலும் வதங்கலிலாச்
சண்பகத்து நல்லரும்பு ; சாடை புரிகின்ற விரல்,
கண்கவரும் செம்பவளக்காம்பு"
மற்றொன்று;
"தொண்டையிலே ஒன்றுமே அடைக்க வில்லை
துணைவனவன் சிறுகனைப்புக் கனைக்கலுற்றான்
அண்டையிலே மங்கைபோய் 'அத்தான்' என்றாள்

அத்தானா தூங்கிடுவான்? (அருகில்) உட்கார்!
என்றான்"

அவருக்கே உரிய கேலி!
அவர் கவிதைக்கே உரிய சுவை!
உவமைக்கோர் கவிஞன் என்று
உரைக்கின்றார் பெருங்கவிஞர்
ஒன்றிரண்டா எடுத்துச் சொல்ல?
"தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பென
இருள் தன் கட்டுக் குலைந்தது"
"சோற்றை அள்ளுங்கால் துவள் வாழைத் தண்டில்
உறும்
சாற்றைப்போல வடியத்தக்க வண்ணம்
ஊற்று நெய்யை"
புரட்சியா? அமைதியா? பொங்கும் உவமையா?
கருத்தா? தமிழ்ப் போதை தரும் சுவைத்தேனா?
எதனை எது மிஞ்சுமென்று எவர் கூறி வாதிட்டாலும்
ஒப்பமாட்டேன்; ஒன்றையொன்று மிஞ்சுமென்பேன்!
ஏடெத்தனை அவர் தந்தார்?
இருண்ட வீட்டில்
குடும்ப விளக்கேற்றி வைத்தார்.
இசையமுது பொழிந்து, அதற்குப்
பாண்டியன் பரிசு பெற்றார் நமக்குக்
குறிஞ்சித்திட்டுமுண்டு குயில் இதழ் நடத்தும்போது
அழகின் சிரிப்பாலே தமிழியக்கம் கவர்ந்துவிட்டார்
அமைதிக்கு நல்ல தீர்ப்பளித்தார் அவர்
காதல் நினைவாலே கவிப்பெண்ணை வாடவிட்டுச்
சாவின்
எதிர்பாரா முத்தத்தால் பிரிந்துவிட்டார்...
என் ஆசான் பாரதியைப் பார்ப்பேன் எனப் பறந்து
விட்டார்...
இரு கவியும் இறப்புலகில் சந்தித்து என்ன

பேசியிருப்பாரென எண்ணுகின்றீர்?
"நாம் தமிழ் நாட்டில் இன்றைக்கு இல்லையென்று
நம் மக்கள் பேசுகின்றார்... நம்புவதோ இதனை
நாமும்?
'செந்தமிழ்நாடெனும் போதினிலே-இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே'
சிந்தைகவர் இந்தப்பாட்டினையே செயல்படுத்த
மிக்கமனம்
நொந்துதான் காத்திருந்தேன் ; இன்று
விந்தை கண்டனையோ தம்பீ... நம்
தந்தையார் நாட்டுக்குத் தமிழ்நாடெனப் பெயர்
தந்தவர் அண்ணா!; நாம் வாழ்கின்றோம் அங்கு!
மெய்யலவோ?" என்று
பரவசத்தால் நடமாடும் பாரதிக்கு வணக்கம்
சொல்லிப் பாவேந்தன் பகர்வான்

'கனியிடை ஏறிய சுளையும்-முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும்-காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும்-தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்-தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!'
என்றெழுதி வந்தேன்...
இன்றெல்லாத் தமிழர்களும் தமிழைத் தம்
இன்னுயிராய்க் கொண்டு
சென்றங்கு எட்டுத்திசை பரப்புவதற்கு, முனைந்தார்
அய்ய! நாம் சாகவில்லை வாழ்கின்றோம்
தாயகத்தில்!
உண்மைதான் நீர் உரைத்த"தென்றான்.
பாரதியும் தன் தாசனையே தழுவிக்கொண்டு

பாரதிரச் சிரிக்கின்றான்
இருவருமே பாடுகின்றார்
"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!"
இணைந்து நாமும் பாடிடுவோம்
ஏற்றமிகு தமிழகத்தைக் கண்டிடுவோம்
நாற்றமிகு சாதிப்பூசல் களைந்திடுவோம்
ஆற்றல்மிகு பாரதிக்கும் அவர் தாசர்க்கும்
விழா எடுப்போம்
விழா எடுக்கும் வேளையிலே அவர்தம்
விழாக்கருத்தைச் செவிமடுப்போம்.

அடுத்துப் பாடவரும் ஒவ்வொரு கவிஞருக்கும் ஒரு முன்னுரை வழங்கி அழைக்கின்றார். அந்தக் கவிதைகளைக் காணலாம்.

முதலில்
உவமை யெனுந் தலைப்பினிலே
ஒருவர் பாட வருகிறார்
என் நண்பர் தனி அன்பர்
பொன் பூவும் மணமுடைத்து
என்பாராம் தன் கவியால்
பொருநை நதிப் பெருக்கனைய தமிழ் காட்டும்
கருணை ஆனந்தக் கவிஞர்... என்
கேலிக்கு நற் கருவி
வேலிக்கு ஓணான் போலச் சாட்சி சொல்வார்
எனக்காக
கூலிக்கு மாரடிக்கும் கொள்கையில்லாக்
குணக்குன்று
முதன் முதலாய்ப் பம்பாய்க்கு வந்துள்ளார்:
நேற்றுத்தான்
முதன் முதலாய் விமானமும் ஏறியுள்ளார்!
சீராக அவர் ஏறியதும் 'சீட் பெல்ட்'டைத்தான்

போடுமென்றேன் .
நேராக எனைப்பார்த்துத் தன் இடுப்பு 'பெல்ட்'தனை
இறுக்கிக் கொண்டார்!
விமானப் பெண்ணாளும் விலாநோகச் சிரித்துவிட்டு
விடுவிடென மாட்டிவிட்டாள் விமானப் '
பெல்ட்டு'தனை
'பட்டிக்காட்டான் யானை பார்த்ததுபோல்' என்பது
தானே பழமொழி!
அதனை மாற்றிக் கொள்வீர் இவரைப் பார்த்து!
பட்டிக்காட்டான் பம்பாய் பார்த்ததுபோல்
வந்திறங்கியவுடன் வாய்பிளந்து
வானளாவியமாடம் பார்த்தார்
விமானக் கூடம் பார்த்தார்
அதனாலே
கையில் வைத்திருந்த விலை உயர் பொருள்
ஒன்றைக்
காணாமற் போக்கி விட்டார்!
இவர்தான் அக்கவிஞர்
உள்ளங்கவர் பாவேந்தரின் உவமை அழகெல்லாம்
கள்ளங் கபடமிலா என் நண்பர் பாடிடுவார்
பள்ளம் போய் வீழ்கின்ற பாய்ச்சல் நீரதுபோல்
வெள்ளம் காண்போம் தமிழ் நடையில்:

(கவிஞர் ஆனந்தம் 'உவமை' பற்றிப் பாடி முடிக்கிறார்.)

அடுத்து;
இன்பம் எனும் எழில் தலைப்பில்
அன்பர் திரு சுந்தரனார் பாடுகின்றார்
புவியில் இன்பம் பொலிக என்றே
கவியின் கனவால் சொன்ன கவிஞர்
அரசியலில்
எதிர் வரிசைதான் அவர் வரிசை என்றாலும்

சிலர்போல அவர்
எதிர்வரி 'சைத்தான்' இல்லை!
புது வரிசை தமிழ்த் தாய்க்குப் படைத்திடுவார்
மதுவரிசையில்லாமல் கவியெழுதும் மாண்புடையார்
எளிய உடை எளிய நடை; பழங் கருத்து
நெளிய விடாப் புதுமை நெஞ்சம்;
புளிய மிலார் அடிபோல் பாட்டடியால் என்றும்
குளியலிலா அழுக்குமனம் திருத்திடுவார்.
அவர் பாட்டு புறப்பாட்டு
ஆனால் இன்றோ அகப்பாட்டுப் பாடுதற்கு
அகப்பட்டுக் கொண்டார் இங்கே!
இன்பமெனும் தலைப்பினிலே
எழுத்தாரம் வழங்கிடவே என் நண்ப வந்திடுக:

(கவிஞர் எஸ்.டி.சுந்தரம் 'இன்பம்' பற்றிப் பாடி முடிக்கிறார்.)

அடுத்து:
'பெண்மை' எனும் தலைப்பினிலே
பெருமை மிகு கவி பாட
உண்மை மிகு உயர் தமிழர்
வெண்மையுள்ளக் கணேசனார் வருகின்றார்
வட்டி யின்றிக் கடன் வழங்காச்
செட்டி நாட்டுச் செம்மல் இவர்
சட்டை யில்லாத் திருஉருவம்... எதிர்ப்பைச்
சட்டை செய்யாப் புகழ் உருவம்!
கதர் அணியார்... கதர் அணியார்ந்த கட்டுடல்...
கதர் அணியார் மல்லுக்கு நிற்பார்
தமிழ் பழித்த எதிரியுடன்
மல்லுக்கு நிற்பார்...விடுதலை
நெல்லுக்கு வியர்வை பாய்ச்சி இன்று
சொல்லுக்குச் சுவையேற்ற வந்துள்ளார்.

கல்லுக்கும் உயிர் கொடுக்கும் கவித் தமிழால்
கனிப்பாட்டுத் தந்திடுவார் இப்போது வந்திடுவார்

(கவிஞர் சா. கணேசன் 'பெண்மை' பற்றிப் பாடி முடிக்கிறார்)

அடுத்து;
அவை கூட்டி அமர்ந்ததற்குச்
சுவை கூட்டல் வேண்டாமோ
அதற்காக வருகின்றார் அப்துர் ரகுமான்
ரவை போட்ட துப்பாக்கி வெடிப்பதுபோல்
சொல் வெடிக்கும்-சுவை வடிக்கும்
இவர் ஒரு வானம்பாடி
இருக்குமிடம் வாணியம்பாடி
பாரதிக்குத் தாசன் பாரதிதாசன் எனில்
அந்தத் தாசர்க்குத் தாசர் இவர் தமிழ்க் கவிதை தீட்டுவதில்!
குடமிட்ட தீபம் இவர் இனிமேல் குன்றிலிட்ட தீபந்தான்
புடமிட்ட தங்கம் இவர் இனிமேல் புகழ்மீட்டும் வீணையிவர்
சுவைப்பாட்டு தந்திடுவார்
சுவைத்திருப்பீர் ; நான் குறுக்கேயில்லை:

(கவிஞர் அப்துர் ரகுமான் 'சுவை' பற்றிப் பாடி முடிக்கிறார்.)

நேற்றிரவு பம்பாய் நகர் விடுதி யொன்றில்
போர்த்தியவாறு நான் தூங்குகின்றேன்
"காத்திருந்தேன் கண்ணாளா வந்தாயோ" எனச் சொல்லிக்
கரம்பிடித்தாள் கனவுலக மங்கை நல்லாள்
"காரிகையுன் பேரென்ன?" எனக் கேட்கக்
களிப்புடனே "முத்தம்மா" எனச் சொன்னாள்
"சொப்பனத்துச் சுந்தரியே சொல்லிடுக ஒரு

விளக்கம்

தப்பிதமாய் எண்ணாதே... உன்
முகம் பார்த்தால் முத்துச்சாமி போல் இருக்குதம்மா!
அகம் மட்டும் ஆண்மை மாறிப் பெண்மையாகப்
போனதுவோ?" எனக் கேட்டேன்;
அவளும்...
கலகலவெனச் சிரித்துவிட்டுக்
கையால் மறைத்திருந்த மீசைதனைக்
காட்டிவிட்டாள்!
கண்டுகொண்டேன் கைகாரி அவள்தானென்று
தப்பிக்க வழியில்லாத் தையலவள் "அத்தானே
ஒப்பிக்க இருக்கின்றேன் எனதுள்ளம் உம்மிடமே;
ஆனால்
மீசை வந்து ஆசைதனைக் கெடுக்கு" தென்றாள்
"பூசை வைத்துப் போ என்றால் போமோ மீசை?
பூவையே நீ புனர்ஜென்மம் எடுத்துப்
புதுப்பெண்ணாக வா" என்றேன்
போய்விட்டாள் விழித்துக் கொண்டேன்
வேடிக்கைக் கனவு நேற்று விளைந்த விதம் நீர்
அறிவீர் தமிழ்
வேட்கை மிகு முத்துச்சாமி
விரைவினிலே பெண்ணாக மாறி, எனை மணக்க
வேண்டுமென்று
விரும்புவதாய் இம்மன்றில் தெரிவித்தார்
மறு ஜென்ம வாழ்விருந்தால் எனை
மணப்பதுறுதி யென்றார் அறிவீர் அன்றோ!
அதை நினைத்துத் தூங்கி விட்டேன்
அதனாலே கனவு கண்டேன்
மாரியப்பன் மாரியம்மாள் ஆகின்ற புரட்சியெலாம்
நடக்கும்போது
முத்துச்சாமி முத்தம்மாளாகிவிட்டால் எங்கள்

அமைச்சரவையில் ஆரணங்கு இருவராவார்!
அதுநிற்க;
பாவேந்தர் பாட்டாலே செய்த புரட்சி
பாடிக்காட்ட என் தோழர் முத்து தனை
அழைக்கின்றேன்
நேற்று நினைவோடு நாணிக் கோணி வராமல்
நம்மிடையே வந்திடுவார் நற்றமிழைத் தந்திடுவார்:

(அமைச்சர் மா. முத்துச்சாமி 'புரட்சி' பற்றிப் பாடி முடிக்கிறார்.)

அனைவரும் பாடிய பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் முடிப்புக் கவிதை வழங்குகிறார்.

"கண்கள் விற்றுச் சித்திரம் வாங்குவதோ?"
எனக் கேட்ட பாரதிக்குத் தாசன்
"பெண்கள் கொய்யாப்பழக் கூட்ட"
மென்றுரைத்தான்.
"தனித்துக் கிடந்திடும் லாயம்-அதில்
தள்ளி யடைக்கப்படும் குதிரைக்கும்
கனைத்திட உத்திரவுண்டு - வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டுமோ?" எனக்
கேட்டான்
"காதல் அடைதல் உயிர் இயற்கை - அது
கட்டில் அகப்படும் தன்மையதோ? அடி
கோதை தொடங்கடி! என்று சொன்னான்-இன்பம்
கொள்ளை! கொள்ளை! கொள்ளை! மாந்தோப்பில்!"
என்று மகிழ்ந்தவன்;
"காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?"
எனக் கேட்டான்!
எப்போது தெரியுமா?
இப்போது தானே நாம்

குடும்பக் கட்டுப்பாடென்று கூறி
குசேலரைப் போல் ஆகாதீர் எனப்
பிரச்சாரம் புரிகின்றோம் பேரரசின் சார்பில்!
பெருங்கவிஞன் பிள்ளைக் கட்டுப்பாடு தேவையென
முப்பதாண்டுக் காலத்திற்கு முன்பாக முன்னேற்றக்
கருத்துரைத்தான்

நாலைந்து பிள்ளைக்குத் தந்தையான ஒருவன்
நடுநடுங்கித் திண்ணையிலே படுத்துக் கொண்டான்
நங்கையவள் அவன் மனைவி வருகின்றாள் ; இங்கு
கங்கையைப் போல் பிரவாகம் காட்டுகின்ற கவிஞன்
நடை கேளுங்கள்:-
"அருமனைவி என்னிடத்தில் மெதுவாக வந்தாள் ;
'அயர்ந்தீரோ?' என்றுரைத்தாள் மலர்க் கரத்தால்
தொட்டாள்!
'தெருவினிலே பனி' என்றாள் ; ஆமென்று
சொன்னேன்!
தெரிந்து கொண்டேன் அவள் உள்ளம்,
வார்த்தையென்ன தேவை?
பத்து மாதம் செல்லப் பகற்போதில் ஓர் நாள்
பட்ட கடன்காரர் வந்து படுத்துகின்ற நேரம்
சித்தமெலாம் மூத்த பெண் சுரநோயை எண்ணித்
திடுக்கிடுங்கால் ஒரு கிழவி என்னிடத்தில் வந்து,
முத்தாலம்மை வைத்த கிருபையினால் நல்ல
முகூர்த்தத்தில் உன்மனைவி பிள்ளைபெற்றாள்
என்றாள்!
தொத்துநோய், ஏழ்மை, கடன்காரர் தொல்லை,
தொடர்ந்தடிக்கும் சூறையிலே பிள்ளையோ பிள்ளை!"
அந்தப் பாரதிதாசன்
பெண்ணைப் பெருமை செய்தான்-
மண்ணைப் போல் மிதிபடும் மானிடத்தைப்
பார்த்து;

"உன்னை விற்காதே!" என்றான்
"எதிரிகள் கோடி இட்டழைத்தாலும்
தொடேன்" என
எக்காளக் குரல் கொடுத்தான்
"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி"யாய்
நின்றான்
"தொண்டு செய்து கிடப்பவன் ஆமை"
என்றான்
தொகை தொகையாய்க் கவிச்சர விளக்கு ஏற்றி
வைத்தான்
பாரதிக்கு வாரிசாய்ப் பாரதிதாசனானான்
தலைவர்க்கும்-கவிஞர்க்கும்-பிற
தகைமை சால் மேதைக்கும்-தமக்குப்பின்
இருக்கின்ற பரம்பரையே தகுதியாகும். இன்று
பார்க்கின்ற இடமெல்லாம் பாரதி பரம்பரையைப்
பாரதிதாசன் வழித் தோன்றல்களைப்
பார்க்கின்றோம்!
கோக்கின்றார் சொல் முத்து... பல் கவிஞர்!
(பல கவிஞர்)
பல் இல்லாக் கவிஞர்களும்! (தேர்தல்)
வாக்கென்றால் பாரதிக்கும் பாரதிதாசர்க்கும் வேறு
நோக்கின்றி வழங்கிடுவார்... இரு கவியும்
வருவரோ ஆள்வதற்கு நம் கவியரசை!
இனியுமேன் வரவேண்டும் ஆள்வதற்கு?
இப்போதே ஆள்கின்றார் நமதுள்ளம்!

அவர் வாழ்க!

அவர் புகழ் வாழ்க!

வணக்கம்!

# பாரதிதாசன்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 80ஆவது பிறந்த நாளை யொட்டி 29.04.71 அன்று புதுவை அரசு நடத்திய கவி யரங்கிற்கு அன்றையத் தமிழக முதல்வர் கலைஞர் தலைமை யேற்றார். அப்போது அவர் பாடிய தலைமைக் கவிதை முன்னுரை.

இன்று காலை புறப்பட்டுக் கார் ஏறும்போது
புதுவைக்குச் செல்கின்றாயா? அங்கு 'குடி'யுண்டே
எனக் கேட்டார் என் நண்பர்
இங்கு தான் தமிழ்நாட்டில் எத்தனையோ குடியுண்டு-
இஃதறியா மனிதரா? நீர்? என்றேன்.
அவரோ
வியப்பாலே விழி விரித்து
வேகமாய் எனை விளித்து
என்ன குடி? என்ன குடி?
என்றலற-
காரைக்குடி - கண்ணங்குடி -
குன்றக்குடி - குமாரகுடி-
மாங்குடி- மணக்குடி-
லால்குடி- ஆய்குடி-
பொதக்குடி-சுரக்குடி-எனக்குப்
புகழ் தந்த கல்லக்குடி-
போதுமா குடியென்றேன்
கல்லக்குடி சரிதானப்பா - தமிழ்நாட்டில்
கள்ளக்குடி தடுப்பதற்குக் கடைதிறப்பு
எப்போதென்றார் -
புதுவைக்குப் போகின்றேன்-பரூக்கிடம்
புள்ளி விவரம் கேட்டறிந்து
சிந்தித்துச் செயல்படலாம்-பறக்காதே! இப்போது
சென்று வருகின்றேன் எனைவிடென்று

காரேறிக் கடுகி வந்து - வழியில்
'சாரம்' விடுதியிலே இதனை எழுதி வந்தேன்-
கணம் ஒன்று தாமதித்தால்...
காருக்குள் நண்பனும் ஒட்டிக் கொள்வான் -
எழுத விடுவானா?...
எடு வை! எங்கே
புதுவை? என உயிர் எடுக்கமாட்டானா?

புதுச்சிறப்பு-தனிச்சிறப்பு-பெருங்
குடிச்சிறப்பு பெற்ற நல்லூர் -
கவிச்சிறப்புக் கொண்ட வல்லோர்
புவிச்சிறப்புக் கொள்ளும் வண்ணம் வாழ்ந்த பேரூர்-
அன்றொருநாள் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து
நாற்பத்தைந்தில்
அடிஉதைகள் குத்தென்று அடியேனும்
வாங்கிக்கொண்டு
ஆவிபோகும் வேளையிலே
அரவணைத்த புனிதபூமி-இந்தப் புதுவை பூமி -
இன்றென்னை 'முதலமைச்சே வருக' என்று
எம் தலைமை, கழகத்தின் சார்பாக அழைப்பதற்கு
இங்குமோர் முதலமைச்சர் இருக்கின்றார்
தென்றல் வீசும் போதெனக்குப் பழைய
புயல் நினைப்பு வருதல் இயற்கையன்றோ!

பழைய பெருமாளை-பாட்டெழுதும் புதுவைச்
சிவனாரை -
பண்புநிறை அமைச்சர் பெருமக்கள் தம்மைப்
பாராட்டி வாழ்த்தி எந்தன் கவியரங்கைத்
தொடங்குகின்றேன்

எங்கள் ராஜாராம்
உங்கள் ராமசாமி ராமச்சந்திரன்
ஆறுமுகம் சுப்பையா அத்தனையும்
ஆண்டவன் பெயரென்பதாலே அவர்

அருள் கேட்க வணங்குதலும் தவறல்ல!
சண்முகமும் அவ்வாறே
ஔவைச் சண்முகமோ பெயராலே?
அரசர்களின் போரில் எல்லாம் அமைதிகளை
உருவாக்கி விட்டதுபோல்
புதுவைச் சண்முகமும், புகையடக்கிப்
புகழ் பெருக்க வாழ்த்துகின்றேன்
முகத்தினிலே பெருமீசை - நல்
அகத்தினிலே தமிழ் ஆசை-நாடெங்கும்
முழங்குகின்ற சிலம்போசை-கொட்டுகின்ற போர்
முரசாம் ம.பொ.சி. பெரியவரை வணங்குகின்றேன்
புதுவைக் குயில்தனையே போற்றி என்
கவிதை வரிகளையே
அவர் கல்லறையின்
திருமுன்னே
வைக்கின்றேன்.

# பாவேந்தர் நூற்றாண்டு விழா

1891-இல் பிறந்த பாவேந்தர் பாரதிதாசனின் 100ஆவது பிறந்த நாளான 29.04.90 அன்று சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள பாரதிதாசன் சிலைக்கு அன்றைய முதல்வர் கலைஞரும், பேராசிரியர், சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் உள்ள அமைச்சர்களும் மாலை அணிவித்துச் சிறப்புச் செய்தார்கள்.

பாவேந்தர் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடிடத் தமிழக அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டது.

பாவேந்தர் நூற்றாண்டு விழா நினைவாகத் தமிழ் வழங்கும் நாடுகளில் வாழும் கவிஞர்கள் அனைவருக்கும் ஊக்கமும் ஆக்கமும் வழங்கி 100 கவிஞர்களைத் தெரிவு செய்து பாவேந்தர் நூற்றாண்டு விழா நிறைவின்போது பாராட்டி மகிழத் தமிழக அரசு விரும்பியது. பாவேந்தரின் தனிச் சிறப்பை விளக்கும் வகையில் தமிழுணர்வு, பகுத்தறிவுப் பார்வை, மகளிர் முன்னேற்றம், சமுதாயச் சீர்திருத்தம் ஆகிய பொருண்மைகளில் நூறு வரிகளில் எந்தப்பா வகையிலேனும் கவிதை எழுதி அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை வேண்டுகோள் விடுத்தது. பாவேந்தர் விழாவுக்கு இதுவரை ஒரே ஒரு கவிஞருக்கு மட்டும் 'பாவேந்தர் விருது' வழங்கி உரூ. 10,000/- பணப் பரிசும் வழங்கி வருவது வழக்கமாக இருந்தது. ஆனால் நூற்றாண்டு விழாவையொட்டி ஏராளமான கவிஞர்கட்கும் பதிப்பாளர்களுக்கும் விருது வழங்கப்பட்டது.

விருது பெற்ற கவிஞர்கள்

1. கவிஞர் வேழவேந்தன், 2. புலவர் புலமைப்பித்தன், 3. கவிஞர் கோவை இளஞ்சேரன், 4. ஈரோடு தமிழன்பன், 5. சாமிபழனியப்பன், 6. தி.நா. அறிவொளி, 7. நாரா. நாச்சி

யப்பன், 8. முருகு சுந்தரம், 9. அரிமதி தென்னகன், 10. மு. பி. மணிவேந்தன், 11. குடியரசு, 12. பொன்னடியான், 13. மா. செங்குட்டுவன், 14. வெற்றியழகன், 15. புதுமைவாணன், 16. கன்னல், 17. கவிதைப்பித்தன், 18. கவிஞர் அரசு மணி மேகலை, 19. கவிஞர் நிர்மலா சுரேசு, 20. பொன்மணி வைர முத்து, 21. செல்வி அருள்மொழி. பாவேந்தர் நூல்களைத் தொடக்க காலத்தில் பதிப்பித்த இரு பதிப்பாளர்களுக்கும் பாவேந்தர் விருது வழங்கப்பட்டது.

1. டாக்டர் திருமதி ரஷ்யா, 2. முல்லை முத்தையா இவர்கள் அனைவருக்கும் 6.5.90 அன்று திருச்சியில் நடை பெற்ற சிலைத் திறப்பு விழாவில் விருது வழங்கப்பட்டது. (மேலும் சில குறிப்பிடத் தக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பின்னால் வந்த விழாக்களில் விருது வழங்கப்பட்டது. பாவலர் ஆ. பழநி, ம. இலெனின் தங்கப்பா, தரங்கை பன்னீர்ச் செல்வன் ஆகியோர் அந்த விருதுகளைப் பெற்றனர்).

சிலைத் திறப்பு விழாவையொட்டி வெளிவந்த செய்தித் துறை அறிவிப்புகளில் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களின் வாழ்த்துரை கீழ்க்கண்டவாறு இடம் பெற்றது-

**"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும்**
**உலகத்தை வேரோடு சாய்ப்போம்"**

என்று முழங்கிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் நூற்றாண்டு விழா தொடங்குகிறது.

இந்த நூற்றாண்டின் இணையற்ற மக்கள் கவிஞர்களாக விளங்கியவர்கள் பாரதியும், பாரதிதாசனும். நாற்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், தூய தமிழ்நாட்டு மக்களுக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதியைப் பாடிய பொழுது

**"பைந்தமிழ்த் தேர்ப்பாகன் அவனொரு**
**செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை**

**குவிக்கும் கவிதைக்குயில் இந்நாட்டினைக்**
**கவிக்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு**
**நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா**
**காடு கமழும் கற்பூரச் சொற்கோ"**

என்று சொன்னதெல்லாம் புரட்சிக் கவிஞர் பாரதி தாசனுக்கும் பொருத்தம்தானே!

'துன்பம் பிறர்க்கு! நல் இன்பம் தமக்கெனும் துட்ட மனோ பாவம். அன்பினை மாய்க்கும்; அறங்குலைக்கும்; என்று அறிவுரை வழங்கிய கவிஞர் வாக்குப் பலித்திட –

**எல்லார்க்கும் நல்லின்பம்**
**எல்லார்க்கும் செல்வங்கள்**
**எட்டும் விளைந்த தென்று**
**கொட்டு முரசே! வாழ்வில்**
**கட்டுத் தொலைந்த தென்று**
**கொட்டு முரசே!**
**இல்லாமை என்னும் பிணி**
**இல்லாமல் கல்வி நலம்**
**எல்லார்க்கும் என்று சொல்லிக்**
**கொட்டு முரசே! வாழ்வில்**
**பொல்லாங்கு தீர்ந்ததென்று**
**கொட்டு முரசே!"**

என்று பாடி மகிழும் சமுதாயத்தை உருவாக்க, புரட்சிக் கவிஞர் நூற்றாண்டு தொடங்கும் வேளையில் சூளுரை ஏற்போம்!

பாவேந்தர் பாடலில் நயம்மட்டும் கண்டு மகிழாமல் அவர் கண்ட கனவுகளை நனவாக்குவோம்!

அதற்கு –

புதியதோர் உலகம் செய்வோம்!

# பாவேந்தர் சிலைத் திறப்பு

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாத் தொடக்கத்தையொட்டி 6.5.90 அன்று திருச்சிப் பாரதிதாசன் பல்கலைக் கழக வளாகத்தில் பாவேந்தர் சிலையை அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் திறந்து வைத்தார். அன்றைய‌க் கல்வி அமைச்சர் பேராசிரியர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.வி., முன்னாள் அமைச்சர் அன்பில், அன்றைய அமைச்சர் கா.நா. நேரு, எதிர்க்கட்சி வரிசையிலிருந்த குமரிஅனந்தன் ஆகியோர் அன்று கலந்து கொண்டனர்.

அப்போது கலைஞர் ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்புடையது :

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் சிலையினைத் திறந்து வைக்கின்ற எழுச்சிமிகுந்த இந்த விழாவில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காகப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசின் சார்பிலும் மற்றும் தமிழர்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இருக்கின்ற தமிழர்கள் சார்பிலும் சற்றொப்ப உலகெங்கிலும் புரட்சிக் கவிஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

அதற்கு ஒரு தொடக்கமாக, பாவேந்தரின் பெயரில் அமைந்துள்ள இந்தப் பல்கலைக் கழகத்தில் அவருடைய திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து இந்த முதல் நிகழ்ச்சியிலேயே இருபதுக்கும் மேற்பட்ட கவிஞர்களுக்கு - புரட்சிக் கவிஞர் வழி வந்த - அவருடைய கருத்துக்களை எண்ணங்களை மேலும் சமுதாயத்திலே பரப்புகின்ற பணியிலே ஈடுபட்டு இருக்கின்ற அந்தப் புலவர் பெருமக்களுக்கு விருதுகளும், பொற்கிழிகளும் வழங்கப்பட்டு உள்ளன. அப்படி வழங்குகின்ற வாய்ப்புக் கிடைத்ததை எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

## பாடல்களின் நயத்தை மட்டும் பாராட்டிப் பயனில்லை!

புரட்சிக் கவிஞருடைய பாடல்களை – அந்தப் பாடல்களில் காணப்படுகின்ற கற்பனை வளத்தை – நயத்தை மாத்திரம் நாம் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவர் எண்ணியவற்றைச் செயலாற்ற வேண்டும் என்ற மனத் திடத்தோடு நாம் அனைவரும் பணியாற்ற வேண்டும் என்கிற சூளுரையை மேற்கொள்கின்ற விழாவாக இந்த விழா அமைய வேண்டும். அவருடைய பாடல்களின் நயங்களை, அழகினை இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் இங்கு எடுத்துக் காட்டி யதைப் போல ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல பல ஆண்டுக் காலம் எடுத்துக் காட்டக் கூடிய அளவிற்கு அவ்வளவு திறன் வாய்ந்தவை அவருடைய கவிதைகள்.

ஆனால் நாம் அவற்றின் அழகில் மாத்திரம் நம்மைப் பறி கொடுத்து விடாமல் அவர் எத்தகைய சமுதாயத்தை உரு வாக்க வேண்டும் என்று எண்ணினாரோ, தமிழினம் எப்படித் தலை நிமிர்ந்து இருக்க வேண்டும் என்ற ஏக்கம் கொண் டாரோ, தமிழன் என்றோர் இனமுண்டு. அந்த இனம் இன்று தலை தாழ்ந்து கிடக்கிறதே. அது நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று அவர் விட்ட எரிமலைப் பெருமூச்சு எத் தகையதென்பதெல்லாம் எண்ணிப் பார்த்து அவருடைய எண்ணங்கள் ஈடேறுவதற்கு நாம் அனைவரும் உழைத்திட வேண்டும் என்பது இந்த நாளின் சபதமாக நமக்கெல்லாம் இருந்திட வேண்டும்.

இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் மிகுந்த உணர்ச்சி யோடு இங்கே குறிப்பிட்டார். எது நம்மைப் பிரித்தாலும் தமிழ் நம்மை ஒன்று சேர்க்கும் என்று குறிப்பிட்டார். அதைத்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

**"வெள்ளம் போல் தமிழர் கூட்டம்**
**வீரங்கொள் கூட்டம் அன்னார்**

**உள்ளத்தால் ஒருவரே-மற்று**
**உடலினால் பலராய்க் காண்பர்"**

என்று குறிப்பிட்டார்.

அத்தகைய கவிஞருடைய கனவை நனவாக்குகின்ற செயல் நம்முடையதாக இருக்க வேண்டும். நம்முடைய பேராசிரியர் அவர்கள் புரட்சிக் கவிஞருக்கும் இன்றைய தினம் அவருடைய சிலைத் திறப்பு விழாவிலே அவரை வாழ்த்த அல்ல. வணங்குவதற்காக வந்திருக்கும் எங்களுக்கும் உள்ள இனிய தொடர்புகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார். ஒரு நிகழ்ச்சியைப் பேராசிரியர் இங்கே குறிப்பிட்டார்.

## பாவேந்தர் மீது அண்ணா காட்டிய அன்பு!

பேரறிஞர் அண்ணா அவர்கள் புரட்சிக் கவிஞருக்குப் பொற்கிழி அளிக்க வேண்டும் என்று பெரும் முயற்சி எடுத்துக் கொண்டு அதற்கென ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவினர் தமிழகம் முழுவதும் சுற்றித் திரிந்து 25 ஆயிரம் ரூபாய் கொண்ட ஒரு பண முடிப்பைச் சென்னையில் நடைபெற்ற பாவேந்தருடைய திருநாளில் அவருக்கு வழங்கினார்கள்.

அந்த நிகழ்ச்சியில் நடைபெற்ற ஒனறை மாத்திரம் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அண்ணா அவர்கள் பாவேந்தரிடத்திலே எவ்வளவு மரியாதை, அன்பு, பாசம் வைத்திருந்தார் என்பதற்கு அது எடுத்துக் காட்டு. ஒரு நிதியை வழங்குகின்ற நேரத்தில் அண்ணா கொடுப்பதைப் போலவும், பாரதிதாசன் வாங்குவதைப் போலவும் இருக்கக் கூடாது என்பதற்காகக் கொடுக்கின்ற கை உயர்ந்தும், வாங்குகிற கை தாழ்ந்தும் இருக்கக் கூடாது என்பதற்காக அண்ணா அவர்கள் அந்தப் பண முடிப்பைத் தம்முடைய கையிலே வைத்துக் கொண்டு அதைப் புரட்சிக் கவிஞர் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கொடுத்த அண்ணாவின் கரம் தாழ்ந்தே இருந்தது. அதை எடுத்துக் கொண்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கரம் உயர்ந்திருந்தது. பாரதிதாசன் எத்தகைய தன்மானக் கவிஞர், சுயமரியாதைக் கவிஞர் என்பதை அந்த நிகழ்ச்சியின் மூலமாக அண்ணா அவர்கள் படம் பிடித்துக் காட்டினார். நாட்டிற்கு விளக்கினார் என்பதற்கு இது ஒரு சரியான சான்றாகும்.

அந்தக் காலத்தில் என்னுடைய எழுத்துக்களில் எப்படியும் புரட்சிக் கவிஞருடைய கவிதை வரிகளை நான் நுழைத்து விடுவேன் என்று குமரி அனந்தன் இங்கே குறிப்பிட்டார். முன்பே பாரதிதாசனை அவர்கள் பெரும் புகழ் பெற்ற கவிஞராக இருந்தாலும் கூட ஆற்றல் வாய்ந்தவராக இருந்தாலும் கூட அந்த விளக்கொளியை அகிலத்திற்கு எடுத்துக் காட்டிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களைச் சாரும்.

## புரட்சிக் கவிஞர் யார் என்று கேட்க வைத்த அண்ணா!

அவர் நடத்திய திராவிட நாடு இதழில் அண்ணா அவர்களுடைய எழுத்தோவியம் ஒவ்வொன்றிலும் புரட்சிக் கவிஞருடைய கவிதை வரிகள் இடம் பெறும். திராவிட நாடு இதழை ஆவலோடு வாங்கிப் படிக்கின்ற அந்தக் காலத்து இளைஞர்கள் யார் என்று பாரதிதாசனைக் கேட்கத் தொடங்கினார்கள். பிறகு பாரதிதாசனின் கவிதைகள் வெளி வரத் தொடங்கின.

இங்கே விருது பெற்ற திருமதி. ரஷ்யா அவர்களைப் பலருக்கு அவர் யார் என்று தெரிந்திருக்க நியாயமில்லை. சுயமரியாதை இயக்கம், தன்மான இயக்கம், சோவியத் ரஷ்யாவின் கொள்கைகளில் எந்த அளவிற்கு நாட்டம் கொண்டு இருந்தது என்பதற்கு அடையாளமாக மறைந்த அண்ணன் குத்தூசி குருசாமி அவர்கள் தன்னுடைய மகளுக்கு இட்ட பெயர்தான் ரஷ்யா என்பதாகும். அந்தப் பெண்தான் இங்கே அந்த

விருதினைப் பெற்றார். காரணம் புரட்சிக் கவிஞருடைய கவிதைகளைத் தொகுத்து முதன் முதலில் நூலாக வெளியிட்ட பெருமை அண்ணன் குருசாமி குஞ்சிதம் அவர்களைச் சாரும். அந்த நூலுக்கு முன்னுரை எழுதிய பெருமை அண்ணன் கி.ஆ.பெ. அவர்களைச் சாரும். அந்த முன்னுரையை நம்முடைய பல்கலைக் கழகத் துணைவேந்தர் தன்னுடைய வரவேற்புரையிலே குறிப்பிட்டார். அந்த முன்னுரையைப் படித்துப் பார்த்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய புத்தகங்களைத் தொடர்ந்து வாங்க வேண்டும் என்று ஆவல் கொண்டவன் நான் அந்த இளைய பருவத்தில். அவ்வளவு ஆண்டுகளுக்கு முன்பு அந்த நூல் வெளியிடப்பட்டது. அதிலேதான் அவர் எழுதி இருந்தார். அழகிற்காக ஒருமுறை படித்தேன். கவிதை நயத்திற்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொரு முறையும் படித்-தேனாகவே இருக்கிறது பாரதிதாசனுடைய கவிதை என்று அண்ணன் கி.ஆ.பெ. அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அன்றைக்கு ஏற்பட்ட ஆவல் அந்தக் காலத்தில் என் போன்ற இளைஞர்களுக்குப் பாரதிதாசனுடைய கவிதைகளைத் தொடர்ந்து படிக்க அவரைப் பார்க்க ஒரு பெரும் தூண்டுதலை உள்ளத்திலே எழுப்பியது.

## 42-ஆம் ஆண்டு நான் எழுதிய கடிதமும், பாவேந்தர் அனுப்பிய கவிதையும்!

அதன் காரணமாகத்தான் திருவாரூரில் நாங்கள் நடத்திக் கொண்டிருந்த தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற ஆண்டு விழாவிற்கு அவர் இடத்திலே ஒரு வாழ்த்துக் கவிதை கடிதம் வாயிலாகக் கேட்டிருந்தேன். அண்மையில் கூட வார ஏடுகளில் பார்த்திருக்கக்கூடும். நான் புரட்சிக் கவிஞருக்கு 1942ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தை அவருடைய மகன் மன்னர் மன்னன் சில வாரங்களுக்கு முன்பு என்னிடத்திலே கொண்டு வந்து தந்து 1942-ஆம் ஆண்டு நீங்கள் என் தந்தைக்கு

எழுதிய கடிதமும் அந்தக் கடிதத்திலே என் தந்தை எழுதிய குறிப்பும் பாருங்கள் என்று என்னிடத்திலே தந்தார். அதை ஒரு வாரப் பத்திரிகையிலே குறிப்பிட்டு எழுதினேன். அப்பொழுது பாரதிதாசன் எழுதிய கவிதை தான்

**"தண்பொழிலில் குயில் பாடும் திருவாரூரில்**
**தமிழ்நாடு தமிழ்மாண வர்மன்றங் காண்"**

எனத் தொடங்கி இங்கே பேராசிரியர் குறிப்பிட்டாரே

**"கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்**
**கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்**
**கூட்டத்தை"**

- என்ற அந்தக் கவிதை வரிகள் விளைந்த காலம் அந்தக் காலம் தான்.

நான் அப்போது எழுதினேன். அவர் என்னை அறியாத காரணத்தால் அன்றைக்கே எழுதி இருக்கிறேன் பாருங்கள். அவரை விளிக்கும்போதே கவிஞர் என்றோ, புரட்சிக்கவிஞர் என்றோ குறிப்பிடாமல் கவிப் பெரியார் அவர்களுக்குக் கருணாநிதி வணக்கம் என்று அன்றைக்கே விளித்து எழுதி னேன். அதிலே கடைசியாகக் குறிப்பிலே அவரைக் கேட்டி ருந்தேன். அலட்சியப்படுத்தி விட வேண்டாம். மாணவர்கள் நாங்கள் அவசியம் வாழ்த்துக் கவிதையை அனுப்புங்கள் என்று. அவர் அந்தக் கவிதையை எழுதி அனுப்பி விட்டு அத்துடன் ஒரு துண்டுக் காகிதத்தையும் அனுப்பியி ருந்தார்.

தோழர் கருணாநிதி அவர்களே, அவர் எண்ணிக் கொண் டார் - அவருக்குத் தோழர் என்று என்னை. நேராகப் பார்த்தி ருந்தால் 'பையா' என்று எழுதி இருப்பார். தோழர் கருணாநிதி அவர்களே "கேட்ட வண்ணம் தீட்டினேன் தெரிந்தவரைக்கும்" எவ்வளவு அடக்கம் பாருங்கள் - நாலு வரி எழுதத் தெரிந்து விட்டாலே ஆணவப் பார்வை பார்க்கின்ற சில பேர் நாட்டில்

உலவுகின்ற இந்தக் காலத்திலும் அவ்வளவு பெரிய கவிஞர் பாரதியாரோடு பழகிய அந்தப் பெருங் கவிஞர் ஒரு சாதாரண மாணவர்க்கு உயர்நிலைப் பள்ளியிலே படித்துக் கொண்டிருந்த மாணவர்க்கு எழுதுகின்ற கடிதத்தில் "கேட்ட வண்ணம் தீட்டினேன் தெரிந்த வரைக்கும். அலட்சியமாக இருந்து விடுவதுண்டு, வாரம் ஒன்றுக்கு இருபது ஒண்ணரையணா தபால் செலவை எண்ணி" இதற்கு என்ன அர்த்தம் என்றால் இப்படிப் பல பேர் என்னிடம் வாழ்த்துக் கேட்கிறார்கள். ஒருவரும் ஸ்டாம்ப் வைத்து அனுப்புவதில்லை. நான் அவர்களுக்கெல்லாம் ஒண்ணரையணா செலவழித்து அவர்களுக்கு வாழ்த்துக் கவிதைகள் அனுப்பிக் கொண்டு இருக்கிறேன் இவ்வளவு பொருளும் அதிலே அடங்குகின்ற வகையில், அலட்சியமாக இருந்ததுண்டு. வாரம் ஒன்றுக்கு இருபது ஒண்ணரையணா தபால் செலவை எண்ணி என்று எழுதியிருந்தார். அந்தக் கேலி நயத்தை என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள இயலவில்லை. புத்திசாலித்தனம் என்று கருதிக் கொண்டு மறுநாள் இருபது ஒண்ணரையணா தபால் தலைகளை வாங்கி அதை ஒரு கவரிலே வைத்து அவருக்கு அனுப்பி வைத்தேன். அது ஒரு பெரும் தவறுதான். அந்தத் தவறுக்குப் பிராயச்சித்தம்தான் அந்தக் கவிவேந்தருடைய சிலையைத் திறந்து வைக்கின்ற நிகழ்ச்சியிலே நான் கலந்து கொள்கிறேன். இன்னொன்று - அவரும் நானும் சந்திக்கின்ற வாய்ப்பு - அதற்குப் பிறகு இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்தது.

அதன் பின்னர் புதுவையிலே திராவிட இயக்கக் கொள்கைகளை வளர்க்கின்ற நாடகங்களை நாங்கள் நடத்தினோம் திராவிட நடிகர் கழகம் என்ற பெயரால். அந்த நேரத்தில் தான் புதுவையிலே ஒரு மாநாடு நடைபெற்றது.

தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா, நம்முடைய பேராசிரியர் அத்தனை பேரையும் அழைத்து அந்த மாநாட்டை நடத்தினோம். புரட்சிக் கவிஞர் முன்னின்று நடத்துகிறார்.

அங்கே நாடக மன்றம் நடத்திய காரணத்தால் நானும் மாநாட்டுக் குழுவிலே ஒருவனாக அங்கம் பெறுகிறேன். மறைந்து விட்ட காஞ்சி கல்யாண சுந்தரம் இடம் பெறுகிறார். புதுவை இராமலிங்கம் என்கின்ற அந்தக் காலத்துக் கழகத்தின் தூண் இடம் பெறுகிறார். அந்த மாநாட்டில் கொடியேற்றுபவர் நம்முடைய அண்ணா. காலையிலே கொடியேற்றப்படுகிறது. ஏற்றப்பட்ட அடுத்த வினாடி கொடி வெட்டப்படுகிறது. மாநாட்டுப் பந்தலுக்குள் பெரும் அமளி. மாநாடு அமளியிலே முடிவடைகிறது.

மாநாடு அமளியிலே முடிவடைந்த காரணத்தால் பெரியாரையும், அண்ணாவையும் ரிக்ஷாவிலே ஏற்றி அனுப்பி வைத்துவிட்டுப் புரட்சிக் கவிஞரும், நானும் நடந்தே மாநாட்டுப் பந்தலை விட்டு வீடு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். ஒரு பெரிய கும்பல் எங்களைச் சூழ்ந்து கொண்டது. புரட்சிக் கவிஞர் தாக்கப்பட்டார். நான் தாக்கப்பட்டேன். நாங்கள் இருவரும் தாக்கப்பட்டவுடன் அவர் வேறிடம் நான் வேறிடம் என்று பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. என்னைத் தாக்கிக் கொண்டே இருக்கிறார்கள். நான் ஓடிக் கொண்டே இருக் கிறேன். புதுவையிலே ஒரு கஷ்டம் என்னவென்றால் வீதிகள் எல்லாம் நேர் நேராக இருப்பதால் சந்துகளே வராது. நேராக இருப்பதால் சில நேரங்களில் இப்படி ஒரு ஆபத்து! என்னைக் கீழே கிடந்த பூட்ஸ் ஒன்றை எடுத்து அடித்துக் கொண்டே இருக்கிறார்கள். பிறகுதான் தெரிந்தது. அது புரட்சிக் கவிஞர் கழற்றிவிட்டுப் போன பூட்ஸ் என்று. அப்படியெல்லாம் அடியெல்லாம் பட்டு, பெரியார் என்னை அழைத்து மருந்து தடவி பிறகு ஈரோட்டுக்கு அழைத்துக் கொண்டு போன பிறகு எண்ணிக் கொண்டேன். பரவாயில்லை. அடிபட்டாலும் பாரதிதாசனுடைய பூட்ஸால் அல்லவா அடிபட்டோம் என்று அன்றைக்கு எண்ணி மகிழ்ச்சி அடைந்தேன். இப்படி அவருக்கும் எங்களுக்கும் இடையே பல்வேறு நிகழ்ச்சிகள்.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன் அவருடைய பாடல் களைத் திரைப்படத்திலே நாடகத்திலே நூல்களிலே பள்ளி யிலே, பல்கலைக் கழகத்திலே வைத்துக் கொள்ளத் துடியாய்த் துடிக்கின்றோம். ஆனால் அன்றைக்கு அவருடைய பாடல்கள் என்றால் பயந்து நடுங்கியவர்கள் உண்டு. இலக்கியச் செல்வர் குறிப்பிட்ட பராசக்தி படத்தில் நாங்கள் எல்லாம் அமர்ந்து காட்சியினுடைய முதல் பாடல் எதுவாக இருக்கலாம் என்று – ஒரு நடனப் பாடலாக இருக்கலாம் என்று முடிவு செய்து எந்தப் பாடல் அமைக்கலாம் என்று யோசித்தபோது நான் சொன்னேன். புரட்சிக் கவிஞர் எழுதிய 'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு' என்ற பாடலை வைக்கலாம் என்றேன். அவர் ஒப்புதல் தருவாரா என்று கேட்டார்கள். நிச்சயம் தருவார் என்றேன். பிறகு நானே புதுவைக்குச் சென்றேன். 'எங்கு வந்தாய்' என்று கேட்டார். சொன்னேன் பராசக்தி படத்தில் முதல் காட்சியில் 'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு' என்ற பாடலை வைக்கத் தீர்மானித்திருக்கிறோம். தங்களுக்கு எவ்வளவு தர வேண்டும் என்று கேட்டேன். அதை வைப்பதற்காக நீ எவ்வளவு கேட்கி றாய். நான் தருகிறேன் என்றார். கொள்கை பரவ வேண்டும் என்பதில் தன்னுடைய கருத்து மக்கள் உள்ளங்களுக்குச் சென்று தொட வேண்டும் என்பதிலே அவ்வளவு ஆர்வம் படைத்திருந்தார். அதற்கு முன்பு எத்தனையோ படங்களில் அவருடைய உரையாடல் வந்ததுண்டு குறிப்பாகச் சேலம் மாடர்ன் தியேட்டர்சில் அவருடைய உரையாடலைக் கொண்ட படங்கள் ஏராளமாக வந்ததுண்டு. அன்றைக்கு அவருடைய உரையாடல்களில் தமிழின் துள்ளல் இருக்கும். எனக்கு நினைவு அவருடைய ஒரு பாடலைத் தழுவி எடுத்த படம். அந்தப் படத்திலே அர்ச்சுனனைப் பற்றி ஒரு வர்ணனை 'அவன் கோபத்தோடு வந்தான் என்று சொல்லும்போது' வில்லைக் காட்டினான் விஜயன் என்கிறார். பிறகென்ன பல்லையா காட்டுவான்" இப்படிப்பட்ட உரையாடல்கள் திரையுலகத்திலே அண்ணா, நான் இளங்கோ இவர்களெல்லாம் நுழைவதற்கு

முன்பே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் அவைகளெல்லாம் அந்தக் காலத்திலே புராணப் படங்களாக வந்துவிட்ட காரணத்தால் அவைகள் பெற வேண்டிய விளம்பரங்கள் பெற முடியாமல் போயிருக்கலாம். ஆனால் உரையாடலிலும் சரி. அவர் திரையுலகத்திற்குப் படங்களுக்கு இயற்றிய பாடலிலும் சரி எதிலும் தமிழ் உணர்வு இருக்கும். பகுத்தறிவு உணர்வு இருக்கும். அந்தத் தமிழ் இனிமையை அவர் விட்டுக் கொடுக்க என்றைக்கும் தயாராகயில்லை.

இங்கே பேசியவர்கள் எல்லாம் புரட்சிக் கவிஞரின் அருமை பெருமை பற்றி வேறு கோணத்தில் பேசி விட்ட காரணத்தால் நான் இந்தக் கோணத்திலே பேசுகிறேன். ஒருமுறை சென்னையிலே இருக்கிற ஏவி.எம். திரைப்பட நிறுவனத்திற்கு நானும் புரட்சிக் கவிஞரும் காரிலே சென்று கொண்டிருக்கிறோம். வாசலில் நுழைந்து கார் போகும்போது குறுக்கே வழியை மறித்தார்கள். ஏனென்றால் உள்ளே அப்போது ஒரு பாடல் ஒலிப்பதிவு நடந்து கொண்டு இருந்தது - அப்போது கார் உள்ளே சென்றால் அந்த ஒலி அந்தப் பாடல் ஒலியைக் கெடுக்கக்கூடும் என்பதற்காகக் குறுக்கே மரம் போட்டுத் தடுத்தார்கள். ஏன் நிறுத்துகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் ஒலிப்பதிவு நடக்கிறது கார் சத்தம் கேட்டால் அதுவும் பதிவாகிவிடும் என்று சொன்னேன். அதற்குப் புரட்சிக் கவிஞர் கோபித்துக்கொண்டு கமழ்ந்திடும் பூவிலெல்லாம் என்ற வார்த்தையைப் பதிவு செய்ய முடியாத இந்தக் கருவி இந்தக் கார் ஒலியையா பதிவு செய்து விடும் என்று கேட்டார். என்னய்யா என்று கேட்டேன் அதற்கு அவர் சேலத்திலே ஒரு படத்திற்கு ஒரு பாடல் எழுதிக் கொடுத்தாராம். கமழ்ந்திடும் பூவிலெல்லாம் தேனருவி கண்டேன் என்று - அந்த ஒலிப் பதிவாளர் பாவேந்தரிடத்திலே வந்து மிகவும் பணிவோடு அய்யா இந்த வார்த்தையை மாற்றிக் கொடுங்கள் என்று கேட்டாராம். கமழ்ந்திடும் என்பதிலேயுள்ள ழகரம் சரி

யாகப் பதிவாகாது எனவே மாற்றிக் கொடுங்கள் என்று கேட்டாராம். இவருக்குக் கோபம் வந்து விட்டது. தமிழிலே அதற்குப் பெருமை அளிக்கக் கூடியது 'ழ'கரம்தான் அதைப் பதிவு செய்யாத ஒரு கருவி இருந்தால் நான் பாட்டெழுத மாட்டேன் போ என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார். பிறகு யாரோ அங்கிருந்த வேறு கவிஞர்கள் கமழ்ந்திடும் என்பதற்குப் பதிலாகக் குலுங்கிடும் மலர்களெல்லாம் தேனருவி கண்டேன் என்று மாற்றிக் கொடுத்தார்களாம். அதைக் காரில் வரும்போது நினைவுபடுத்தினார். இப்படிக் கமழ்ந்திடும் என்ற வார்த்தையைப் பதிவு செய்யாத கருவியா இந்தக் கார் சத்தத்தை பதிவு செய்துவிடும் திறடா என்றார். தமிழின் மீது தான் கொண்ட ஒரு எண்ணத்தின் மீது அவ்வளவு விடாப்பிடியாக இருந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அத்தகைய கவிஞர் தன்னுடைய கவிதையில் எவ்வளவு நயத்தைக் கொட்டினார் என்பதையெல்லாம் இலக்கியச் செல்வர் தனக்கே உரிய கற்பனை வளத்தோடு இங்கே எடுத்துச் சொன்னார். தலையணைக்கே கூடப் புதுப் பொருள் சொன்னார். தலையணை மந்திரம் எல்லாம் குமரியாகிய தனக்கே தெரியாது என்றார். குமரியாக இருக்கும்போது இதிலெல்லாம் தலையிட்டிருக்கக் கூடாது. (பலத்த கைதட்டல்) இருந்தாலும் தலையிட்டுச் சொன்னார். தலையை அணைப்பதால் அப்போது மந்திரம் என்று குறிப்பிட்டார். இது பாரதிதாசனுடைய கவிதைகளுக்கு நயம் - நயத்துக்கு நயம் என்ற வகையில் பல காலம் பேசிக் கொண்டிருக்க முடியும். 'குடும்ப விளக்கு' என்று கருதுகிறேன். அதில் பொழுது விடிவதைப் பற்றிச் சொல்கிறார். வைகறைவிடியலைப் பற்றிச் சொல்கிறார். எந்தக் கவிஞனும் சொல்லாத உவமையோடு சொல்கிறார்.

**தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த**
**கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது**

தொட்டியிலே நீலம் கரைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நீலம் கொஞ்சம் கொஞ்சமாக வெளுக்கிறது. சுண்ணாம்பை அதில் கொஞ்சம் கொஞ்சமாகக் கலந்து கொண்டிருந்தால் எப்படி அது கொஞ்சம் கொஞ்சமாக வண்ணம் நீங்கி வெண்மை பெறுமோ அதைப்போல

**தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த**
**கலப்பென இருள்தன் கட்டுக்குலைந்தது**

என்று குறிப்பிடுகிறார்

இன்னொன்று மிக ஆழமாக – விஞ்ஞான ரீதியோடு அவர் பாடல்கள் எழுதுவார் என்பதற்கு ஒரு சான்று. அவர் விதவைத் திருமணத்திற்காகப் போராடியவர். அவருடைய கவிதைகள் அதற்காகத் தொடர்ந்து முரசு கொட்டிக் கொண்டிருக்கின்றன. கலப்புத் திருமணம்–விதவைத் திருமணம், சமுதாயச் சீர்திருத்தம் இவைகளுக்காகத் தொடர்ந்து அவர் முரசு கொட்டியவர். விதவையின் துயரத்தைச் சொல்கிறார்.

**கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே வேரில் பழுத்த பலா**

என்பதோடு விடவில்லை அந்தக் கைம்பெண்ணுக்கும் உணர்வுண்டு என்பதை எடுத்துச் சொல்ல

**பாடாத தேனீக்கள் உலவாத்தென்றல்**
**பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ**

என்கிறார்

பாடாத தேனீக்கள் அதற்கு அடைமொழி கொடுக்கவில்லை. உலவாத் தென்றல் அதற்கும் அடைமொழி கொடுக்கவில்லை. ஆனால் ஒரு கைம் பெண்ணுடைய உள்ளத்தைப் பற்றிக் கேள்வி கேட்கிற நேரத்தில் சொல்கிறார்.

**பாடாத தேனீக்கள் உலவாத்தென்றல்**
**பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ**

பசியாத வயிறு பார்த்ததுண்டோ என்று கேட்கவில்லை. ஏனென்றால் எல்லா வயிறும் பசிப்பதில்லை. சில வயிறுகள் நோயின் காரணமாகப் பசி எடுப்பதில்லை. ஒரு நோயாளி மருத்துவரிடத்தில் சென்றால் மருத்துவர் கேட்கிற முதல் கேள்வி பசி எடுத்ததா? சாப்பிட்டீர்களா? என்று கேட்பது தான். நல் வயிறாக இருந்தால்தான் பசி எடுக்கும். எனவே பாரதிதாசன் அதையும் விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து கவிதை பாடுகிறார்.

**பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்**
**பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ**

என்று கேட்கிறார். அப்படி விஞ்ஞான ரீதியாகக் கவிதை எழுதிய பெருங் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்.

நமக்குக் கிடைத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எங்கு தவறு நடந்தாலும் சீறிக் கிளம்புகின்ற தன்மானச் சிங்கமாக - தலைதாழாச் சிங்கமாக - தமிழர்களுக்குப் பாதுகாப்பு அரணாக

**"வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்**
**தோள் எங்கள் வெற்றித் தோள்கள்**
**கங்கையைப் போல் - காவிரி போல்**
**கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்"**

என்று பாடிய கவிதை மூலமாக என்றென்றும் நம்முடைய உள்ளத்தில் தமிழுக்காக - தமிழர்களுக்காக - தமிழ்ச் சமுதா யத்துக்காகப் போராடக் கூடிய ஆற்றலைத் தந்தவர் அந்த மாபெரும் கவிஞர். அவர் வேதனையோடு பாடிய வரிகள் தான் -

**"இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி**
**இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே**

என்கிற பாடலாகும். இந்தப் பாடல் வரிகளில் இருக் கின்ற வேதனை இன்னமும் நீங்கிய பாடில்லை. இன்னும்

சாத்தூர்கள் – ராஜபாளையங்கள் திண்டுக்கல்கள் நடைபெறு கின்றன.

சாதி – மத பேதங்கள் இன்னும் ஒழிந்த பாடில்லை. இந்த நூற்றாண்டு விழாவிலாவது மதத்தை வேரோடு சாய்க்கப் புறப்பட்ட அந்தத் தடம் மாறாத பெருங் கவிஞன் பாரதி தாசன் பெயரில் சாதி மத பேதங்கள் அகல நாம் சூளுரை கொள்வோம்.

இந்த விழாவில் ஒரு இனிய நற்செய்தி. புரட்சிக் கவிஞ ருடைய குடும்பத்தார் தம்பி மன்னர் மன்னன் தலைமை யில் வந்து பாரதிதாசன் நூல்களை நாட்டுடைமையாக்க அரசுக்கு ஒப்புதலை வழங்கியிருக்கிறார்கள். அதற்குரிய தொகையை – அந்தக் குடும்பத்திற்குத் தேவையான என்று கூட அல்ல – இயன்ற தொகையைத் தந்து புரட்சிக் கவிஞர் தந்துள்ள மதிப்பில்லா அந்தப் புதையலுக்கு – அதற்கு விலை கிடையாது – இருந்தாலும் அரசின் சார்பில் இந்தத் தொகை யைக் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் பங்கிட்டுத் தரப்பட்டு இந்த நூற்றாண்டு விழாக் காலத்திலே புரட்சிக் கவிஞரின் நூல்கள் அரசுடைமையாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

# பாரதியும் - பாரதிதாசனும்

பாரதியாரைப் பற்றிப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடிய பாடலை இங்கே குறிப்பிட்டார்கள்.

> **"நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா**
> **காடு கமழும் கற்பூரச் சொற்கோ"**

– என்றெல்லாம் பாரதியாரைப் பற்றிப் புரட்சிக் கவிஞர் பாடினார்.

பேராசிரியர் பேசும்போது இங்கே குறிப்பிட்டார். முத்தமிழ்க் காவலர் தன்னுடைய உரையில் கோடிட்டுக் காட்டினார். வாழ்கிற நேரத்தில் அவர்களைப் பாராட்டுவதில்லை. மறைந்தபிறகு பாராட்டுகிற மரபு – தமிழர்களின் மரபாக ஆகி விட்டது என்று மனம் நோக இங்கே குறிப்பிட்டார். மறைந்தபிறகு கூடச் சில பேர் பாராட்டப்பட்டதில்லை.

அதைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனே எண்ணி எழுதித் தன்னுடைய வேதனையை வெளியிட்டிருக்கிறார். பாரதியாரைப் பற்றிப் புரட்சிக் கவிஞர் எழுதுகிறார்.

> **"வையத்து மாகவிஞர் மறைந்து போனார்**
> **வைதிகர்க்குப் பாரதியார் பகைவரேனும்**
> **செய்வதென்ன மேலுக்குப் புகழ்ந்தே வந்தார்"**

(வைதீகத்திற்குப் பாரதி பகைவன். இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் மேலுக்குப் புகழ்ந்தே வந்தார்)

> **சில நாட்கள் போகட்டும் என இருந்தார்**
> **உய்யும் வழி கெடாதிருக்க மெதுவாய் இந்நாள்**
> **உலக கவி அல்ல அவர் எனத் தொடங்கி**
> **அய்யர்கவி தைக்கு இழுக்கும் கற்பிக்கின்றார்**

(அய்யர் என்றால் புரட்சிக் கவிஞருடைய ஆசான் பாரதியார்)

"அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவாருண்டோ"

- என்று பாடியிருக்கிறார் பாரதிதாசன்.

அந்தக் காலத்தில் விகடன் பத்திரிகையில் கல்கி அவர்கள் பாரதியார் உலக கவி அல்ல என்று எழுதிய கூற்றுக்கு அன்றைக்கே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நியாயத்திற்காகப் போராடி - பாரதியாருக்காக வாதாடி எழுதினார் இந்தக் கவிதை.

ஆனால் காலமாற்றம், பாரதியை உலக கவி என்று ஏற்றுக் கொண்டது என்பதற்கு அடையாளமாக அதே கல்கி அவர்கள் அந்தப் பாரதிக்கு எட்டயபுரத்தில் மணிமண்டபம் கட்டினார். அது வேறு வரலாறு.

ஆனால் பாரதியை யாராவது சீண்டினால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத மாணவராக இருந்தவர் கனகசுப்புரத்தினம் - நமக்குக் கிடைத்த பாரதிதாசன் என்பதற்கு இந்தக் கவிதை வரிகளைத் தவிர வேறு சான்று தேவையில்லை.

- திருச்சியில் பாவேந்தர் பாரதிதாசன் சிலைத் திறப்பு விழாவில் கலைஞர் ஆற்றிய உரை. 6.5.90

# பாவேந்தரைப் பற்றிய இருட்டடிப்பு

பாவேந்தர் பெயர் வானொலியில் ஒரு பேச்சாளரால் இருட்டடிப்புச் செய்யப்பட்டது குறித்துப் பனகல் பூங்காவில் நடைபெற்ற தனது பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் கலைஞர் பேசினார். ஆனால் அந்தப் பேச்சைத் திரித்து 4.6.90 அன்று வெளி வந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழ் செய்தி வெளியிட்டது. பேச்சின் உண்மை வடிவை வெளி யிட்டும் எதிரிகளுக்குச் சூடு கொடுத்தும் 'சின்னக்குத்தூசி' ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அது பின்வருமாறு :

(பாவேந்தர் பெயர் எங்கும் இருட்டடிப்புக்கு ஆளாகி விடக் கூடாது என்பதில் கலைஞருக்கு இருந்த அக்கறைதான் இந்தப் பகுதியின் சாரம்)

ஞாயிற்றுக்கிழமை தினமணி – தேவிலாலை – பிரிவினை வாதி – வகுப்புவாதி என்று சித்திரிக்க முயன்றது என்றால் – மறுநாள் – திங்கள் கிழமை வந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் – முதல்வர் கலைஞர் அவர்களது பிறந்த நாள் விழாப் பேச்சைத் திரித்து,

> ***அவர் இப்படிப்***
> ***பேசியதற்குக்***
> ***காரணம்***
> ***அவர் பிராமண***
> ***விரோதி***
> ***என்பதால்தான்***

என்பது போன்ற பிரமையை உருவாக்க முயன்றிருக்கிறது.

பனகல் பூங்கா அருகே நடைபெற்ற பிறந்த தின விழாப் பொதுக் கூட்டத்தில் பேசிய முதல்வர் கலைஞர் அவர்கள்

அகில இந்திய வானொலியில் பாவேந்தர் பாரதிதாசனாரின் பெயர் இருட்டடிப்புச் செய்யப்பட்டது குறித்து - எடுத்துக்காட்டியிருக்கிறார். தலைவர் கலைஞர் - அகில இந்திய வானொலி பற்றிக் குறிப்பிட்ட குற்றச்சாட்டில்

1. குடும்ப நலத்திட்டம் பற்றி ஒருவர் வானொலியில் பேசினார்.

2. அந்தப் பேச்சில் பாரதியார் பெயரை நான்கு முறை குறிப்பிட்டார்.

3. அதே பேச்சில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளையே மேற்கோள் காட்டிய அந்தப் பேச்சாளர்-புரட்சிக் கவிஞர் பெயரை மட்டும் குறிப்பிடவில்லை, இது ஏன்?

- என்று கேட்டார்!

இந்தப் பேச்சை எக்ஸ்பிரஸ் ஏடு சுருக்கமாக வெளியிட்டு விட்டுச் செய்திக்கு நடுவில் தனது விமர்சனமாக அடைப்புக் குறிக்குள் ஒரு விஷவிதையை - துவேஷ விதையை - ஊன்றி இருக்கிறது.

எக்ஸ்பிரசின் விஷமத்தைப் படியுங்கள் -

(Bharathi was a Brahmin, but Bharathi Dasan was not. The Dravidian movement contends that Bharati Dasan's greatness is sought to be played down by Brahmins for obvious reasons.)

- என்று விஷம விமர்சனத்தைச் செய்திக்கு இடுக்கில் சேர்த்திருக்கிறது எக்ஸ்பிரஸ் ஏடு!

பாரதியார் பிராமணர் - பாரதிதாசன் பிராமணரல்லாதார். அதனால்தான் முதலமைச்சர் இந்தச் சம்பவத்தைச் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

- என்று எழுதி - கலைஞரின் முதுகில் "வகுப்புவாதி" என்ற முத்திரையை - சந்தடிசாக்கில் - குத்தி விட முனைந்

திருக்கிறது எக்ஸ்பிரஸ்! – ஞாயிற்றுக்கிழமை – தினமணி – தேவிலாலை பிரிவினைவாதி – ஜாட் இன மக்களின் தலைவர் – வகுப்புவாதி என்கிறது!

– திங்களன்று தமிழக முதல்வரை வகுப்புவாத சக்திக்குள் ஆழ்த்திவிட முயல்கிறது எக்ஸ்பிரஸ் ஏடு!

பிறந்தநாள் கூட்டத்தில் தலைவர் கலைஞர் பேசியது என்ன? அந்தப் பேச்சுக்கு வகுப்புவாத லேபிள் ஒட்ட முயல்கிறதே எக்ஸ்பிரஸ் என்ன காரணம்?

இதோ, தலைவர் கலைஞர் அவர்கள் வானொலி பற்றிக் குறிப்பிட்டுப் பேசியதன் முழுவிபரம் –

என்னைப் பொறுத்தவரையிலே – உழைத்துவிட்டு ஓய்வு கொள்கின்ற நேரத்திலேகூட – அப்பொழுதும் – ஒருவேலை என் சிந்தனைக்கு வந்துவிடும். இன்று மாலை 6 மணிக்கு கலைவாணர் அரங்கத்திலிருந்து வீடு திரும்பினேன். நண்பர்கள் எல்லாம் என்னை வீட்டிலே விட்டுவிட்டு வந்தார்கள். சற்றுப் படுத்தேன். படுத்த நான் சும்மாயிராமல் வானொலியைத் திருப்பினேன். 6.05க்கு "துயில் எழுவீர்" என்ற தலைப்பிலே – யாரோ ஒரு சபாபதி – கனகசபா பதியோ நடன சபாபதியோ பேசினார். அந்தப் பேச்சு குடும்பநலத் திட்டத்தைப் பற்றிய பேச்சு. அந்தப் பேச்சில் நான்கு முறை பாரதியாரின் பெயரைச் சொன்னார். பாரதியார் குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிப் பாடியவர் அல்ல. நான்கு முறை அவர் பெயரைச் சொன்னார். அவர் பெயரைச் சொன்னதிலே எனக்கு மாறுபாடு இல்லை.

இங்கே வரதராஜன் சொன்னாரே – நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா, காடு கமழும் கற்பூரச் சொற்கோ – என்று, எங்கள் பாரதிதாசன்தான் பாரதியாரைப் பாராட்டிப் பாடியவர். அதிலே எனக்கு மாறுபாடு இல்லை. "அக்கினிக் குஞ்சொன்று கண்டேன், அதை ஆங்கொரு பொந்தினிலே

வைத்தேன். வெந்து தணிந்தது காடு" என்று வானொலியிலே அந்தப் பாட்டைச் சொன்னார். இவ்வளவும் பாரதியாரைப் பற்றிச் சொன்னார். ஆனால் தலைப்பு குடும்ப நலத் திட்டத்தைப் பற்றியது. ஒரு கவிதையைச் சொன்னார். "காத லுக்கு வழி வைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டறிவோம், அதிலென்ன குற்றம்?" - இது பாரதிதாசனின் பாட்டு! இந்தப் பாட்டைச் சொல்லிவிட்டு - இப்படியொரு கவிஞன் பாடியிருக்கிறான் என்றார். வலிந்து பாரதியாரின் பெயரை நான்குமுறை சொன்ன அந்தப் பேச்சாளர் வானொ லியில் காதலுக்கு வழி வகுத்துக் கருப்பாதை சாத்தக் கத வொன்று கண்டறிவோம். அதிலென்ன குற்றம்? என்று 50 ஆண்டுகளுக்கு முன்பே - அரசாங்கம் இது பற்றி யோசிப்ப தற்கு முன்பே துணிந்து சுய மரியாதைக் கருத்தை - பெரி யாரின் கருத்தை - அண்ணாவின் கருத்தைப் பாரதிதாசன் எழுதிக் காட்டினார். ஆனால் அந்தப் பாரதிதாசனின் பெயரைச் சொல்லாமல் "இப்படியொரு கவிஞன் பாடி னான்" என்று அந்த வானொலிப் பேச்சாளர் பேசினார்.

அடுத்து இன்னொரு கவிதை வரி - பாரதிதாசனின் வரி தான் - அதையும் சொன்னார். "பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்தது" - என்று சொன்னதைப்போல என்று அந்தப் பேச்சாளர் சொன்னாரே தவிர, பாவேந்தன் சொன்னதைப் போல, புரட்சிக் கவிஞர் சொன்னதைப்போல - பாரதிதாசன் சொன்னதைப்போல என்று சொல்லவில்லை. நான் எண்ணிக் கொண்டேன். இன்னுமா இருட்டடிப்பு எங்களுக்கு (கைதட்டல்) என்று நான் எண்ணிக் கொண்டேன்.

மத்திய அமைச்சர் உபேந்திரா இங்கே இருக்கிறார். வானொலிக்கும் அவர் அமைச்சர். அதனால் சொல்கி றேன். இப்படிப்பட்ட பேச்சுகளை நாங்கள் எழுதி அனுப் பினால் - நானோ, பேராசிரியரோ, நாஞ்சிலாரோ, வீர மணியோ, மாறனோ பேசுவதாக இருந்தால் - அந்தப் பேச்சைப் படித்துப் பார்த்துவிட்டு என்ன ஒரு கவிஞன்

என்று போட்டிருக்கிறீர்கள்? இது பாரதியார் என்றல்லவா போட்டிருக்க வேண்டும், என்று கேட்கக் கூடியவர்கள் - இன்றைக்குக் கேட்டார்களா? என்ன ஒரு கவிஞன் என்று போட்டிருக்கிறீர்கள், பாரதிதாசன் என்றல்லவா போட்டிருக்க வேண்டுமென்று கேட்டார்களா என்றால் கேட்கவில்லை.

இந்த இருட்டடிப்பு இன்று நேற்றல்ல, நீண்ட காலமாக நடைபெற்று வருகின்ற இருட்டடிப்பு

- இதுதான் கலைஞர் பேசியது! இதை ஏன் எக்ஸ் பிரஸ்'-திசை திருப்பிவிட முயல்கிறது?

## ஜாதித் துவேஷ உணர்வுகளின் ஆணிவேர் - ஊன்றி நிற்கும் இடங்கள்!

சென்னைப் பனகல் பூங்கா அருகே நடைபெற்ற முதல்வர் கலைஞரின் பிறந்ததின விழாவில் தலைவர் கலைஞர் வானொலி மீது கூறிய ஒரு குற்றச்சாட்டில்

1. குடும்ப நலத் திட்டம் பற்றிப் பேசிய ஒருவர் பாரதியார் பெயரை நான்குமுறை சொன்னார்.

2. குடும்ப நலத்திட்டம் பற்றிய பாடல்களையும் பாரதியார் பாடியதில்லை. எனினும் குடும்பநலத் திட்டம்பற்றி வானொலியில் பேசியவர் நான்கு முறை பாரதியார் பெயரைச் சொன்னார்.

3. ஆனால் அதே சமயம் பாவேந்தர் பாரதிதாசன் பாடிய குடும்ப நலத்திட்டப் பாடல் வரியை மேற்கோள் காட்டிய வானொலிப் பேச்சாளர் பாரதிதாசன் பெயரைக் குறிப் பிடாமல் 'ஒரு கவிஞன்' என்று குறிப்பிட்டு இருட்டடிப்புச் செய்தார்.

4. மீண்டும் ஒரு பாரதிதாசன் பாடலை மேற்கோள் காட்டிப் பேசினார் அவர். அப்போதும் புரட்சிக் கவிஞரின் பெயரைச் சொல்லவில்லை அவர்.

5. குடும்ப நலத் திட்டம் என்ற தலைப்பில் பேசியவர் குடும்ப நலத்திட்டம் பற்றி எதுவும் பாடாத பாரதியார் பெயரை நான்கு முறை சொன்னார், ஆனால் குடும்ப நலத்திட்டம் பற்றிப் பாடிய பாரதிதாசனாரின் பாடலை மேற்கோள் காட்டும் போது – பாரதிதாசன் பெயரைக் குறிப்பிடாமல் இருட்டடிப்புச் செய்ய வேண்டிய அவசியம் என்ன?

– என்ற வினாக்கணைகள் தொடுத்தார்.

கலைஞரின் இந்தக் கேள்வி எக்ஸ்பிரஸ் நிருபருக்கு எரிச்சலை ஏற்படுத்தி இருக்கிறது!

பாரதிதாசன் பெயரைச் சொல்லாதது ஏன் – என்று வானொலியை நோக்கிக் கலைஞர் கேட்ட கேள்வியைத் திசை திருப்பும் விதத்தில் "பாரதியார் பிராமணர், பாரதி தாசன் பிராமணரல்லாதார். ஆகவே பிராமணர்களைக் குறை கூறும் விதத்திலேயே இந்தக் கேள்வியைக் கலைஞர் எழுப்பினார் என்று அடைப்புக் குறிக்குள்' விமர்சனம் எழுதி விஷமம் செய்திருக்கிறது எக்ஸ்பிரஸ் ஏடு!

இத்தனைக்கும் கலைஞர் பிறந்ததின விழாவில் செய்தி சேகரிக்க வந்தவர் மிக மிக முற்போக்குக் கருத்துள்ளவராம்! என்னதான் முற்போக்காயிருந்தாலும அந்தச் சாதியுணர்வை மட்டும் அவர்களால் விட்டுவிட முடியவில்லையே! என்ன செய்வது?

இது இன்றுதான் எக்ஸ்பிரஸ் ஏட்டில் மட்டும் தான் வெளிப்படும் 'சாதித் துவேஷம்' என்பதல்ல,

திராவிட இயக்கத்தவருக்கு எதிராகப் பன்னெடுங் கால மாக – அவர்கள் உபயோகித்து வரும் துருப் பிடித்த ஆயுதம் தான் இது!

திராவிடர் இயக்கத்தவரை மட்டும்தான் என்பதல்ல, காங் கிரஸ்காரர்களாக இருந்தாலும், அவர்கள் ரமண மகரிஷியின் அத்தியந்த சீடர்களாக இருந்தாலும் கூட அவர்கள் தங்கள்

சாதியைச் சேராதவர்கள் என்றால் அவர்களுக்கு வகுப்பு வாதிகள்! என்று முத்திரை குத்தி விடுவார்கள்.

பெருந்தலைவர் காமராஜருக்கும் அவர்கள் இந்த முத்தி ரையைக் குத்தியிருக்கிறார்கள்!

– சென்னை ராஜதானியின் முன்னாள் பிரதமர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்மீதும் – இந்த சாதித் துவேஷி என்ற லேபிளை ஒட்டியிருக்கிறார்கள்.

சுதந்திர இந்தியாவில் – சென்னை ராஜதானியின் முதல் பிரதம அமைச்சராக வந்தவர் டி. பிரகாசம் காரு.

அவருக்குப்பின் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் பிரதம அமைச்சராக காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி – அடுத்த பிரதமர் (முதலமைச்சர்) ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தான் என்று ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தபிறகு அவரைச் சந்தித்து – செய்தியைச் சொன்னார்கள்.

அப்போது

ஓமந்தூரார் சொன்னார்

“நீங்கள் என்னை முதல்வராகத் தேர்ந்தெடுத்தது குறித்து மகிழ்ச்சி, நன்றி. ஆனால் ஒரு சின்ன நிபந்தனை.

நான் திருவண்ணாமலை செல்கிறேன். அங்கே பகவான் ரமண மகரிஷியிடம் நீங்கள் என்னை முதல்வராகத் தேர்ந் தெடுத்த விஷயத்தைத் தெரிவிப்பேன்.

பகவான் ரமணர் ‘நீ முதல்வர் பதவியை ஏற்கலாம்’ என்று ஆசீர்வதித்தால் – பதவியை ஏற்றுக் கொள்வேன். இல்லாவிட்டால் நீங்கள் முதல்வர் பதவிக்கு வேறு ஒரு வரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும் – என்றார்.

ஓமந்தூரார் - திருவண்ணாமலை சென்றார். பகவான் ரமண மகரிஷியைச் சந்தித்தார். ரமணர் "நீங்கள் பதவியை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறி ஆசீர்வாதம் செய்தார்.

அதன்படியே - ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சர் (பிரதமர்) பதவியை ஏற்றுக் கொண்டார்.

நாம் இந்தச் சம்பவத்தை - எடுத்த எடுப்பிலேயே நினைவு படுத்திக் காட்டுவதற்கு விசேஷ காரணம் ஒன்று உண்டு.

- ஓமந்தூரார் பழுத்த காங்கிரஸ்காரர்!

- வள்ளலார் ராமலிங்க அடிகளாரின் தொண்டுகளை அனுஷ்டித்தார்.

- தெய்வ நம்பிக்கை மிகுந்தவர்!

- ரமண மகரிஷியைக் கேட்காமல் எந்த ஒரு முக்கிய காரியத்திலும் ஈடுபட மாட்டார்.

- அப்படிப்பட்ட மிகச் சிறந்த தெய்வ பக்தரைக் கூட அந்தக் காலத்தில் இன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் கையில் எடுத்துக் கொண்டிருக்கிற இதே 'பிராமணத் துவேஷி' என்ற முத்திரையை உபயோகித்துத்தான் ஒழித்துக் கட்ட முயன்றார்கள்.

அவர் ரெட்டியார்<br>
என்பதாலேயே<br>
பிராமண குலத்தில்<br>
பிறக்கவில்லை

என்பதாலேயே அவருக்கு எதிராகத் தங்கள் பேனா முனையைத் திருப்பினார்கள்.

'இந்து' பத்திரிகை பகிரங்கமாக ஓமந்தூரார் மீது ஜாதித் துவேஷப் புழுதியை வாரி இறைத்தது.

ஓமந்தூராரை - 'இந்து' - கறுப்புச் சட்டை அணியாத ஈ.வே.ரா என்று வருணித்தது -

வெளியே தாடி வைத்த ராமசாமி!

கோட்டையில் தாடி இல்லாத ராமசாமி என்று வர்ணித்து ஓமந்தூராருக்கு எதிராக விஷமப் பிரச்சாரம் செய்தார்கள்.

அப்போது –

சென்னை உயர்நீதிமன்றத்திலே ஒரு நீதிபதி பதவி காலியாக இருந்தது.

இந்த இடத்திற்கு ஓமந்தூரார் அரசு
சோமசுந்தரம்
என்பவரைச்
சிபாரிசு செய்தது.
நீதிபதியாகச் சோமசுந்தரம் நியமிக்கப்பட்டார்!

நீதிபதி சோமசுந்தரம் – பிற்காலத்தில் மிகச் சிறந்த நீதிபதி என்று உயர்நீதிமன்ற வட்டாரத்தில் – நீதித் துறையில் – புகழ் பெற்று விளங்கினார்.

நீதிபதியாகச் சோமசுந்தரத்தை நியமித்ததை எதிர்த்து 'இந்து' கடுமையான வாசகங்களைப் பெய்து – தலையங்கம் எழுதியது.

'இந்து' தலையங்கத்தின் சாரம் வருமாறு –

"உயர்நீதிமன்றத்தில் நியாயமாக மத்திய ரயில்வே அமைச்சர் கோபால்சாமி அய்யங்காரின் நெருங்கிய உறவினரான ஒரு தலைசிறந்த வழக்கறிஞரைத்தான் நீதிபதியாக நியமித்திருக்க வேண்டும்.

ஆனால் முதலமைச்சர் ராமசாமிரெட்டியாரின் பிராமணத்துவேஷம் காரணமாக – இந்த இடம் கோபாலசாமி அய்யங்காரின் உறவினருக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

என்று குற்றஞ்சாட்டி எழுதியிருந்தது 'இந்து'.

இந்து – எக்ஸ்பிரஸ் – தினமணி போன்ற ஏடுகள் எதை

எழுதினாலும், எதைப் பிரசுரித்தாலும் – அவைகளை – கத்த ரித்து – மத்திய சர்க்காருக்கு அனுப்பி வைப்பது என்பது அந்தக் காலத்திலேயே அமலுக்கு வந்துவிட்ட விஷயமாகும்!

'இந்து' தலையங்கத்தை – பிரதமர் பண்டித ஜவகர்லால் நேருவின் கவனத்திற்கே கொண்டு போய்விட்டார்கள்.

அப்போது –

வேறு அரசு அலுவல் தொடர்பாக முதல்வர் ஓமந்தூரார் டெல்லி செல்ல நேர்ந்தது.

முதல்வர் ஓமந்தூரார் – பிரதமர் நேருவைச் சந்தித்தார்.

அப்போது அருகில் துணைப் பிரதமர் வல்லபாய் பட்டேலும் இருந்தார்.

பிரதமர் நேரு –

ஓமந்தூராரிடம் 'இந்து' கட்டிங்ஸை எடுத்துக் காட்டி னார் – சிவந்த முகத்துடன் கோபம் கொப்பளிக்க,

"நீங்கள் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் பொறுப்பை வகிக்கிறீர்கள், நீங்கள் எல்லோருக்கும் பொதுவாக நடக்க வேண்டாமா? இப்படிப் பிராமண துவேஷத்துடன் நடந்து கொள்ளலாமா?"

–என்று படபடவென்று பொரிந்து தள்ளினார் பிரதமர் நேரு.

ஓமந்தூரார் இது கேட்டுச் சிறிதும் அதிர்ச்சியடைந்து விடவில்லை.

கைப்பையிலிருந்து, தனது லெட்டர் பேடை எடுத்தார். அந்த இடத்திலேயே தமது பதவியை ராஜினாமா செய்து பிரதமரின் கையில் – ராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்தார்.

"பண்டிட்ஜி! இதோ, எனது ராஜினாமாக் கடிதம்! இது உங்களிடமே இருக்கட்டும். நான் சென்னை திரும்பியதும்

நீதிபதி நியமனம்
பற்றிய
கோப்புகளை
உங்கள்
பரிசீலனைக்கு
உடனடியாக
அனுப்பி வைக்கிறேன்

நீங்களே பரிசீலியுங்கள், நான் விதிகளுக்கு விரோதமாக – சட்டப் படிக்கு அல்லாமல் – வேறு புறக்காரணங்களின் அடிப்படையில் இந்த நியமனத்திற்காகச் சிபாரிசு செய்திருப்பதாக நீங்கள் உணர்ந்தால் –

"இதையே எனது
ராஜினாமாவாக ஏற்று
என்னை முதல்வர்
பதவியிலிருந்து
நீக்கி விடலாம்"

– என்று உறுதி பொங்கிடக் கூறினார்

நேருஜி – இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஓமந்தூ ரார் விடைபெற்ற பின்னர் – வல்லபாய் பட்டேல் – நேருவை மிகவும் கடிந்து கொண்டார்.

"எவ்வளவு நேர்மையான மனிதர் ஒருவரை – இப்படிப் புண்படுத்தி விட்டீர்களே" என்று நேருவுக்கு – ஓமந்தூராரின் உயர் குணங்களைச் சுட்டிக் காட்டினார் அவர்!

சொன்னபடியே-சென்னை திரும்பியதும் ஓமந்தூரரார் –

நீதிபதி நியமனம்
பற்றிய கோப்புகளைப்
பிரதமர் நேருவிற்கு உடனடியாக
அனுப்பி வைத்தார்

நேருஜியே அதனைப் பரிசீலித்தார். விதிகளின்படியே - மத்திய அரசு எடுத்த கொள்கை முடிவின் அடிப்படையிலேயே நீதிபதி நியமனம் நடைபெற்றிருப்பதை - கோப்புகள் எடுத்துக் காட்டின!

ஓமந்தூராருக்கு - வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதினார் பிரதமர் நேரு!

ஓமந்தூரார் திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்தவரல்ல! காங்கிரஸ்காரர், காந்தியவாதி, தெய்வ நம்பிக்கை மிக்கவர், ரமணர் கிழித்த கோட்டைத் தாண்டாதவர்!

இத்தனையும் இருந்து என்ன பயன்? ஒரு நீதிபதி பதவியில் - அவர் பிராமணரல்லாத ஒருவரை நியமித்து விட்டார் என்பதற்காக - 'இந்து' பகிரங்கமாக அவர் மீது போர்ப்பிரகடனம் செய்து - தாக்குதலை ஆரம்பித்தது!

பிரதமர் வரையிலே போய் ஓமந்தூராரைப் பற்றிய புகார் கூறி, பிரதமருக்கும் - முதலமைச்சருக்குமிடையே கசப்புணர்ச்சியை - கருத்து வேறுபாட்டை உருவாக்க முயற்சித்தது, தனது விஷம வேலையில் அது வெற்றியும் பெற்றது.

அதே பாணியைத்தான் - அதே ஆயுதத்தைத்தான் இன்று எக்ஸ்பிரசும் தினமணியும், கல்கியும், தினமலரும் ஜுனியர் விகடனும், துக்ளக்கும்

கலைஞருக்கு
எதிராக
உபயோகித்து
வருகின்றன

மத்திய அரசுக்கும் - மாநில அரசுக்குமிடையே கசப்புணர்வுகளை உருவாக்கி

தேசிய முன்னணியிலிருந்து
தி.மு.கழகத்தை

வெட்டிப் பிரித்துவிட வேண்டும்
என்று, அன்றைய
'இந்து' பாணியிலேயே

ஜாதித்துவேஷ அடிப்படையில் விஷமப் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டிருக்கிறார்கள்!

அந்த உணர்வுதான் "பாரதிதாசன் பெயரை ஏன் இருட்டடிப்புச் செய்ய வேண்டும்?" என்று தலைவர் கலைஞர் கேட்டதை

பாரதி பிராமணன்
பாரதிதாசன் - பிராமணர்
அல்லாதவர்

என்று வகுப்பு வாதச் சாயம் பூச வைக்கிறது எக்ஸ்பிரஸ் நிருபரை!

இப்படிப்பட்ட அவதூறுப் பிரச்சாரங்களை, அபாண்டப் பழிகளை எல்லாம் - தி.மு.கழகம்

தனது தொடக்க நாளிலிருந்தே சந்தித்துச் சந்தித்துப் பழக்கப்பட்டிருக்கிறது! அவதூறுகளை முறியடித்திருக்கிறது!

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இந்துவின் விஷமப் பிரச் சாரத்தைக் கோப்புகள் மூலம் மட்டுமே முறியடித்து விடவில்லை. அவர் இன்னொரு காரியமும் செய்தார்!

கோட்டையிலிருந்து இந்து ஆசிரியருக்கு ஒரு அழைப்பு விடுத்தார்.

"தங்களை நேரில் சந்திக்க விரும்புகிறேன், கோட்டைக்கு வர முடியுமா?" என்று இந்து ஆசிரியரை அழைத்தார்.

'இந்து' ஆசிரியர் ஓமந்தூராரைச் சந்திக்கக் கோட்டைக்கு வந்தார்.

அவரை அன்புடன் வரவேற்று உபசரித்த ஓமந்தூரார் – 'இந்து' பத்திரிகை பற்றிப் பல கேள்விகளைச் சரமாரியாகத் தொடுத்தார்.

– இந்துவில் எத்தனை உதவி ஆசிரியர்கள் யார்? யார்?

– நிருபர்கள் எத்தனை பேர் யார்? யார்?

– சர்க்குலேஷன் மேனேஜர் யார்?

– விளம்பர மானேஜர் யார்?

– ஜெனரல் மேனேஜர் யார்?

– என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டேயிருந்தார்.

'இந்து' ஆசிரியரும் பெருமை பொங்கிட எல்லாக் கேள்விகளுக்கும் சளைக்காமல் பதிலளித்தபடியே இருந்தார்.

கடைசியாக – இந்து ஆசிரியரை நோக்கி ஓமந்தூரார் ஒரு கேள்வியைக் கேட்டார். அது என்ன?

"உங்கள் நிறுவனத்தில் வேலை பார்க்கும் அனைவரும் அய்யங்கார்கள், அய்யர்கள் என்று தெரிவித்தீர்களே, இப்படிப்பட்ட நீங்கள் என்னை ஜாதித்துவேஷம் கொண்டவன் என்று கூறுகிறீர்களே என்னைக் குற்றம் சாட்ட உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?"

– என்று கேட்டார் ஓமந்தூரார்! 'இந்து' ஆசிரியரால் ஓமந்தூராரின் கடைசிக் கேள்விக்குப் பதிலளிக்க முடியவில்லை!

அதே ஆட்கள் அதே வியூகம், அதே ஆயுதங்களை எடுத்துக் கொண்டு கலைஞரை ஒரு குறிப்பிட்ட ஜாதியினருக்கு எதிரானவர் என்று சித்திரிக்க முயலுகிறார்கள்!

அதன் ஒரு முகம் தான் இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட சாதி ஆராய்ச்சி அடைப்புக் குறி விமர்சனம்!

# பாவேந்தர் நூற்றாண்டு தோரண வாயில்!

## முதல்வர் அடிக்கல் நாட்டினார்!

பாண்டிச்சேரி, ஆக. 27

புதுவைக்கு அருகே கனகசெட்டி குளத்தில் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா நினைவுத் தோரண வாயிலுக்கு முதல்வர் கலைஞர் அடிக்கல் நாட்டினார்.

கனக செட்டி குளத்தில் பாவேந்தர் பாரதிதாசன் தோரண வாயிலுக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை வருமாறு -

புதுவை இன்று விழாக்கோலம் பூண்டு பல்வேறு சிறப்பு மிகுந்த நிகழ்ச்சிகளிலே நான் கலந்து கொள்கின்ற வாய்ப்பினைப் பெற்று அடுத்து ஒரு நிகழ்ச்சி இருக்கின்ற நிலையில் பாவேந்தர் பெயரால் அவருடைய நூற்றாண்டு விழாத் தோரணவாயில் ஒன்று அமைக்கின்ற பணிக்கான தொடக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்ற வாய்ப்புப் பெற்றமைக்காக வாய்ப்பினை நல்கிய புதுவை அரசுக்கு என்னுடைய இதய மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோரணவாயில் என்பது தமிழ்நாடு வரலாற்றில் மிகப் புகழ் வாய்ந்த ஒரு குறிப்பு. கரிகால் பெருவளத்தான் வடபுலம் சென்று பல மன்னர்களை வென்ற நேரத்திலும் பல மன்னர்கள் அவனோடு சமாதானமாகப் போய்விட விரும்பி அவனுடைய நட்பைக் கோரிய நேரத்திலும் பல பரிசுகளைக் கரிகால் பெருவளத்தானுக்கு வழங்கினார்கள். அவைகளிலே ஒரு பரிசு முத்து மண்டபம். மற்றொன்று தோரண வாயில்

அவன் தன்னுடைய தலைநகரங்களில் ஒன்றாகக் கொண்டிருந்த பூம்புகாரில் அந்த முத்து மண்டபம், தோரணவாயில் இவைகளெல்லாம் அமைக்கப்பட்டிருந்தன என்று இலக்கியச் சான்றுகள் உள்ளன.

அதனால்தான் பூம்புகாரிலே ஒரு புதிய கலைக் கூடத்தை 76க்கு முன்பு தி.மு.கழக ஆட்சி நடைபெற்றபொழுது நாங்கள் நிறுவிய நேரத்தில் அங்குள்ள பல்வேறு தோரண வாயில் களைப் பல வரலாற்று நாயகர்களுடைய பெயரால் அமைத் திருக்கின்றோம்.

இங்கே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா நினைவாகப் பாவேந்தர் நூற்றாண்டு விழா வளைவு ஒன்று அமைக்க வேண்டுமென்று புதுவை முதலமைச்சரும் மற்ற வர்களும் என்னிடத்திலே கேட்டபொழுது வளைவு என்று இருக்க வேண்டாம். தோரணவாயில் என்று இருக்கட்டும் என்று சொன்னேன். காரணம் பாவேந்தர் பாரதிதாசன் யாருக்கும் வளைபவர் அல்ல. வளைந்து கொடுத்தவர் அல்ல. அதனால் அவருடைய பெயரால் வளைவு என்று ஒன்று அமைவது நல்லதல்ல. தோரணவாயில் என்று கம்பீரமாக அந்தப் பெயர் இருக்கட்டும் என்று நான் அவர்களிடத்திலே கேட்டுக் கொண்டேன்.

அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு தோரண வாயில் அமைப்பதற்கான தொடக்க விழாவை இன்றைக்கு நிகழ்த்தியிருக்கின்றார்கள்.

புரட்சிக் கவிஞரைப் பற்றி அடுத்து நடைபெறுகிற நிகழ்ச்சியில் நீண்ட நேரம் உரையாற்ற வேண்டிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் இங்கே அமையவிருக்கின்ற எழி லும், ஏற்றமும் மிகுந்ததும், நம்முடைய இனமானத்தைத் தெரிவிப்பதும், சமுதாயத்திலே புரையோடிப் போயிருக் கின்ற பல்வேறு செய்திகளை எடுத்துக்காட்டி அவை களையெல்லாம் அகற்றுவதற்கு வழி சொல்லுவதுமான

கவிதைகளைப் படைத்த பாவேந்தர் பெயரால் அமைகின்ற தோரணவாயிலுக்கு அடிக்கல் நாட்டியதிலே மெத்தவும் மகிழ்ச்சியடைந்து இந்த வாய்ப்பை அளித்த புதுவை அரசுக்கு, அமைச்சர் பெருமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

# புதுவையில் நூற்றாண்டு விழா

தமிழகத்தில் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே புதுவையில் தி.மு.கழக அரசுதான் கொலு வீற்றிருந்தது. எனவே புதுவை அரசும் பாவேந்தர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதில் மிகுந்த முனைப்பும் ஆர்வமும் காட்டியது.

27.08.90 அன்று புதுவை அரசின் சார்பில் கொண்டாடப்பட்ட பாவேந்தர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார். அந்த உரை வருமாறு :

**"வெள்ளம்போல் தமிழர் கூட்டம்,**
**வீரங்கொள் கூட்டம் அன்னார்**
**உள்ளத்தால் ஒருவரே மற்று**
**உடலினால் பலராய்க் காண்பார்"**

என்ற பாவேந்தருடைய மொழிக்கேற்பப் புதுவையில் இன்றைக்கு மக்கள் கடல் பாவேந்தருடைய புகழைப் பாடுகின்ற காட்சியைக் கண்டு நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். புதுவை மாநில அரசின் சார்பில் பாவேந்தருக்குத் தொடர்ந்து எடுத்து வருகின்ற விழா நிகழ்ச்சிகளை நான் கேள்விப்பட்டு வருகிறேன். பாவேந்தரைப் பற்றிய கவியரங்கங்கள், கருத்தரங்கங்கள், அந்தக் கவியரங்குகளிலே நல்ல முறையிலே கவிதைகளை இயற்றியவர்களுக்குப் பரிசு வழங்குதல், பாவேந்தரைப் பற்றிய கருத்துப் பரிமாற்றங்களுக்கான போட்டிகள், அவைகளுக்கான பரிசளிப்பு விழாக்கள் என்று தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. அந்த நிகழ்ச்சிக்கோவையில் ஒரு பகுதியாக இன்றைக்குக் காலையிலிருந்து இதுவரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்பொழுது இந்த மாநகரத்தில் எங்கு நோக்கினும் பாவேந்தருடைய படங்கள், பாடல்கள் இருக்கின்ற நிலையைப் பார்க்கும்பொழுது இந்த

ஊரில் எதிர் நீச்சல் போட்டு, தான் கொண்ட கொள்கைகளை மக்களுடைய உள்ளத்திலே பதிய வைப்பதற்காக அரும்பாடு பட்ட அந்த அரிமாக் கவிஞன் நாற்பத்தி ஐந்து ஆண்டு களுக்குப் பிறகு இந்த மாநிலம் மாத்திரமல்ல, தமிழ்நாடு மாத்திரமல்ல, அனைத்திந்தியாவிலே உள்ள மாநிலங்கள் மாத்திரமல்ல, உலகத்திலே எங்கெல்லாம் தமிழன் வாழ்கின் றானோ, அவனெல்லாம் போற்றுகின்ற வகையிலே உயர்ந் திருக்கின்ற நிலையைக் காணுகிறேன். அவரோடு பழகிய வர்கள் என்ற முறையிலும், அவர் பட்ட கஷ்டங்களில் பங்கு பெற்றவர்கள் என்ற வகையிலும், அவருக்குத் துணை நின் றவர்கள் என்ற நிலையிலும், அவருடைய கவிதைகளை எடுத்து வைத்து, அவைகளைப் போர் முரசங்களாக ஒலித் துத் தமிழர் படையைத் திரட்டியவர்கள் என்ற முறையிலும் எவ்வளவு மகிழ்ச்சி எங்களுக்கெல்லாம் இருக்குமென்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. எல்லையற்ற மகிழ்ச்சிக்கு இன்றைக்கு நாங்களெல்லாம் ஆளாகியி ருக்கிறோம்.

புதுவை அரசு பாவேந்தருடைய விழாவைக் கொண்டாடு வது மாத்திரமல்லாமல், அவருடைய நினைவைப் போற்று கின்ற வகையிலே பல அரும் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறது. இன்று ஒரு பகுதியிலே பாவேந்தருடைய நூற்றாண்டு விழாத் தோரண வாயில் அமைப்பதற்கான தொடக்க நிகழ்ச்சி அமைக்கப்பட்டு, அதை நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பை எனக்கு அளித்து, அங்கு ஆயிரக் கணக்கான மக்களுக்கிடையே தோரண வாயிலுக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றிருக்கின்றது.

பாவேந்தருடைய உணர்வுகளுக்கு உருவம் கொடுக்கின்ற வகையிலே 'தமிழ் வளர்ச்சித் துறை, புதுச்சேரி' என்ற ஒரு அமைப்பு தொடங்கப்படுகின்றது. அவருடைய வழித்தோன் றல்களாக வளர்ந்து வருகின்ற கவிஞர்களையெல்லாம் பாராட்டி ஊக்கப்படுத்தி, உற்சாகம் தந்து, அவர்கள் மேலும்

மேலும் பாவேந்தருடைய எண்ணங்களை - கருத்துக்களை நாட்டில் பரப்புவதற்குத் துணை நிற்கின்ற வகையிலே பல காரியங்களைப் புதுவை அரசு செய்திருக்கின்றது.

## எல்லையற்ற ஆனந்தம் தருகிறது இன்று ஏற்பட்டுள்ள மாற்றம்!

இந்த எழுச்சி மிகுந்த விழாவில் கல்வி அமைச்சர் மணி மாறன், பாவேந்தரைப் பற்றி எழுதிய நூல் என்னால் இங்கு வெளியிடப்பட்டிருக்கின்றது. நான் இங்கு வந்து அமர்ந்த போது மணிமாறனுடைய நூல் ஒன்றைத்தான் வெளியிடுவதாக எண்ணங்கொண்டு வந்தேன். ஆனால் பல்வேறு தலைப்புக் களில் பல புத்தகங்கள் - பாவேந்தர் தொடர்புடைய புத்த கங்கள் - அவரைப் பற்றி நினைவுகள் - அவரோடு பழகியவர் களின் குறிப்புகள் - இவைகளையெல்லாம் தொகுத்த பல்வேறு நூல்கள் இந்த மேடைக்கு வந்த காட்சியைப் பார்த்தபொழுது ஒரு காலத்தில் பாரதிதாசன் என்று சொன்னால், அவர் யார் என்று கேட்ட இந்த நாட்டில், பாரதிதாசன் என்று சொன் னால் இந்தப் பாவிகளெல்லாம் உயிரோடு இருக்கலாமா என்று சபித்த இந்த நாட்டில், இன்றைக்கு இவ்வளவு பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காணும்பொழுது நாங்களெல் லாம் எல்லையற்ற ஆனந்தத்திலே திளைத்திருக்கின்றோம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பல அடைமொழிகளால் இன்றைக்கு அழைக்கப்படக் கூடியவர். பாவேந்தர் என்று போற்றுகின்றோம். புரட்சிக் கவிஞர் என்று கூறுகின்றோம். கவியரசர் என்று கூறுகின்றோம். பாரதியின் வழித்தோன்றல் என்று கூறுகின்றோம். இந்த உலகத்திலுள்ள கவிகளோடு ஒப்பிடத்தக்க மாபெரும் கவிஞர் என்று வர்ணிக்கின்றோம். இவைகள் எதுவும் மிகையானவையல்ல. இன்னும் இதைவிட அதிகமாகப் பாராட்ட வேண்டிய போற்ற வேண்டிய சொற் கள் நமக்குக் கிடைக்காத காரணத்தால் இந்த அளவோடு

நிறுத்துகிறோம். பாரதிதாசனுக்கு அடைமொழி தர வேண்டு மேயானால் அந்த அடைமொழியைக் கூடப் பாரதிதாசன் மீண்டும் பிறந்துதான் கண்டுபிடித்துத் தரவேண்டுமே தவிர, நம்மால் கண்டுபிடிக்க முடியாது. அந்த அளவிற்குத் தமிழ் மொழியிலே உள்ள அழகை - எழுச்சியை - தனித்தன்மையை - தமிழர்களுக்கு வழங்கி வழங்கி மகிழ்ந்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்!

## கட்டுரைகள் தலையங்கங்கள் மூலம் பாவேந்தரை - நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர் அண்ணா!

பாரதிதாசனைப் பற்றி நாங்களெல்லாம் மாணவர்களாக இருந்த காலத்தில் எப்படி அறிந்து கொண்டோம் என்றால், அறிஞர் அண்ணா நடத்திய 'திராவிட நாடு' பத்திரிகையில் அண்ணா எழுதுகின்ற எந்தவொரு தலையங்கமாக இருந் தாலும் சரி, அல்லது அண்ணா எழுதுகின்ற 'தம்பிக்கு மடல்' அல்லது அண்ணா அவர்கள் 'சௌமியன்' என்கின்ற பெய ரிலே தீட்டுகின்ற கட்டுரைகள் இவைகளில் எங்காவது ஒரி டத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய பாடல் இடம் பெறுவது வாடிக்கை. இப்படியெல்லாம் கட்டுரைகள், கதைகள் வாயிலாக, தலையங்கங்கள் வாயிலாக அண்ணா அவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினார்.

புதுவையில் குடத்திற்குள் இருக்கின்ற விளக்காக இருந்த புரட்சிக் கவிஞர் இன்று உலகத்திற்கே சூரியனாக மாறி யிருக்கிறார் என்றால், புரட்சிக் கவிஞருடைய அருமை பெரு மைகளை அன்று உலகத்திற்கு எடுத்துச் சொன்ன அந்தப் பேறும், வாய்ப்பும் நமக்குக் கிடைத்திடச் செய்த செயலுக்குச் சொந்தக்காரர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார். அண்ணா அவர்கள் புரட்சிக் கவிஞருக்குப் பொற்கிழி வழங்கிய நிகழ்ச்சியை இங்கே பேசிய நண்பர்கள் குறிப்

பிட்டார்கள். அன்றைக்குப் பாவேந்தரை மேடையில் வைத்துக் கொண்டு அண்ணா பேசும்பொழுது 'இன்றைக்கு நான் பட்டு வேட்டி கட்டியிருக்கிறேன். பட்டுச் சட்டை போட்டிருக்கிறேன். பட்டுத் துண்டும் அணிந்திருக்கிறேன். என்னுடைய வாழ்நாளில் மணவிழாவிலேதான் பட்டுச் சட்டை, பட்டு வேட்டி உடுத்தினேன். அதற்கடுத்துப் பாரதிதாசனுக்கு நிதியளிக்கின்ற இந்த விழாவிலேதான் நான் பட்டுச் சட்டையும், பட்டு வேட்டியும் அணிகிறேன்' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

அதுமாத்திரமல்ல, நிதி வழங்கும்பொழுது, வழங்குகின்ற தன்னுடைய கை மேலேயும், வாங்குகின்ற புரட்சிக் கவிஞருடைய கை கீழேயும் இருந்தால், அது புரட்சிக் கவிஞர் எரிமலையாக நிமிர்ந்து நின்று வாழ்ந்தவர். யாருக்கும் தேவையில்லாமல் பணியாதவர். அப்படிப்பட்ட புரட்சிக் கவிஞருக்கு நிதி வழங்கும்பொழுது நான் தருபவனாகவும், அவர் வாங்குபவராகவும் இருக்கக் கூடாது. நான் வைத்துக் கொண்டிருப்பேன். அவர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு தட்டிலே பொற்கிழியை வைத்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை எடுத்துக் கொள்ளச் சொல்லி, அந்தப் புகைப்படம் அன்றைய தினம் எல்லா ஏடுகளிலும் வெளிவந்ததை அந்தக் காலத்திலே அந்த நிகழ்ச்சியைக் கண்டவர்கள், கேட்டவர்கள் உணர்ந்திருக்க முடியும்.

## பாரதியின் புகழை மேலும் உயர்த்தியவர் பாவேந்தர் பாரதிதாசன்!

அப்படிப் பெருமைப்படுத்தப்பட்டவர் புரட்சிக் கவிஞர். அவருடைய கவிதைகள் பாரதியாருடைய கவிதைகளைப் போன்று அந்தப் பாணியிலே தொடக்கத்திலே வந்தாலும் கூட, பாரதியாரையும் மிஞ்சுகின்ற அளவிற்குப் பாரதிதாசனுடைய கொள்கைகள் வீறுகொண்டு எழுந்தன. இதைச் சொல்வதால் நான் பாரதியாரை, பாரதிதாசனைவிட ஒரு

படி குறைவு என்று சொல்வதாக அர்த்தமல்ல. பாரதியாரும், பாரதிதாசன் வாழ்ந்த காலம் வரை அவருக்கு இருந்த ஆயுள் போல பாரதியாருக்கு ஆயுள் நீண்டிருக்குமேயானால் - வாலிப வயதிலே பாரதியார் இறந்து போகாமல் இருந்திருப்பாரே யானால் புரட்சிக் கவிஞரைப் போன்று ஏராளமான கவி தைகளைத் தந்திருக்க முடியும். ஆனால் தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்குவதற்கு முன்பே பாரதியார் சுயமரியாதைக் கருத்துக்களைத் தன்னுடைய பாடல்கள் மூலமாக நாட்டுக்குத் தந்தவர்.

**'ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்'**
**என்றவர் யார்? பாரதிதாசனா? அல்ல! பாரதியார்!**
**'ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்'**

என்று நான் சொன்னால் கேட்கின்ற பக்தர்களுக்குக் கோபம் வரும். புராணீகர்களுக்கு என்மீது பாயத் தோன்றும். நாங்கள் யார் சொன்னாலும் சினம் பொங்கும். சீறிக் கிளம்பு வர். ஆனால் சொன்னது யார்? இதே புதுவை மண்ணிலே உலவிய கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார்தான்

**'ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள்'**

என்று சொன்னார். நாங்கள் கூடச் சற்று அடக்கமாகத் தெய்வங்களைப் பற்றிப் பேசும்பொழுது சொல்வோம். ஆனால் பாரதியார் அறிவற்றவர்கள் என்றே சொன்னார். பெரியார் முட்டாள் என்று சொன்னால், கோபம் வருகிறது. அதையே கொஞ்சம் மாற்றி அழகான தமிழில் பாரதியார் 'நான் முட்டாள் என்று சொல்ல மாட்டேன். அறிவிலி என்று சொல்கிறேன்' என்று சொன்னார்.

பாரதியாரை நாம் தேசியக் கவிஞராக கவிச் சக்கர வர்த்தியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்தப் பாரதியைப்

பார்த்து 'நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா – காடு கமழும் கற்பூரச் சொற்கோ சிந்துக்குத் தந்தை' என்றெல்லாம் பாடி அவருடைய புகழை மேலும் மேலும் உயர்த்திய பெருமைக்குரியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவார். அவரோடு அண்ணா அவர்கள் பழகிய அளவிற்கு இல்லாவிட்டாலும், பெரியார் அவர்கள் பழகிய அளவிற்கு இல்லாவிட்டாலும் சில ஆண்டு காலம் பழகுகின்ற வாய்ப்பை நானும் பெற்றிருந்தேன்.

## பாவேந்தர் பாடியது போல் நிலவைப் பற்றி யாரும் பாடவில்லை!

பாரதிதாசனை முதலில் நான் சந்தித்தது அவருடைய கவிதை நூல்கள் வாயிலாக. அவருடைய முதல் கவிதைத் தொகுப்பு வெளி வந்தது. அந்தத் தொகுப்புக்கு அணிந்துரையை முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் எழுதியிருந்தார். அந்த முதல் நூலிலேதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

**'சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு**
**தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி**
**நெற்சேர உழுதுஉழுது பயன்விளைக்கும்**
**நிறை உழைப்புத் தோள்களெலாம் எவரின்**
**தோள்கள்'?**

என்ற கேள்வியைக் கேட்டிருந்தார். அந்த முதல் தொகுப்பிலேதான் நிலவைப் பற்றிப் பாடினார். யாரும் பாடாத, சொல்லாத உவமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி நிலாவைப் பற்றிப் பாடினார்.

**"காலை வந்த செம்பரிதி**
**கடலில் மூழ்கிக்**
**கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ**
**நிலவே நீ தான்"**

காலையிலே சூரியன் உச்சிக்குப் போய், மேற்கே போய் மேற்குத் திசையிலுள்ள கடலில் மூழ்கி மூழ்கிய காரணத்தால் அது குளிர்ந்து போய் வந்த காரணத்தால் நிலவாகி விட்டாயா? என்று சூரியன் தான் நிலவாயிற்று என்பதை அவ்வளவு அழகான உவமையோடு

**காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்**
**கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ**
**நிலவே நீதான்**
**கோலம் முழுதும் காட்டி விட்டால்**
**காதற் கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ**

(உன்னுடைய கோலம் முழுவதும் காட்டி விட்டால் இந்த உலகம் காதற் கொள்ளையிலே செத்துப் போய் விடும் என் பதற்காகக் கோலம் முழுதும் காட்டாமல் கொஞ்சம் மறைத்துக் கொண்டு உன் கோலத்தைக் காட்டுகிறாயா) 'சொக்க வெள் ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ' என்று நிலவைப் பாவேந் தர் பாரதிதாசனைப் போலப் பாடியவர்கள் யாரும் இல்லை.

## பாவேந்தரின் காதலர்களாக எங்களை மாற்றிய அவரது முதல் தொகுப்பு!

அந்தப் புத்தகத்திற்கு அணிந்துரை எழுதும் பொழுதுதான் அண்ணன் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. குறிப்பிட்டார். சுவைக்காக ஒருமுறை படித்தேன், உவமைக்காக ஒருமுறை படித்தேன், கருத்துக்காக ஒருமுறை படித்தேன், தமிழுக்காக ஒருமுறை படித்தேன், தமிழைக் கையாளும் நயத்திற்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொரு முறையும் 'படித்தேனாகச்' சுவைக்கிறது. படித்தேன் படித்தேன் என்று சொல்லிவிட்டு ஒவ்வொரு முறையும் அந்தக் கவிதை படித்தேனாகச் சுவைக்கிறது என்று எழுதினார். அந்த முதல் தொகுப்பைப் படித்த அந்த நேரத்திலிருந்து எங்களைப் போன்ற மாண வர்கள் பாரதிதாசனுடைய காதலர்களாக மாறிவிட்டோம். பாரதிதாசனை நேசிக்கத் தொடங்கினோம்.

அப்படி நேசிக்கத் தொடங்கிய காரணத்தினாலே தான் திருவாரூரிலே நாங்கள் தொடங்கிய 'தமிழ் மாணவர் மன்ற' ஆண்டு விழாவிற்கு அவரிடத்திலே கவிதை தேவை என்று எழுதிக் கேட்டோம். நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய கடிதத்தை அவர் அப்படியே பத்திரமாக வைத்திருக்கிறார். நல்லவேளை தந்தையார் சொத்துக்களை அடுத்து வருகின்ற பிள்ளைகள் அழித்து விடுவார்கள். இந்தப் பிள்ளைகள் எந்தச் சொத்தை அழித்ததோ எனக்குத் தெரியாது.

இந்தச் சொத்தை அழிக்கவில்லை. தம்பி மன்னர் மன்னன் நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் திருவாரூரிலிருந்து எழுதிய அந்தக் கடிதத்தை - புரட்சிக் கவிஞருக்கு எழுதிய கடிதத்தை அப்படியே போற்றிப் பாதுகாத்து அந்தக் கடிதத்தின் ஒரு பகுதியிலே புரட்சிக் கவிஞர் எழுதிய அவருடைய கைப்பட எழுதிய குறிப்பு உட்பட என்னிடத்திலே கொண்டு வந்து அண்மையில் காட்டினார். மாணவர் மன்ற ஆண்டு விழாவிற்கு வாழ்த்து அனுப்புங்கள் என்று கேட்டிருந்தேன். அப்பொழுது அவர் எழுதிய வாழ்த்துத் தான்.

**தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்**
**தமிழ்நாடு தமிழ் மாண வர்மன் றங்காண்**

என்று தொடங்கும் பாடல். (பலத்த கைதட்டல்)

அன்றைக்குப் புரட்சிக்கவிஞர் மாணவர் மன்றத்திற்கு எழுதி அனுப்பி வைத்த பாடல் அது.

அதற்கடுத்த ஆண்டு - நான் நேற்றைக்குக் கூடச் சென்னையில் நடைபெற்ற திரு.வி.க. விருது வழங்குகின்ற நிகழ்ச்சியிலே குறிப்பிட்டேன். 43ஆம் ஆண்டு தமிழ்த் தென்றல் திரு.வி.க.வினுடைய 60ஆவது ஆண்டு மணிவிழாவை நாங்கள் திருவாரூரில் கொண்டாடினோம். என்னுடைய நண்பர்

மாவெண்கோ என்ற வ.கோ. சண்முகம், தென்னன் அரங் கண்ணல் எல்லோரும் சேர்ந்து திரு.வி.க.வினுடைய மணி விழாவினை 43ஆம் ஆண்டு கொண்டாடினோம். அதற்கும் வாழ்த்தனுப்பச் சொல்லிப் புரட்சிக்கவிஞருக்குக் கடிதம் எழுதினேன். அப்பொழுது அனுப்பிய வாழ்த்தினுடைய முதல்வரிகள்.

**'பழகுதண் புதுவை பாலையசாமி**
**அழகு மடத்தில் அறிஞர் திரு.வி.க.**
**சொற்பெருக்கிடையில் சொன்னதாவது'**

என்று ஆரம்பமாகும் கவிதையை அன்றைக்கு எழுதி அனுப் பினார். திரு.வி.க. எத்தகையவர், எத்தகைய வாழ்வு மேற் கொண்டார், எந்தக் கொள்கையில் பிடிப்பாக இருந்தார் என்பனவற்றையெல்லாம் விளக்குகின்ற ஒரு நீண்ட கவி தையை அன்றைக்குப் புரட்சிக் கவிஞர் எங்களுக்கு அனுப்பி வைத்தார்.

## படங்களை மட்டும் பார்த்த அவசர அரசியல்வாதிகள்!

நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எவ்வளவு காலமாக நாங்களெல்லாம் புரட்சிக்கவிஞருடைய கருத்துகளை, அறிஞர் அண்ணாவின் கருத்துகளை ஏற்றுக்கொண்டு, தந்தை பெரியாரின் கருத்துகளை ஏற்றுக் கொண்டு இந்த நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இன்றைக்கு யார் யாரோ அவசர அரசியல்வாதிகள், அரைவேக்காடுகள் தமிழ் நிலத்திலே அது தமிழ் நாடாக இருந்தாலும் சரி, தமிழ் நிலப் பகுதியிலே ஒன்றாக இருக்கிற புதுச்சேரியாக இருந் தாலும் சரி, தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் ஏதோ தங் களுக்குத் தான் அண்ணாவைத் தெரியும் என்பதைப் போல வும், பெரியாரைத் தெரியும் என்பதைப் போலவும் புரட்சிக் கவிஞரைத் தெரியுமென்பதைப் போலவும் அவர்களுடைய

படங்களை மாத்திரம் பார்த்து விட்டு அவர்கள் தந்த பாடங் களை மறைக்கின்றார்கள். அவர்கள் மறந்தாலும் பரவா யில்லை. தெரிந்ததை மக்கள் மத்தியிலே இன்றைக்கு மறைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பாரதிதாசன் எந்த இலட்சியத்திற்காகப் பாடுபட்டார் எந்தக் கொள்கை நாட்டில் வெற்றி பெற வேண்டுமென்பத தற்காகப் பாடுபட்டார். 'சுயமரியாதை கொள்தோழா' என் றல்லவா பாடினார். பொதுவுடைமை என்ற கருத்து ஒரு பூங்காவாக மலர வேண்டுமென்றல்லவா புரட்சிக்கவிஞர் பாடினார்.

## பொழுது விடிவதற்குப் பாரதிதாசன் சொன்ன உவமை!

அவரைப்போல உவமை நயத்தோடு பாட இன்றைக்குச் சிலபேர் முயன்றாலும்கூட அவரை வெற்றிகாண முடியாத அளவிற்கு உச்சத்திலே இருப்பவர் புரட்சிக்கவிஞர் பாரதி தாசன். காலையிலே பொழுது விடிகிறது. பொழுது விடிவதை எவ்வளவு அழகாகச் சொல்கிறார் பாருங்கள். ஒரு தொட்டி நிறைய நீலத்தைக் கரைத்து வைத்திருக்கின்றோம். அந்தக் கரைக்கப்பட்ட நீலத்தைப் பார்த்தால் அதிக அழுத்தமான நீலம் - நன்றாக இறுகியிருக்கிற நீலத்தைப் பார்த்தால் கிட்டத்தட்டக் கருப்பு நிறமாகத்தான் தோன்றும். அந்த நீலத்தில் சுண்ணாம்பை எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்தால் அந்தக் கருமை சிறிது சிறிதாக விலகி வெளுக்கத் தோன்றும். ஒரு தொட்டியிலே நீலத்தைக் கரைத்து ஒரு கையிலே சுண்ணாம்பை எடுத்துக் கரைத்தால் கொஞ்சம் கொஞ்சமாக அந்த நீல வண்ணம் வெண்மை நிறமாக மாறத் தொடங்கும். இதைப் பார்த்த பாரதிதாசன் பொழுது விடிவ தற்கு இதை உவமையாக்குகிறார்.

***'தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு
கலந்த கலப்பென
இருள் தன் கட்டுக்குலைந்தது'
என்கிறார்.
தென்றலைப் பற்றிச் சொல்கிறார்.
'தென்றலே! பெண்கள் விலக்காத
உடையினை நீ போய் விலக்கினும்
விலக்கார் உன்னை'***

நாணிக்கோணி நிற்கின்ற ஒரு பெண்ணை நான்கு பேருக்கு மத்தியிலே ஒருவன் நின்று அவளுடைய உடையை விலக்கினால் சீ போடா! என்று ஆத்திரத்தோடு அவனைச் சீறிப் பாய்ந்து விரட்டுவாள். ஆனால் தென்றல் அவள் விலக்காத உடையை விலக்குகிறதாம். அப்பொழுதும் அந்தப் பெண் அந்தத் தென்றலை விலக்குவதில்லையாம்.

***பெண்கள் விலக்காத உடையினை
நீ போய் விலக்கினும் விலக்கார் உன்னை'***

தென்றலின் இனிமைக்குச் சொல்கிறார். தென்றல் வீசி உடையை விலக்குகிற நேரத்தில் அதை இழுத்துப் போர்த்திக் கொண்டாலும்கூடத் தென்றல் தேவை என்று எண்ணுகிறாளாம் அந்தப் பெண்.

## ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டிய விளக்கு பாவேந்தரின் 'குடும்ப விளக்கு'

குடும்ப விளக்கு ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டிய விளக்கு.

***'நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்'***

என்று அருமையான ஒரு சொற்றொடரை அந்தக் குடும்ப விளக்குத் தொகுப்பிலே தான் நாம் காண முடியும். ஒரு குடும்பம் எப்படி நடை பெற வேண்டும். ஆணுக்குள்ள கடமை

என்ன? பெண்ணுக்குள்ள உரிமை என்ன என்பதையெல்லாம் விளக்குகின்ற ஒரு குடும்ப விளக்கு. காலையிலே கணவனைக் கடைக்கு அனுப்பி வைக்கிறாள். வீட்டுப் பணிகளையெல்லாம் செய்கிறாள். அதற்கு முன்பு குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறாள். இடையிலே கணவன் வந்து சற்று நான் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன் நீ சென்று கடைப் பணியைப்பார் என்று அனுப்பி வைக்கிறான். அவள் சென்று கடைப் பணியைப் பார்த்துவிட்டுத் திரும்பி வருகிறாள். இவள் வந்த பிறகு இவன் மீண்டும் கடைக்குச் செல்கிறான். அதற்கு மேல் அவர்களுடைய உறவினர்கள் இருந்தார்கள். அவர்களையும் வாழ்த்தி வரவேற்று உபசரித்து அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் தந்து தேவைகளையெல்லாம் நிறைவு செய்கிறாள். இரவு வருகிறது. எல்லாப் பணிகளையும் முடித்து விட்டு அடுக்களைப் பணியை அவள் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

இன்னும் வரவில்லையே என்று காத்திருக்கிற கணவன் அவளை அழைக்கிறான். அதைப் பாரதிதாசன் சொல்கிறார்.

**'தொண்டையினில் ஒன்றுமே அடைக்கவில்லை துணைவனவன், சிறு கனைப்புக் கனைக்கலுற்றான்'**

(இன்னும் வரவில்லையே என்பதால் அவன் கனைக்கிறான். பலபேருக்கு அனுபவம் இருக்கும்.)

**தொண்டையினுள் ஒன்றுமே அடைக்கவில்லை**
**துணைவனவன் சிறு கனைப்புக் கனைக்க லுற்றான்**
**அண்டையிலே மங்கை போய் அத்தான் என்றாள்**
**அத்தானா தூங்கிடுவான் (அருகில்) உட்கார்**
**என்றான்**

ஒரு குடும்பத்தினுடைய பாங்கை. ஒரு குடும்பப் பெண்ணின் பாங்கை அந்தக் குடும்பப் பெண்ணிற்கும் அவளைக் கொண்ட

கணவனுக்கும் உள்ள அன்பை, உறவை அவர்களுக்கிடையே இருக்க வேண்டிய கடமையை வழங்கப்பட வேண்டிய உரிமையை மிக அழகாக விளக்குகின்ற நூல்தான் 'குடும்ப விளக்கு'.

நான் இவைகளைப்பற்றி மாத்திரம் சொல்லவில்லை. அவர் பாடிய புரட்சிப் பாடல்கள் எத்தனையோ வீரர்களை உருவாக்கியிருக்கின்றது. சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் இங்கிலாந்து நாட்டின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுத் தமிழகத்து மக்களிடமெல்லாம் விடைபெற்று விமானத்திலே சென்றபொழுது அந்த விமானம் ஓமான் கடலிலே வீழ்ந்து பன்னீர் செல்வம் மறைந்து போய்விடுகிறார். அந்த நேரத்தில் பாரதிதாசன் பாடுகிறார்.

**'சிங்கத்தை நரியடிக்கும் திறனில்லை எனினும் சிங்கம்**
**பொங்குற்றே இறந்ததென்றால் நரி மனம்**
**பூரிக்காதா?**

அவர் கண்கள் குளமாக எழுதினாலும்கூடக் களங் காணுகின்ற வீரர்களை உருவாக்குகின்ற பாடல்களாக அவைகள் மிளிர்ந்தன. அத்தகைய பாடல் தான்.

'கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே'

என்பது! அதைக்கூடப் பலர் விமர்சித்ததுண்டு. இது அகிம்சைக்கு விரோதமான பாடல் அல்லவா! கொலை வாளை எடுக்கச் சொல்கிறாரே என்று. அந்த வரிகளை முழுமையாக ஆழ்ந்து படிக்காத காரணத்தால் வருகிற தொல்லை அது.

**'கொலை வாளினை எடடா மிகு**
**கொடியோர் செயல் அறவே'**

'மிகக் கொடியோர் தலை அறவே' என்று சொல்லவில்லை.

'மிகக் கொடியோர் உயிர் அறவே' என்று சொல்லவில்லை. என்ன சொல்கிறார்,

**'கொலை வாளினை எடடா மிகு**
**கொடியோர் செயல் அறவே'**

கொடியோர்களுடைய செய்கைகள் நாட்டில் அற்றுப் போகின்ற அளவிற்குக் கொலை வாளை எடு. அந்தச் செயல் களைக் கொலை செய்ய, அந்தச் செயல்களை விரட்ட, அந்தச் செயல்களை வீழ்த்தக் கொலைவாளை எடு என்று குறிப் பிட்டார்.

## பாட்டாளிகளைப் பற்றிய பாவேந்தர் பாடல்!

நான் முதலிலே சொன்னதைப் போல

**'சித்திரச் சோலைகளே உமை நன்கு**
**திருத்த இப் பாரினிலே**
**எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ**
**உங்கள் வேரினிலே'**

என்று கேட்டார். அந்தக் கேள்விகளே பல வாலிபர்களை, தொழிலாளர்களை, பாட்டாளிகளைக் கேள்விக் குறிகளாக ஆக்கின. அதற்குப் பதிலாகத்தான்

**'ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்**
**உதையப்ப ராகிவிட்டால் ஓர் நொடிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆகிடுவார் உணரப்பா நீ**

என்கின்ற பாடல் கிடைத்தது.

எனவே வீரம், அன்பு, காதல், நாடு. மொழி, இனம் இவையனைத்தையும் அவருக்கே உரிய பல்வேறு கோணங்களில் பல்வேறு உணர்ச்சிகளில் அவருக்கே உரிய

தமிழ் அழகோடு எழுதிக்காட்டிய பெருமகன் புரட்சிச் சிந்தனையாளன். இருபதாம் நூற்றாண்டின் பாவேந்தர். தந்தை பெரியாரின் தளகர்த்தர். தந்தை பெரியாரின் கொள்கைகளையெல்லாம் கவிதை வரிகளாக வடித்துத் தந்த வர். பேரறிஞர் அண்ணாவால் பாராட்டுப் பெற்றவர். நாவலர் சோமசுந்தர பாரதியாரால், மறைமலையடிகளால், தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களால் தமிழ்ச் சான்றோர் பலரால் பாராட்டப் பெற்றவர். அத்தகைய புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக எழுதியுள்ள கவிதைகளையெல்லாம் இளைஞர்கள் படித்திட வேண்டும். புதுவை மாநில அரசு அவருடைய கவிதைகளைப் பரப்ப எடுத்துக்கொண்ட முயற்சிகளையெல்லாம் நான் பாராட்டு கிறேன். அவருடைய கவிதை, வடிவம் கொடுக்கப்பட்டு தமிழகத்திலே – தமிழகத்திலே உள்ள கழக அரசின் சார்பாக ஆற்றப்படுகின்ற பணிகளையெல்லாம் இங்கே எடுத்துரைத் தார்கள். அதைப்போல இங்கேயும் அந்தக் கவிதைகளுக்கு உயிர் கொடுக்கப்பட்டு அந்தப் பணிகள் தொடர வேண்டும். தொடருமென்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

கடந்த சில நாட்களுக்கு முன் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாக் கொண்டாடுகின்ற குழுவின் சார்பில் நாங்கள் அறிவித்திருக்கின்றோம். மிக விரைவில் பாவேந் தருடைய குடும்பத்தாரோடு பேசிப் பாவேந்தருடைய நூல் களையெல்லாம் தமிழக அரசு அரசுடைமையாக ஆக்கு மென்று சொல்லியிருக்கின்றேன்.

இங்கே இந்த மேடையில் தம்பி மன்னர்மன்னன் அவரு டைய குடும்பத்தார் அதைப்போலவே அம்மையார் சரசுவதி கண்ணப்பன், வசந்தா தண்டபாணி இவர்களெல்லாம் இங்கே மேடையிலே என்னிடத்திலே கடிதம் எழுதிக் கொடுத்தி ருக்கிறார்கள். இவைகளை அரசுடைமையாக ஆக்குவதற்கு நாங்கள் சம்மதிக்கிறோம் என்று கடிதம் எழுதிக் கொடுத் திருக்கிறார்கள். மிக விரைவிலே நானும், தமிழகத்தின் கல்வி

அமைசசர் பேராசிரியர் அவர்களும் கலந்து பேசிப் புரட்சிக் கவிஞருடைய நூல்கள் அரசுடைமையாக ஆக்கப்பட்டுவிட்டன என்பதற்காக ஒரு விழா எடுப்போம் என்பதை அறிவித்து வாழ்க புரட்சிக் கவிஞர் என்று உரைத்து அவருடைய பெயரால் இங்கே வெளிவந்த நூல்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். தம்பி மணிமாறன் எழுதிய இந்த நூலை நான் முழுதும் படித்தேன். ஒரு முத்துப்போல் அமைந்திருக்கிறது அந்த நூல் என்பதையும் எடுத்துச் சொல்லி உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

– இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

# பாவேந்தர் படைப்புகள் நாட்டுடைமையாயின

புதுவையில் நடைபெற்ற பாவேந்தர் நூற்றாண்டு விழாவின் போது விரைவில் பாவேந்தர் குடும்பத்தார்க்குப் பரிவுத் தொகை நல்கிப் பாவேந்தரின் படைப்புகள் யாவும் நாட்டுடைமையாக்கப்படும் என்று தலைவர் கலைஞர் அறிவித்தார். அந்த அறிவிப்பு செயல் வடிவம் கொண்டது. அதன் அடிப்படையில் முதல்வர் கலைஞர் அவர்களால் முறையான அறிவிப்பு செய்யப்பட்டது. அப்போது வெளி வந்த அரசின் அறிவிப்புத்தான் இது.

## தமிழக முதல்வர் கலைஞர் அறிவிப்பு

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாக நிகழ்த்தி வரும் தமிழக அரசு, பாவேந்தரின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற திட்டத்தையும் மேற்கொண்டுள்ளது. பாவேந்தரின் நூல்களை நாட்டுடைமை ஆக்கும் திட்டத்தின் அடிப்படையில் பாவேந்தர் அவர்களின் மகன் திரு. மன்னர்மன்னன், மகள்கள் திருமதி. சரசுவதி, திருமதி. வசந்தா ஆகியோரின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2 இலட்சமும், மறைந்த திருமதி. இரமணி அம்மையார் அவர்களின் பிள்ளைகள் அனைவர்க்கும் ரூ. 2 இலட்சமும் பரிவுத் தொகையாகத் தந்து சிறப்பிப்பது எனவும் அரசு முடிவு மேற்கொண்டுள்ளது. பாவேந்தரின் நூல்களை உரிமை பெற்றுப் பதிப்பித்து வந்த புதுக்கோட்டை இராமச்சந்திரபுரம் செந்தமிழ் நிலையம், சென்னை பாரி நிலையம் ஆகிய பதிப்பகங்களும், ஒப்பந்த அடிப்படையில் நூல்களை வெளியிட்டு வந்த சென்னை பூம்புகார் நிலையமும் வைத்துள்ள பாவேந்தர் நூல்கள் வெளியிடும் உரிமைகளைத் தமிழக அரசு பெறுகிறது.

5.12.90 முதல் பாவேந்தரின் நூல்கள் அரசிற்கு உரிமையுடையவை ஆகின்றன. 1.11.1991 முதல் இந்நூல்கள் அனைத்தும் நாட்டு மக்கள் அனைவர்க்கும் பொதுவுரிமை ஆகின்றன.

❁ ❁ ❁ ❁ ❁

இதனை மாண்புமிகு கலைஞர் அவர்கள் 5.12.90 அன்று அறிவித்தார்கள். பாவேந்தரின் குடும்பத்தார்களுடனும், பதிப்பகங்களுடனும் மாண்புமிகு முதலமைச்சர் கலந்து பேசிய பிறகு இந்த மகிழ்ச்சிகரமான முடிவு எடுக்கப்பட்டது.

இந்த நேரத்தில எம்.ஜி.ஆர். காலத்தில் பாவேந்தர் பெயரால் பல்கலைக் கழகம் அமைத்தவர்கள் ஏன் அவரது படைப்புகளை நாட்டுடைமையாக்கவில்லை என்பது எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். எம்.ஜி.ஆர். ஆட்சியில் நாவலர்தான் நிதி அமைச்சர். புரட்சிக் கவிஞர் பாடல்களைப் பேசிப் பேசி மகிழ்ந்தும், மகிழ்வித்தும் சிறப்புச் செய்த நாவலர் நெடுஞ்செழியன்தான் நிதியமைச்சர். பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று குறிப்பிட்டு ஒரு கோப்பு நாவலர்க்கு வந்தது. நாவலர் கண்களை மூடிக் கொண்டு கையெழுத்துப் போட்டிருப்பார் என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள்? ஆனால் அதுதான் இல்லை. பாவேந்தர் படைப்புகளை நாட்டுடைமையாக்குவதில் பல சிக்கல்கள் உண்டென்றும், அதனால் அவற்றை நாட்டுடைமையாக்கத் தேவையில்லை என்றும் குறிப்பு எழுதியவர்தான் நாவலர் எனும் அமைச்சர் நெடுஞ்செழியன். அந்தக் குறிப்பை அப்படியே ஏற்று மேல் கையொப்பமிட்டுக் கோப்பை முடித்துவிட்டார் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். முடித்துவைக்கப்பட்ட கோப்பை மீண்டும் எடுத்து அதற்கு உயிர் தந்து நாட்டு டைமையாக்கியவர் தான் நிதித்துறையையும் சேர்த்துக் கவனித்த முதலமைச்சர் கலைஞர். அவரது உரையைத்தான் இப்போது கேட்கப் போகிறோம்.

(அரசின் அறிவிப்பையொட்டித் தமிழக அரசின் தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் தலைவர் ஆற்றிய உரை இது)

பாவேந்தர் குடும்பத்தாருக்குப் பரிவுத்தொகை வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு

இன்று இந்த நிகழ்ச்சியில் என்ன பேசுவது என்றே எனக் குத் தெரியவில்லை. காரணம் எந்தக் குடும்பத்திற்கு அரசின் சார்பாக எம்மால் இயன்ற உதவியினைச் செய்கிறோமோ அந்தக் குடும்பத்திற்கு மாத்திரமல்ல இந்தப் பெரும் தமிழ்க் குடும்பத்திற்குக் கவித் தலைமை ஏற்றுக் கவிதைகளை வாளாக, வேலாக ஆக்கித் தந்து எங்களோடு எல்லாம் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பை நாங்கள் பெறவும், அதனால் அந்தப் பெருமை எங்களுக்குச் சேரவும் காரணமாக இருந்த புரட்சிக் கவிஞர் பாவேந்தர் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்கின்ற அந்த உணர்வு உள்ளத்தை ஒருபுறத்திலே உலுக்கிக் கொண்டேயிருக்கிறது.

பாவேந்தர் மாத்திரமல்ல இன்றைய தமிழ் நாட்டிற்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிற தந்தை பெரியார் இல்லை, பேரறிஞர் அண்ணா இல்லை, தமிழ்நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் அவர்களிலே ஆயிர மடங்கில் பிரித்தால்கூட நிகராக முடியாது என்று சொல்லத் தக்க வகையிலே உள்ள எங்கள் தோளிலே சுமத்தப் பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பை உணர்ந்து புரட்சிக் கவி ஞருக்கு நாங்கள் செலுத்த வேண்டிய மரியாதையை இன் றைக்குச் செலுத்துகின்றோம். தம்பி மன்னர் மன்னன் குறிப் பிட்டதைப் போல நானும், நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் கலந்து பேசி அவர்களது குடும்பத்தாரோடு தொடர்பு கொள்ளவும் பாவேந்தருடைய நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தாரோடு தொடர்பு கொள்ளவும் நம்முடைய நண்பர் ஔவை நடராஜன் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு அனைவரையும் ஒன்று

கூட்டி ஒருநாள் அவர்களோடு நானே முன் நின்று பேசிச் சில நொடிகளில் ஒரு நல்ல முடிவிற்கு வந்ததன் காரணமாக இத்தனை விரைவில் இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்று நிறைவுற்றிருக்கிறது.

தம்பி மன்னர் மன்னன் குறிப்பிட்டதைப் போல் தொகை யல்ல இதன் பின்னால் இருப்பது. பாவேந்தருக்குத் தமிழ்நாட்டு மக்கள் அளிக்கின்ற காணிக்கை - அதுதான் இந்த நிகழ்ச்சியே தவிரத் தொகை வழங்குகிற நிகழ்ச்சி பெரியதல்ல. பாவேந்த ரோடு நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பைப் பெற்றவர்கள் நாங்கள். பாவேந்தருக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று பல ஆண்டுகளுக்கு முன்பு இருபத்தையாயிரம் ரூபாய் பொற்கிழியை அளித்தார்கள். அன்றைக்கு இருபத் தையாயிரம் ரூபாய் தருவது என்பது அந்தக் கால கட்டத்திலே எவ்வளவு பெரும் தொகை என்பதைப் பணத்தின் மதிப்பைக் கணக்கிடக் கூடியவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

பாவேந்தர் மறைந்தவுடன் புதுவைக்குச் சென்று அவரு டைய இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவன் என்கின்ற முறையில் - அன்று புதுவை நகரம் மாத்திரமல்ல தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அந்த நிலமெல்லாம் கண்ணீ ரால் நனைந்தது. புதுவை அரசு பாவேந்தருக்குச் சிலை எழுப்பியது. பாவேந்தர் வாழ்ந்த வீட்டை நினைவுக்கூடமாக ஆக்கியது. உலகத் தமிழ் மாநாடு நம்முடைய தலை நகராம் சென்னையில் நடைபெற்ற போது பாவேந்தருக்குச் சிலை அமைக்கப்பட்டது. ராஜாஜி மண்டபத்திலுள்ள ஆங்கிலேயப் பிரமுகர்கள் படங்களெல்லாம் அகற்றப்பட்டுத் தமிழ் உணர்வும் நாட்டு உணர்வும் நிலைபெறக் கூடிய வகையில் படங்கள் அமைக்கப்பட்டபோது கழக ஆட்சி கடந்த காலத் திலே பொறுப்பிலே இருந்தபோது ராஜாஜி மண்டபத்திலே அமைக்கப்பட்ட ஓவியங்களில் ஒன்றாகப் பெரும் ஓவியமாகப் பாவேந்தருடைய படம் அமைக்கப்பட்டது.

நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில் பாவேந்தருக்கு அவருடைய பெயரால் பல்கலைக் கழகம் காணப் பட்டது. பாவேந்தருடைய நூல்களைப் பொதுவுடைமை ஆக்க வேண்டும் அரசுடைமையாக ஆக்க வேண்டும் என்கின்ற முயற்சி பல காலமாக எடுக்கப்பட்டாலும் கூட அது நடை பெறுவதற்குப் பல இடையூறுகள் அமைந்து இன்றைக்கு அது ஓரளவு முற்றுப் பெற்றிருக்கிறது. இதற்கு இணக்கம் தெரிவித்த பதிப்பகத்தாருக்குத்தான் நான் பெரிதும் நன்றி கூற வேண்டும். இங்கேகூட நீங்கள் கண்டீர்கள். எங்களால் அளிக்கப்பட்ட சிறு தொகையைப் பெற்றுக்கொண்ட பாவேந்தருடைய குடும்பத்தின் சார்பாகத் தம்பி மன்னர் மன்னன் நன்றி சொன்னார். நாங்கள் நன்றி சொல்ல வேண்டியது செந்தமிழ் நிலையத்தார், பாரி நிலையத்தார், பூம்புகார் பதிப் பகத்தார்க்கு. அவர்களுக்கு நாங்கள் நன்றி சொல்கிறோம். ஏனென்றால் பாவேந்தர் நூல்களை வெளியிடுகின்ற உரிமையை அவர்கள் பெற்றவர்கள். அவர்கள் பெற்ற உரி மையை அரசுடைமையாக ஆக்குவதற்கு அவர்கள் சிறிதும் தயக்கம் காட்டாமல் உடனடியாக ஒப்புதல் அளித்தார்கள். அவர்கள் கேட்ட தொகை பெரிதென்றாலும் நான் பேரம் பேசி அவர்களை ஒப்புக்கொள்ள வைக்கப்பட்ட தொகைக்கும் அதற்கும் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறு பாடு உண்டு. அந்தப் பேரத்தில் நான்தான் வெற்றி பெற்றேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நாளில் தம்பி மன்னர் மன்னன் ஒன்றைக் குறிப்பிட்டார். பாவேந்தர் எழுதிய ஒரு பாடலுக்குத் தலைப்பு "உன்னை விற்காதே" என்பதாகும். தென்னிலங்கை வேந்தன் ராவணனை... என்று தொடங்குகின்ற பாடல் இது. அந்த "உன்னை விற்காதே" என்கிற தலைப்பை ஒரு திரைப் படத்திற்குத் தலைப்பாக வைக்க வேண்டும் என்று எண்ணிய போதுதான் மன்னர் மன்னனுக்கு ஒரு கடிதம் எழுதி னேன். "உன்னை விற்காதே" என்று உன் தந்தையார் கவி

தைக்குத் தந்த தலைப்பை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். உன்னுடைய அனுமதி தேவை என்று எழுதியிருந்தேன். "அனுமதியில்லாமலே எடுத்துக் கொள்ளலாம்" என்று மன்னர் மன்னன் பதில் எழுதியிருந்தார். நான் உன்னை விற்காதே என்ற தலைப்பை வைக்காததற்குக் காரணம் அதற்குள்ளாகச் சிலர் விலை போய்விட்ட காரணத்தால்! இனி யாருக்குப் போய்ச் சொல்வது என்பதற்காக இந்தத் தலைப்பை வைக்காமலேயே விட்டுவிட்டேன். (கைதட்டல்) அதுதான் காரணமே தவிர வேறல்ல.

இன்று இந்த நாளில் அரசின் சார்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சிக் கவிஞருடைய கவிதைகளிலேயே ஒரு செய்தியைச் சொல்கின்ற - ஒரு அறிவுரையை வழங்குகின்ற - தமிழ் மக்களுக்கு ஒரு ஆணையிடுகின்ற கவிதை நூலாக நான் கருதுவது "தமிழியக்கம்" என்பதாகும். அவர் 'அழகின் சிரிப்பு' எழுதியிருக்கிறார். 'குடும்ப விளக்கு' எழுதியிருக்கிறார். 'இருண்ட வீடு' தந்திருக்கிறார். 'பாண்டியன் பரிசு' தந்திருக்கிறார். 'எதிர்பாராத முத்தம்' தந்திருக்கிறார். அவருடைய கவிதைகள் பல தொகுப்பாக, வெளி வந்திருக்கின்றன.

இவைகள் அனைத்திலும் அவர் நமக்கு ஆணையிடுவதுபோல் தந்துள்ள நூல் 'தமிழியக்கம்' என்பதாகும். அந்தத் தமிழியக்கத்தில் 'தமிழ்நாட்டுத் தெருக்களிலே தமிழ்தான் இல்லை' என்று தன்னுடைய ஏக்கத்தைத் தெரிவித்திருக்கிறார். அந்த ஏக்கத்தைப் போக்க அரசு இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மையில் "பாவேந்தர் கனவு" என்ற ஒரு நூல் நம்முடைய பேரவைத்தலைவர் மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்களால் எழுதப்பட்டு அணிந்துரைக்காக என்னிடத்திலே வழங்கப்பட்டபோது அதையும் படித்துப் பார்த்தேன். அதைப்

படிக்கும்போது மீண்டும் தமிழியக்கத்தை - பாவேந்தருடைய நூலைப் படிக்க வேண்டும் என்கின்ற தூண்டுதல் ஏற்பட்டது. இதைப் படித்த காரணத்தால் மீண்டும் தமிழியக்கத்தைப் படித்தேன். அந்தத் தமிழியக்கத்திலே பாவேந்தர் விடுத்திருக்கின்ற ஆணையை நிறைவேற்ற இந்த அரசு கடமைப் பட்டிருக்கிறது. உண்மையிலேயே ஆத்மா என்று ஒன்று இருந்து (எங்களுக்கு நம்பிக்கை இல்லை) அப்படி இருந்து வானுலகிலே பாவேந்தர் உலவிக் கொண்டிருப்பாரேயானால் அவருடைய குடும்பத்தாருக்கு இந்தப் பொற்கிழி வழங்கியதைப் பற்றிக்கூட அவர் மகிழ்ச்சியடைய மாட்டார். நான் இன்று தெரிவிக்கின்ற இந்த அறிவிப்பைக் கேட்டுத்தான் மகிழ்ச்சியடைவார். (கைதட்டல்).

தமிழ்நாட்டிலே உள்ள விற்பனை நிலையங்கள், கடைகள், தொழிற் சாலைகள் இவைகளில் தமிழ்ப் பெயர் இடம் பெற வேண்டும் என்பது அவருடைய தணியாத ஆசை. அதை நிறைவேற்றுகின்ற வகையில் அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடுத்துக்காட்டாக இப்போது 'ஜெயம் சில்க் ஸ்டோர்ஸ்' என்று இருப்பது தமிழில் எழுதப்பட வேண்டும் என்று சொன்னால் ஜெயம் என்று எழுதி சி...ல்...க்... ஸ்...டோ...ர்...ஸ் என்று போடுவது தமிழ் அல்ல. அதற்காக ஜெயம் என்கின்ற பெயரை மாற்றத் தேவையில்லை. ஏனென்றால் ஒருவருடைய பெயரால் விளங்கக்கூடிய நிலையமாக அது இருக்கக்கூடும். எனவே ஜெயம் என்கின்ற அந்த வார்த்தையை அவர்கள் விருப்பப்பட்டு, எப்படி இராமையா அன்பழகன் ஆனாரோ அதைப்போல் வெற்றி என்று ஆகலாம். கருணாநிதி கருணாநிதியாகவே இருப்பதைப்போல் - அது நடைமுறைச் சொல். அது பழகிவிட்ட காரணத்தால் எல்லோராலும் சொல்லப்பட்டுவிட்ட காரணத்தால் அந்தப் பெயர் அப்படியே நிலைத்து விடலாம். எனவே பெயர்ச் சொற்களை மாற்றத் தேவையில்லை. ஜெயம் சில்க் ஸ்டோர்ஸ் என்று இருந்தால் - 'ஜெயம் பட்டு நிலையம்' அல்லது 'ஜெயம் பட்டு மாளிகை' என்று பெயரிடப்பட வேண்டும். (கைதட்டல்).

மற்ற மாநிலத்தார் – மற்ற மொழிக்காரர் புரிந்து கொள்ள ஆங்கிலத்திலே பெயர் இருக்கலாம். அல்லது அந்தக் கடையை வைத்திருப்பவர் ஒரு தாய் மொழிக்குச் சொந்தக்காரராக இருப்பாரேயானால் மூன்றாவது இடத்தில் அந்தப் பெயரை எழுதிக் கொள்ளலாம். ஆனால் முதல் இடம் பெற வேண்டியது தமிழ்ப் பெயராக இருக்க வேண்டும் (கைதட்டல்) என்பதாகும். சுபா ஜுவல்லரி என்றால் சுபா என்ற பெயரை மாற்றத் தேவையில்லை. ஆனால் சுபா நகை மாளிகை என்று பெயரிடப்பட வேண்டும். சிங்கப்பூரில் 'அணிமணிப் பொற்சாலை' என்று பெயரிடுகிறார்கள். ஆனால் இங்கு சிங்கத் தமிழர்கள் வாழ்கிறோம். இங்கே அவைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதை ஏற்றுக் கொண்டே தீர வேண்டும் என்பதற்கான அரசு ஆணை மிக விரைவிலே பிறப்பிக்கப்படும் (கைதட்டல்) என்பதை இந்த இனிய விழாவில் எடுத்துச் சொல்லி, அரசின் சார்பில் தரப்பட்ட தொகை சிறிதாகவோ, பெரிதாகவோ எதுவாக இருந்தாலும் அந்தத் தொகையைப் பெறப் புரட்சிக் கவிஞர் என்ற புலி வாழ்ந்த குகையை விட்டு இங்கு வந்த இந்தக் குடும்பத்தார் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிகழ்ச்சியை மேலும் சிறப்பாக்குவதற்காக வருகை தந்த தமிழ்ச் சான்றோர்கள், புலவர்கள், கவிஞர்கள், அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள் பதிப்பகத்தார்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், இதயமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

– இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

# தமிழக மக்களெல்லாம் மகிழ்ச்சி அடைகிறார்கள்!

## கலவி அமைச்சர் பேராசிரியர் பேச்சு!

பாவேந்தர் குடும்பத்திற்கு நிதி வழங்கு விழாவில் கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் பேசியது வருமாறு :

இந்த மகிழ்ச்சியான விழாவில் தலைமையேற்கும் பேறு பெற்றமைக்காக மிகவும் பெருமையடைகிறேன்.

இருபதாம் நூற்றாண்டை எழுச்சிமிக்க நூற்றாண்டாக மாற்றியவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். அவரது எழுத்துச் செல்வம், கவிதைச் செல்வம் இது நாள் வரை தனி உடைமையாக இருந்து வந்ததைப் பொதுவுடைமையாக, நாட்டு உடைமையாக மக்கள் உடைமையாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் பல ஆண்டுகளாகக் கலைஞருக்கும் எனக்கும் அது போன்ற ஆர்வம் உள்ளவர்களுக்கும் இருந்தாலும், கலைஞருடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர் பாவேந்தருடைய நூற்றாண்டைக் கொண்டாடுகின்ற அந்தப் பெரிய வாய்ப்பும் நமக்குக் கிடைத்த இந்தக் காலகட்டத்தில் அவரது நூல்களையும் நாட்டுடைமை ஆக்குகின்ற அந்தக் கடமையை மேற் கொள்வது என்று கலைஞரே தீர்மானித்தார்.

கலைஞருடைய ஒரு தனித்திறமை எதைச் செய்வது எப்படிச் செய்வது, எப்போது செய்வது என்ற இந்த மூன்றிலேயும் அவரை மிஞ்சுகிறவர்கள் இந்த நாட்டில் இல்லையென்றால் (கைதட்டல்) எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள். அவர்தான் இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்ற சூழ்நிலையுடைய வாய்ப்பும் அமைந்தது. அந்தக் கடமையை நிறைவேற்ற எண்ணியிருந்து முயற்சி செய்து பல அலுவல்களுக்கிடையில் பாவேந்தர் குடும்பத்திற்கு ஒரு தகுந்த

நிதி வழங்க வேண்டும் என்ற விருப்பத்தோடு எண்ணிப் பார்த்து, அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி ஒரு பெரும் தொகையை வழங்கக் கலைஞர் அவர்கள் முன் வந்திருக்கி றார்கள். தமிழக அரசின் பெயரால் தமிழக மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியளிக்கிற ஒரு கடமையாக இந்தக் கடமை நிறைவேற்றப்படுகிறது. பாவேந்தர் நூலுக்கு எல்லை இல்லை. அவர் ஊட்டிய தமிழ் உணர்வுக்கும் அளவில்லை. இது விலையாகவோ, அளவிட்டுத் தருகிற நிதியாகவோ, கருதுவது பொருத்தமும் அல்ல. தமிழக அரசுக்கு எத்தனையோ வறுமை இருக்கிறபோது இதைவிட ஒரு பெரும் செயலை எளிதில் வேறு எவரும் நிறைவேற்ற முடியாது. எனவே அப்படிப்பட்ட ஒரு கடமை இங்கு நிறைவேறுவதை எண்ணி மகிழ்ந்து பாவேந்தர் குடும்பத்தாருக்கு இந்த நேரத்தில் எனது வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேராசிரியர் உரையாற்றினார்.

விழாவிற்குக் கல்வி அமைச்சர் பேராசிரியர் தலைமை தாங்கினார்.

தமிழ் வளர்ச்சித் துறைச் செயலாளர் அவ்வை நடராசன் வரவேற்றுப் பேசினார்.

விழா தொடக்கத்தில் சீர்காழி சிவ.சிதம்பரம் பாவேந்தர் பாடல்களைப் பாடி விழாவிற்குச் சிறப்புச் சேர்த்தார்.

விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் பாவேந்தரின் குடும்பத்தாருக்கு ரூ.8 இலட்சம் நிதியினைப் பகிர்ந்தளித்து உரையாற்றினார்கள்.

முன்னதாகப் பாவேந்தரின் புதல்வர் மன்னர் மன்னன் மற்றும் குடும்பத்தார் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும்,

பேராசிரியர் அவர்களுக்கும் சால்வைகளை அணிவித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

விழாவில் பாவேந்தரின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப் பட்டதற்கு நன்றி தெரிவித்து எழுத்தாளர் சங்கத் தலைவர் வாசவன், என்.கே.டி. முத்து, தொழிலதிபர் நல்லபெருமாள் ஆகியோர் முதல்வருக்குச் சால்வைகள் அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

பாவேந்தர் புதல்வி சரசுவதி கண்ணப்பன், புதல்வர் மன்னர் மன்னன், மற்றொரு புதல்வி வசந்தா தண்டபாணி ஆகியோருக்கு நிதியாகத் தலைக்கு இரண்டு இலட்சத்தையும் மற்றும், பாவேந்தரின் புதல்வி மறைந்த இரமணியின் மகள் மணிமேகலைக்கு 40 ஆயிரமும், பேரன் வீரமணிக்கு 40 ஆயிரமும், பேத்தி முல்லைக் கொடிக்கு 40 ஆயிரமும், சிவசுப்பிரமணியத்திற்கு 40 ஆயிரமும், செல்வி சுப்புரத்தினத்திற்கு 40 ஆயிரமும், நிதியாக முதல்வர் கலைஞர் அவர்கள் பகிர்ந்தளித்தார்கள்.

பாவேந்தர் நூல்களின் பதிப்பகத்தார் பாரிசெல்லப்பன், செந்தமிழ்ப் பதிப்பக உரிமையாளர் சுப்பையா ஆகியோருக்கு ஆளுக்கு 1 இலட்சம் நிதியினை முதல்வர் கலைஞர் வழங்கினார்.

விழாவில் சட்டப்பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன், அமைச்சர்கள், கண்ணப்பன் கோ.சி. மணி, பொன். முத்துராமலிங்கம், பொன்முடி, நேரு, சுந்தரம், தங்கவேலு, முதல்வரின் பேரவைச் செயலர் எல். கணேசன், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் துரைசாமி தலைமைச் செயலாளர் எம்.எம். இராசேந்திரன், டி.ஆர்.பாலு எம்.பி. புலவர் பொன்னி வளவன், கவிஞர் வைரமுத்து, பொன்மணி வைரமுத்து, எழுத்தாளர் சாவி, கு.மா. பாலசுப்பிரமணியம்,

வா.மு.சேதுராமன், நன்னன், சுரதா, மு. மேத்தா, ஏ.கே. வில்வம், நிர்மலாசுரேசு மற்றும் எழுத்தாளர்கள், புலவர்கள், கவிஞர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் சிவஞானம் நன்றி கூறினார்.

# பாவேந்தரின் கேள்விக்குப் பதில் என்ன?

மண்டல் குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவது குறித்து மாண்புமிகு வி.பி.சிங் அவர்கள் அறிவித்த பிறகு இட ஒதுக்கீடு எதிர்ப்பாளர்கள் நாட்டில் ஏற்படுத்திய திட்டமிட்ட அமளி துமளிகள் தலைவர் கலைஞர் அவர்களின் நெஞ்சில் கவலையை உண்டாக்கின. அந்த நிகழ்ச்சிகளை நினைத்து நெஞ்சுருகும்போது அவருக்கு முன்னால் அணி வகுத்து நின்றவை பாவேந்தர் பாடல் வரிகள்தாம். அந்த அடிப்படையில் உடன்பிறப்புக்கு வரையப்பட்ட மடல் தான் இது.

உடன்பிறப்பே,

இது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் ஆண்டல்லவோ; அந்த மனித நேயப்பாவலன் எழுதிய கவிதை வரிகளை எண்ணிக் கொள்கிறேன். ஆம்; தனக்கு வரும் நன்மையை உணராமல்; அந்த நன்மையைத் தந்திட முன் வருவோரை நசுக்கிட முனையும் மனிதர்களும் உள்ளனரே இந்த நாட்டில் என்பதைக் காணும் பொழுதும் தங்களின் காலை விட்டு ஆழம் பார்க்கும் குள்ளநரிக் குணம் படைத்தோரின் வேடத்தைப் புரிந்து கொள்ளாமல் அவர் களுக்குக் கொத்தடிமைகளாகக் கிடக்கும் அந்த மனிதர்களின் பரிதாப நிலையை நினைக்கும் பொழுதும் என்னைப் போன் றவர்களுக்குப் பாவேந்தனின் நெஞ்சுருக்கும் அந்தக்கவிதை வரிகளைக் கண்கலங்க உச்சரிக்காமல் இருக்க முடியாது!

பத்ரகாளிக்குப் பலியிடப்படப்போகும் ஆட்டுக்கு மாலை போட்டு மஞ்சள் தெளிக்கும்போது; சற்று நேரத்தில் சாகப் போகிறோம் என்று தெரியாமல்தானே அந்த ஆடு; தன்

கழுத்தில் தொங்கும் மாலையின் மலர்களைத் தின்று மகிழ்ந்து கொண்டிருக்கிறது!

அடிமாடுகள்; கூட்டமாகச் சாலைகளில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு போகும் காட்சிகளைக் கண்டிருக்கிறோம் - சில விநாடிகளில் அவைகளின் தலைகள் வெட்டுண்டு விழப் போகிற செய்தியை அவைகள் அறியாமல் தானே ஒன்றையொன்று முட்டி மோதிக் கொண்டு செல்கின்றன!

மாநகராட்சி நகராட்சிகளில் பிடிக்கப்படும் நாய்கள்; அந்த வண்டிகளில் வாலாட்டிக் கொண்டு உற்சாகமாகப் பயணம் செல்லும்போது; இன்னும் கொஞ்ச நேரத்தில் மூச்சு முட்டும் விஷக்காற்றுடன் தமதுயிர் கலக்கப் போகிறது என்பது தெரியாதுதானே!

அந்த ஆடுகள் - அடிமாடுகள் போல் - அனாதை நாய்களைப் போல் - தங்களுக்கு வரும் எதிர்காலத் தீமையை உணராமலேயே அடித்தட்டு மனிதர்கள்; இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் இந்த நூற்றாண்டு காலச் சுதந்திர மண்ணில் மேலும் மேலும் அழுந்திக் கொண்டிருக்கிறார்களே; தாங்கள் அழுத்தப்படுவது தெரியாமல் - அழுத்துகிற கரங்களை ஆண்டவனின் கரங்கள் என பூஜித்துக் கொண்டிருக்கிறார்களே; என்பதை நினைத்துப் பார்க்கிறேன்! பாவேந்தனின் அந்தக் கவிதை வரிகள் என் விழிகளைத் தடாக் மாக்குகின்றன!

**"பள்ளந்தனில் விழும் பிள்ளைப் பூச்சியே,**
**தலையைத் தாழ்த்து! முகத்தைத் தாழ்த்து!**
**தோளையும் உதட்டையும் தொங்கவை! ஈன**
**உளத்தை, உடலை, உயிரைச் சுருக்கு!**

நக்கிக்குடி! அதை நல்லதென்று சொல்!
தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்த நாயினும்
தாழ்ந்து போ! குனிந்து தரையைக் கௌவி
ஆமையைப் போல அடங்கி ஒடுங்கு!
பொட்டுப் பூச்சியே புன்மைத் தேரையே,
அழு! இளி! அஞ்சு! குனி! பிதற்று!"

தன்னையுணராமல்; தருக்கர்களுக்கு அடங்கி ஒடுங்கி, தர்பாரில் நடைபாவாடை விரித்தும், ஆலவட்டம் தூக்கியும், பராக்குக் கூறியும் வயிறு வளர்த்துக் கொண்டிருக்கிற நடைப்பிணமாம் மனித வடிவைப் பார்த்துத்தான் புரட்சிக்கவிஞன் இவ்வாறு ஏசுகிறான்! ஏச்சா அது? இல்லை! இல்லை! இல்லவே இல்லை! ஏக்கப் பெருமூச்சைப் பின்னணியாகக் கொண்டு கிளம்பும் வேதனைப் பாட்டு! விசார கீதம்! வெடிக்கும் இதயத்தின் சிதறல்!

"தாழ்ந்து தாழ்ந்து தாழ்ந்த நாயினும்
தாழ்ந்து போ! குனிந்து தரையைக் கௌவி
ஆமையைப் போல அடங்கி ஒடுங்கு!"

உடன்பிறப்பே, இட ஒதுக்கீடு எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவாகக் கத்தி தூக்குவோர், கம்பு சுழற்றுவோர், கலாம் விளைப்போர், காந்தி பிறந்த நாளில் அகிம்சா தத்துவத்திற்கே எரியூட்டுவோர் - இவரெல்லாம் யார்? நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் கொன்று குவியுங்கள்" என்ற வெறிப் பேச்சுக்குத் தலையசைத்து ஆயுதம் தூக்கி அராஜகம் நடத்துவோர் யார்? தாழ்ந்து, தாழ்ந்து, நாயினும் கீழாய்த் தாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான்! ஆமை போல் அடங்கி ஒடுங்கிக் கிடப்போர்தான்! ஆயிரமாயிரம்

ஆண்டுகளாய் அவர்களை அடிமைத் தொழும்பர்களாக்கி அவர்களின் தலைமீது ஏறிச் சவாரி செய்யும் எஜமானர்களுக்கு - இருக்கின்ற வாய்ப்புகள் அனைத்தையும் விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு, தொடர்ந்து பணி செய்து கிடப்பதே எம் கடன் என்று, அவர்கள் தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்களே என் செய்வது! அய்யகோ; அவர்கள் யார் என்று அவர்கள் உணராமல் இருக்கிறார்களே! உணர்த்தினாலும் உணர மறுக்கிறார்களே! சமூக முன்னேற்றம் சமூக அந்தஸ்து என்றால் அவை எந்தக் கடையில் விற்கும்? வாங்கி உண்டால் உயிர் போய் விடுமாமே; உண்மையா? என வினவுகிறார்களே!

ஆம் உடன்பிறப்பே; அந்த வட்டாரத்தில் ஒரு தியாகராயர் உதிக்காத காரணத்தால் - ஒரு பெரியார் பிறக்காத காரணத்தால் - ஒரு அண்ணா தோன்றாத காரணத்தால் - திராவிட இயக்கத்தின் உயிர்நாடி போன்ற இலட்சியம் பரவிடவும்; ஏன்; வேரூன்றவும் கூட வாய்ப்பில்லாது போயிற்று!

அதனால்தான் மண்டல் கமிஷன் பரிந்துரைகளைத் திரும்பப் பெறும் வரையில் உண்ணாவிரதம் இருப்பேன் என்று காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான வசந்த சாத்தே கடுங்குரல் எழுப்புகிறார் டெல்லியில் என்றாலும் - இங்கேயுள்ள காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் அடக்கி வாசிக்கிறார்கள்!

மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற்றத்துக்கு எதிராக ராஜீவ் காந்தி டெல்லியில் மணிக் கணக்கில் பேச முடிகிறது! இங்கு வந்தால் - வாயை மூடிக் கொள்ள வேண்டியிருக்கிறது!

1951ல் பெரியாரும் அண்ணாவும் தமிழகத்தில் கொந்தளிக்கும் கடல்களாயினர்! எதற்காக? 1921 முதல் நீதிக்கட்சியில் அறிமுகமாகி வளர்த்து வந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு நீதிமன்றங்கள் வேட்டு வைத்துவிட்ட காரணத்தால்!

சென்னை மாகாணத்தில் உருவாகியுள்ள நிலைகளைக் கவனித்து; இந்த அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வரப் படுகிறது எனப் பாராளுமன்றத்தில் பிரதமர் பண்டித நேரு அறிவிக்க வேண்டிய அளவுக்கு இங்கே திராவிட இயக்கம் களத்தில் இறங்கியிருந்தது என்பது வரலாறு! இந்த வரலாற்றை "வாய்ப்பந்தல்" வீரர்கள் (?) மறைத்துவிட முடியாது!

இந்த அடிப்படை உணர்வுகள் வளர்க்கப்படாத வறண்ட பகுதியான வடக்குத் திக்கில் வன்முறைகள் மூலம் - தமக்கு வரும் நல் வாழ்வைத் தடுத்துத் தமக்குத் தாமே அழியும் ஒரு கூட்டம்! அந்தோ; பரிதாபம்; தன்னைத்தானே உணராத சமுதாயம்!

அதனால்தானே உடன்பிறப்பே; அது பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக இருக்கிறது!

ஏற்கனவே மத்திய அரசில் தாழ்த்தப்பட்டவருக்கு இருபத்தி இரண்டரைச் சதவிகிதம் இட ஒதுக்கீடு இருந்தும் அது சரியாகச் செயல்படவில்லை! இப்போது அந்த இட ஒதுக்கீட்டையும் அகற்றிட வேண்டுமெனத் தீர்மானமே நிறைவேற்றியுள்ளனர்! யார் அவர்கள்? உயர்ஜாதி அதிகாரிகள்!

இந்த ஆதிக்க உணர்வை, அராஜகச் சேட்டையை அனுமதித்துக் கொண்டே போனால் - உணர்வு வறண்டு கிடக்கும் வடக்கின் பாதிப்பு; தெற்கு நோக்கியும் பரவக்கூடும்!

இல்லாததைப் பெற முடியாமல் வடக்கில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் இருளில் மூழ்கிடுவர்!

இங்கோ; இருப்பதையும் இழந்திடும் நிலையில் தெற்கில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் திகைத்து நிற்பர்!

எனவேதான்; ஏக்கக் குரலில் பாடிய பாவேந்தனின் பாட்டின்; இறுதிப் பகுதியை நீயும் நானும் மட்டுமல்ல - இங்குள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சாதாரண, சாமானிய, நடுத்தர மக்கள் ஆழமாக மனதில் பதிய வைத்துக் கொண்டு கிளர்ந்து எழுந் திடல் வேண்டும்!

"அழு, இளி, அஞ்சு, குனி, பிதற்று" என ஏசிய அந்த எழுச்சிக்கவிஞன்; இதோ எரிமலையாகிறான் -

**"மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று!**
**இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!**
**தோளை உயர்த்து! சுடர் முகம் தூக்கு!**
**மீசையை முறுக்கி மேலே ஏற்று!**
**விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!**
**நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!"**

இந்தக் கவிதை வரிகளை; புரட்சிக் கவிஞன் நமக்கிட்ட புதிய ஆணையாகக் கருதுவோம்!

நாசம்; நயமிகு மொழி பேசி வரும்! நரித் தந்திரம் புரிந்து வரும்! நாம்; எச்சரிக்கையாக இருப்போம்! இல்லையேல்; இந்தச் சமுதாயத்திற்காகப் பெரியாரும் அண்ணாவும் பட்டபாடுகள் பட்டுப் போய்விடும்! நாம் நல்கிடும் உழைப்பு பயனற்றதாகி விடும்!

நம் முன்னால் உள்ள கேள்வி இதுதான்!

**ஆமையைப் போல் அடங்கி**

**ஒடுங்குவதா?**

அல்லது

**தோளை உயர்த்திச் சுடர் முகம் தூக்குவதா?**

அன்புள்ள

**மு. கருணாநிதி**

# விளம்பரப் பலகைகளில் தமிழ்

பாரதிதாசன் கவிஞராக அறிமுகமாகும் போது இருந்த வேகமும் எழுச்சியும் ஒருவகை என்றாலும் அவர் முதிர்ச்சி பெற்று விளங்குகிற காலத்தில் அவரது எழுத்தில் இவை குறைந்து விடவில்லை. மாறாக அவரது வேகமும் எழுச்சியும் அப்படியே இருந்ததோடு அவரது எழுத்தில் ஒரு பக்குவமும் தமிழுக்கு ஆக்க வழியிலான முன்னேற்றத்தைக் கொண்டு வர வேண்டும் எனும் ஆர்வமும் பிற்காலத்தில் சிறப்பாக அமைந்தன என்பதை அவரது 'தமிழியக்கம்' நூலைக் கொண்டே உணர முடியும். 'பாதரட்சை' என்றும் 'சபாஷ், கரகோஷம்' என்றும் தொடக்க காலத்தில் சில சொற்களைக் கையாண்டிருந்தாலும் காலப் போக்கில் அவையெல்லாம் மாறி முற்றிலும் நல்ல தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி னார் பாவேந்தர். அதன் வெளிப்பாடு தான் தமிழியக்கம். இந்த நூலை ஊன்றிப் பயின்ற தலைவர் கலைஞர் இது ஒரு செயலாக்க வழிகாட்டி நூல் என்றே கண்டார். யார் யார் எந்தெந்தத்துறையில் எப்படி எப்படித் தமிழ் வளர்க்க வேண்டும் என்று ஆணையிடும் நூலாகவே அது அமைந்தது. 1989–91 இல் நாங்கள் ஆட்சியிலிருந்த போது விளம்பரப் பல கையில் நல்லதமிழ் முதலிடம் பெற வேண்டுமென்பதற்காகப் பல முயற்சிகளை மேற்கொண்டோம். தொழிலாளர் நல ஆணையாளர்கள் வாயிலாக அதைச் செயற்படுத்தத் துணிந்தோம். ஓரளவு அது செயலுக்கு வரத் தொடங்கியபோது பாவேந்தர் நூற்றாண்டு விழாவும் வந்து விட்டது. திருச்சியில் பாவேந்தர் சிலையைத் திறந்து வைத்தும், புதுவையில் பாவேந்தர் நூற்றாண்டு விழாவில் பங்கு கொண்டும் உரையாற்றிய கலைஞர் அவர்கள் பாவேந்தர் படைப்புகள் யாவும் நாட்டுடைமையாக்கப்படும் என்று அறிவித்தார். அதன் படியே 1990 திசம்பரில் அவை நாட்டுடைமையாக்கப்பட்டன.

அதற்கென 15.12.90இல் நடைபெற்ற விழாவில் தலைவர் கலைஞர் அடுத்த அறிவிப்பைச் செய்தார். பாவேந்தர் ஆசை விரைவில் நிறைவேற்றப்படும்; அதற்கான ஆணை பிறப் பிக்கப்படும் என்று அறிவித்தார். அந்த ஆசை தமிழக விளம்பரப் பலகைகளில் தமிழ் சிறப்பிடம் பெற வேண்டும் என்பது தான்.

'தமிழியக்கம்' நூலின் முன்னுரையில் "ஏன் ஒரு கூட்டம் தெருக்களிலே சென்று கடை விளம்பரங்களைத் தமிழில் மாற்றியமைக்க வேண்டும் என்று வற்புறுத்தக்கூடாது?" என்று குறிப்பிட்டவர்தான் பாவேந்தர்.

"மாணுயர்ந்த செந்தமிழால்
வரைக என அன்னவர்க்குச்
சொல்ல வேண்டும்"

என்று கட்டளையிட்டவர் பாவேந்தர். மேலும் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பிலும் என் ஆர்வத்தின் அடிப்படை யிலும் 500 ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்பட்டியலையும் அப்போது வெளியிட்டிருந்தோம். இதை யும் தலைவர் கலைஞர் கண்ணுற்றார். பாவேந்தர் நூற்றாண்டு விழாவின் போது அவரது தலையாய ஆசை நிறைவேற்றப்பட வேண்டும் என்று விரும்பினார். 15.12.90இல் தலைவரே இது குறித்துப் பேசியிருப்பதை மேலே கண்டோம். அதன் அடிப்படையில் கல்வி அமைச்சர் பேராசிரியர், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலர், தொழிலாளர் நலத்துறைச் செயலர், சட்டத் துறைச் செயலாளர் ஆகியோருடன் கலந்து பேசி முறையான ஆணை பிறப்பிக்கப்பட்டது. கோப்புகளை அணியப்படுத்தினோம். விரிவான சொற்பட்டியலுடன் கூடிய ஆணை உருவானது. 15.12.90இல் அறிவிப்பு, 45 நாட்களில்

கோப்பு உருவாகிவிட்டது. ஆம்! பாவேந்தர் கனவு நிறைவேற ஆணை பிறப்பிக்கப்பட்டது.

30.1.1991-இல் தலைவர் கலைஞர் அவர்களால் - அன்றைய முதலமைச்சரால் கோப்பில் கையொப்பமிடப்பட்டது.

ஆனால்...? அன்றுதான் எங்கள் ஆட்சி கலைக்கப்பட்டது. பொருந்தாத காரணங்களைவலிந்து திணித்து, ஆளுநர் ஒப்புதலோ, ஒப்பமோ இல்லாமல் காழ்ப்புக் கொண்ட ஒரு கூட்டத்தின் கூட்டு முயற்சியால் எஙகள் ஆட்சி கலைக்கப்பட்டது.

ஆட்சி கலைக்கப்பட்ட அன்று தலைவர் கலைஞர் கடைசியாகப் போட்ட கையொப்பம், பாவேந்தர் ஆசையை நிறைவேற்றும் பைந்தமிழ்ப் பணிக்கானது தான்.. இதுவே பெருமை.

அந்த ஆணை இன்று என்ன ஆனது? பாவேந்தரைப் பற்றி வாய்கிழியப் பேசும் நாவலர் அதைத் தேடி எடுத்துச் செயற்படுத்திவிடப் போகிறாரா? பாவேந்தர் படைப்புகள் கலைஞரால் நாட்டுடமையாக்கப்பட்டன என்ற வரலாற்றுண்மையையே சுட்டிக்காட்ட முடியாத நாவலரா பாவேந்தர் கனவுகளை நிறைவேற்ற முடியும்?

**"இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா"**

எனும் பாவேந்தர் பாடல் வரி நாவலருக்குத் தெரியும். தெரிந்து என்ன செய்வது? அவற்றை மேடையில் கூடச் சொல்ல முடியாதே!

ஆனால் தமிழக வரலாற்றில் அரசுப் பொறுப்பிலிருந்து பாவேந்தர்க்குப் பெருஞ் சிறப்புச் சேர்த்தவர் தலைவர் கலைஞர் தான் என்ற உண்மையை எவரும் மறைத்து விட முடியாது.. பதவியில் இல்லாத போது பாவேந்தரை நெஞ்சில்

நிறுத்தியது வெறும் மேடையின்பத்துக்காக அல்ல. அவரது மேன்மையான கொள்கைகள் - அதை வெளிப்படுத்தும் விறுவிறுப்பான வரிகள் - அந்தக் கொள்கைகள் தனக்கே யுண்டு என்பதால் பற்றிப் பிடித்துக்கொள்ளும் பக்குவம் - சொல்வதைச் செய்யும் திறன் - வாய்ப்புக் கிடைத்தால் உரியதைச் செய்வோம் என மெய்ப்பித்துக்காட்டும் ஆற்றல் ஆகிய இவை தலைவர் கலைஞருக்கு இருப்பதால்தான் பாவேந்தர் இவ்வளவு சிறப்புக்கும் ஆளானார்.

பாவேந்தரின் ஆசை ஆணை வடிவோடு நின்றுவிட்டதே என்று கவலைப்படவில்லை. அதை நிறைவேற்றும் எண்ணத்தில் பலரும் கிளர்ந்தெழத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் கலைஞரை உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் கலைஞருக்கும் பாவேந்தருக்கும் உள்ள தொடர்புகளை நன் றாகவே நினைவில் வைத்துள்ளார்கள். இந்த நிலையில் 'தன் பெண்டு - தன் பிள்ளை - தன் பதவி' என்று குறுகிப் போன நாவலரிடத்தில் உண்மையைச் சொல்லும் உரத்தை எதிர்பார்க்க முடியுமா? அதனால் தான் 'கலைஞரும் பாவேந்தரும்' எனும் தலைப்பில் உண்மைகளை உரக்கக் கூவினோம். இன்றும் கூவுகிறோம், பாவேந்தர் கனவுகளை நிறைவேற்றும் வரை ஓயமாட்டோம். இது உறுதி. என் தலைவன் மீது ஆணையாக ஒரு தமிழ்த் தொண்டன் தொடுக்கும் சூளுரை இது!

"காரிருளால் சூரியன்தான் மறைவ துண்டோ?
கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?"

"கெடல் எங்கே தமிழின் நலம்?
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!

கடல் போலும் எழுக! கடல்
முழக்கம் போல் கழறிடுக
தமிழ் வாழ் கென்று!"

இவை பாவேந்தரின்வரிகள்.

தமிழுக்குத் தொண்டு செய்தோர் சாவதில்லை

கலைஞர் புகழ் மறைப்பதற்கு எவருமில்லை!

இவை வரலாற்று வரிகள்!

## நூலாசிரியர் பற்றித்

# தலைவர் கலைஞர்

29.4.92 அன்று கலைஞர் திருமண மண்டபத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விழாக் கவியரங்கத் திற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்கிய போது குறிப்பிட்டது:

"இட்டமுடன் நடத்திடலாம்
சட்டசபை என்றில்லாமல்
மரபுகளைக் குழிதோண்டிப் புதைக்காமல்
மண்டியிட்டு முதல்வரது
கால்களில் விழாமல்
மாண்புமிகு வரும் போகும்
மானமிகு என்பதுதான்
என்றும் தங்கும் என
உறுதி கொண்டு
வாழ்ந்து வரும்
உற்ற நண்பர் தமிழ்க்குடிமகனார்க்கும்
வணக்கம்."